
கல்கி
KALKI
15-2-59
30
நயாபைசா



கம்பளித் துணிகள் புதிதா?
இல்லை—லக்ஸினால்
சலவை செய்தது!

போற்றிப் பாதுகாக்கவேண்டிய பொக்கிஷமான கம்பளித் துணிகளை மாறாத புதுமைப் பொலிவுடன் ஆண்டுதோறும் அணிவதே உங்களுக்குப் பெருமை. தூய, மென்மையான லக்ஸ் நுரையிடம் அவற்றை ஒப்படையுங்கள்; கம்பளித் துணிகளின் வடிவமோ வர்ணமோ பாதிக்கப்படாமல் லக்ஸ் வெகு நாசுக்காக சுத்தம் செய்யுமாதலால், எத்தனை தடவைகள் சலவை செய்தாலும் கம்பளி ஆடைகள் புத்தம் புதுக் கருக்காக நெடுங்காலம் விளங்கும். லக்ஸ் எப்பொழுதும் உங்கள் வசம் இருக்கட்டும்.

அழகான ஆடைகளுக்கு நெடுங்காலம்
புதுமைத் தோற்றம் அளித்துக் காப்பது லக்ஸ்

LX-146-50 TM

ஹிந்துஸ்தான் லீவர் லிமிடெட் தயாரிப்பு

கல்கி

பொருளடக்கம்

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.

தி ஆடிட் பீரோ ஆப் சர்குலேஷன்ஸ் லிமிடெட்

(மதராஸ் பிரதேசம்)

அளிக்கும்

"இந்திய பத்திரிகைகளின் வரலாறு"

ABC கண்காட்சி

சென்னை, மரீனா ரோடிலுள்ள
சர்வகலாசாலை
பரீட்சை மண்டபத்தில்

1959 பிப்ரவரி **17**-ந் தேதி முதல்
28-ந் தேதி வரை நடைபெறும்.

ABC.I EP



மலர் 18 | இதழ் 29

தமிழ்த்திரு நாடு தன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா—பாரதியார்

விளம்பி௵ மாசி௴ 3

நிலப்பிரச்னையும் நேருஜியும்

நிலப் பிரச்னை சம்பந்தமாக எழுந்துள்ள ஆட்சேபணைகளுக்குப் பதில் சொல்லும் முறையில் பிரதமர் நேருஜி பேசி யிருக்கிறார். ஆனால் அடிப்படை விஷயத்தில் அவர் எல்லோரையும் விட அதிகக் குழப்பத்தில் ஆழ்ந்திருக்கிறார் என்பதைக் காண்பித்துக் கொண்டு விட்டார் என்று சொல்லாமல் இருக்க முடியவில்லை.

நேருஜி, இந்த நாட்டில் நூற்றுக்குத் தொண்ணூறு சதவிகிதம் பேர் சிறுபண்ணை யாளர்கள்; அவர்களால் உற்பத்தியைப் பெருக்க முடியவில்லை; அதனால் கோ-ஆபரேடிவ் சங்கங்கள் ஏற்படுத்தி அவர்களுக்கு நல்ல விதை, உரம், கலப்பை முதலிய கருவிகள், நல்ல உழவு மாடுகள், விளைவான தான்யத்தை விற்க வசதிகள் யாவும் செய்து தரப் போகிறோம். ஆகவே, நாங்கள் சொல்லும் கூட்டுறவுப் பண்ணை விவசாயம், உதவி யளிக்கும் கூட்டுறவுப் பண்ணை (Service Co-operative) ஆகத்தான் இருக்குமே தவிர, பலாத்கார ஆட்சி நடைபெறும் நாடுகளில் நடப்பது போல் பலாத்காரக் கூட்டுறவு விவசாயம் நடைபெறாது என்கிறார்.


சிறு பண்ணைகளுக்கு இத்தகைய உதவி யளிப்பதானால் யாரும் ஆட்சேபிக்க மாட்டார்கள்; ஆட்சேபிக்கவும் இல்லை. போதிய மூலதனம் போட முடியாத, சிறு பண்ணைகள் பலவற்றைச் சேர்த்துப் பெரும் பண்ணைகளாக்கி விவசாயம் நடத்த வேண்டும் என்றே சொல்லி வந்திருக்கிறோம். ஆகவே, விவசாயத் துறையில் விதை, உரம் முதலியவை உதவ இத்தகைய கூட்டுறவு முறையைப் பரீட்சிக்க யாருமே விரும்புவார்கள். ஏனெனில் இந்தக் கூட்டுறவு முறை தோல்வியானால், சமுதாய அமைப்பில் அதிகச் சீர்குலைவு கிடையாது. பழையபடி சிறு மிராசுதார்களை, 'உங்கள் பண்ணையை நீங்களே விவசாயம் செய்து கொள்ளுங்கள்' என்று சொல்லி விடலாம். நஷ்டம் சர்க்காருக்குத் தான் இருக்கும்.

ஆனால் நாக்பூர் தீர்மானத்திலும், அதன்மீது பேசியபோதும், பெரிய பண்ணைகளுக்கு உச்சவரம்பு கட்டி, உபரி நிலத்துக்குக் கூட்டுறவு விவசாயம் கொண்டு வரப் போவதாகப் பிரதம மந்திரி தெரிவித்தார். உச்சவரம்பு கட்டிய பிறகு சர்க்கார் பெறும் உபரி நிலத்தைச் சிறிய விவசாயிகளுக்குக் கொடுக்கப் போவதில்லை என்றும் கூறப்பட்டது. இந்த விவசாயம் சரியாக நடக்கப் போவதில்லை என்று சொல்லி வந்தோம். இப்போது நடைபெறும் விவசாயத்தை விட, அதாவது பெரிய நிலச்சுவான் தார்களின் மேற்பார்வையில் நடக்கும் விவசாயத்தைக் காட்டிலும் கிராமப் பஞ்சாயத்து மேற்பார்வையோ, கூட்டுறவு அதிகாரியின் மேற்பார்வையோ, உயர்தரமாக நடக்கப் போவதில்லை என்பது நமது அபிப்பிராயம். உழவர்கள் இதுவரையில் தனிச் சொந்தக் காரர்களுக்கு உழுது வந்ததற்குப் பதிலாகக் கூட்டுறவுப் பண்ணையில் கூலிக்கு உழுது பயிர் செய்வார்கள். இந்தக் கூட்டுறவுப் பண்ணையில் வேலை செய்யும் உழவனுக்கு வேலையில் என்ன உற்சாகம் இருக்க முடியும்? விளைவு எப்படிப் பெருகும்?

அடுத்தபடி விவசாயப் பெருக்கத்துக்காகப் பலாத்காரக் கூட்டுறவுதான் ஏற்பட வேண்டியதாகும்.

பெங்களூரிலும், தில்லியிலும் ஆட்சேபணைகளுக்குச் சமாதானம் கூறும் வகையில் பேசிய நேருஜி நில உச்சவரம்பு கட்டி எடுத்துக் கொள்ளும் உபரி நிலத்தைப்பற்றி ஒரு வார்த்தை கூடச் சொல்லவில்லை. ஆகவே, நாக்பூர் தீர்மானத்தில் முக்கியமான அம்சம் எதுவுண்டோ அதை விட்டுவிட்டு, மற்ற விஷயத்தைப் பற்றிப் பேசுவது, அதிலும்

......பொன் செய்யும் மருந்து!



தாற்காலிக சம்பள உயர்வாக 5 ரூபாய் சென்னை சர்க்கார் அளித்ததை, என். ஜி. ஓ. சங்கக் காரியதரிசி பரிகசித்தார். அதை முதன் மந்திரி திரு காமராஜ் கண்டித்தார்.

எல்லாரும் ஒப்புக்கொள்ளக் கூடிய விஷயத்தைப் பற்றிப் பேசி விடுவதுவே ஆட்சேபணைக்குச் சமாதானம் கூறியதாகாது. பின் நேருஜி ஏன் அப்படிப் பேசினார்? ஏனெனில் அவர் உள்ளத்திலேயே நிலப் பிரச்னையைப் பற்றித் தெளிவான கருத்தில்லை என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது.

இன்னொரு விஷயத்தைப் பற்றியும் இங்கு குறிப்பிட வேண்டும். நாக்பூர் தீர்மானப்படி, உச்ச வரம்பு கட்டிய பிறகு உபரி நிலத்தைச் சர்க்கார் தக்க ஈடு கொடுத்து எடுத்துக் கொள்ளவேண்டும். நமது அரசியல் நிர்ணயச் சட்டப்படி, சர்க்கார் எடுத்துக் கொள்ளும் எந்தப் பொருளுக்கும் தக்க ஈடு கொடுத்து எடுத்துக்கொள்ள வேண்டும். ஆனால் நமது சர்க்கார் நிலம் என்றால் ஒருவிதமாகவும், மற்றத் தொழில்கள் என்றால் வேறு விதமாகவும் பட்சபாதமாகவே நடந்து கொண்டு வந்திருக்கிறார்கள்.

சர்க்கார் இன்ஷூரன்ஸ் கம்பெனிகளை எடுத்துக் கொண்டார்கள்; 'இம்பீரியல் பாங்கை' எடுத்துக் கொண்டார்கள்; இவ்விரண்டையும் எடுத்துக் கொண்ட போது அந்தத் தேதிகளில் அந்த ஸ்தாபனங்களின் 'பங்கு' என்ன மதிப்பிருந்ததோ அதே மதிப்பை ஈடாகக் கொடுத்து எடுத்துக் கொண்டார்கள். ஆனால் நில விஷயத்தில் சர்க்கார் இக்கொள்கையைக் கடைப்பிடிக்கத் தயாராயில்லை. தாங்களாகத் திட்டம் செய்த சூத்திரத்தின்படி அதுவே தக்க ஈடு என்று சட்டம் செய்து, நிலத்தின் மதிப்புக்குச் சம்பந்தப்படாத சிறிய ஒரு தொகையைக் கொடுப்பதாகச் சொல்லி, அதையும் சிறிது சிறிதாகக் கொடுக்க விரும்புகிறார்கள்

இந்தச் சந்தர்ப்பத்தில் நெய்வேலி பகுதியில் சர்க்கார் நில ஆர்ஜிதம் செய்த முறையைக் கண்டித்து, சென்னை நீதிபதிகள் சமீபத்தில் அளித்த தீர்ப்பு கவனிக்கத் தக்கது.

இப்படிச் சர்க்கார் நியாயமற்ற முறைகளில் நடக்கவேண்டியிருக்கும் என்பதைக் கருதியே, நாக்பூர் தீர்மானத்துக்கு எதிராக நிலவிஷயத்தில் அனுபவம்பெற்றவர்கள் கூறுகிறார்கள். நேருஜியோ மனத்தில் ஒன்று நினைத்துக் கொண்டு, காரியத்தில் மற்றொன்றைச் செய்யத் துணிகிறார். இந்த அபாயத்திலிருந்து தேசத்தையும் அவரையும் காப்பாற்ற வேண்டும்.

நீதிபதிகளின் தீர்ப்பு

நமது இந்திய அரசியல் நிர்ணயச் சட்டத்தின் 31(2)வது விதி சர்க்கார் பொது மக்களிடமிருந்து ஒரு பொருளை எடுத்துக் கொள்ள வேண்டியிருந்தால் அதற்குத் தக்க ஈட்டுத் தொகை செலுத்தியாகவேண்டும் என்று கூறுகிறது. நெய்வேலிப் பிரதேசத்தில் பழுப்பு நிலக்கரி எடுக்க வேண்டிய வேலைகள் தொடங்கினால் அப்பகுதியில் நிலத்தை ஆர்ஜிதம் செய்யவேண்டியிருக்கும் என்ற நிலைமை ஏற்பட்டது. இது 1948ம் ஆண்டு. அதையொட்டி அக்டோபர் 1948ம் ஆண்டில் சென்னை சர்க்கார் ஒரு பத்திரிகைக் குறிப்பை வெளியிட்டார்கள். அதன்படி, பழுப்பு நிலக்கரியுள்ள பகுதிகளை ஆர்ஜிதம் செய்யச் சர்க்கார் சட்டம் இயற்றப் போகிறார்கள் என்று அறிவித்திருந்தது. ஆனால் சட்டம் 1953ல்தான் செய்யப்பட்டது. அச்சட்டப்படி, அப்பகுதியில் நில ஆர்ஜிதம் செய்தால், அதற்கு மதிப்பு ஏப்ரல் 28, 1947ல் என்ன இருந்ததோ அதுதான் தரப்படும் என்றார்கள்.

இப்பொழுது அப்பகுதியில் நிலம் வாங்கி வீடு வாசல் கட்டிக் கொண்டவர்களுக்குச் சர்க்கார், 'சட்டப்படி நிலத்துக்கு மட்டும்தான் ஈடு செலுத்துவோம், கட்டடத்துக்கு நஷ்டஈடு தரமாட்டோம்' என்கிறார்கள். இதைப் பற்றி சென்னை உயர் நீதி மன்றத்தில் வழக்குத்தொடுத்தார்கள்.

அதற்குச் சென்னை நீதிபதிகள் பின் வருமாறு தீர்ப்பளித்திருக்கிறார்கள்.

''நிலம் எப்பொழுது சர்க்கார் வாங்குவார்கள், எந்தப் பகுதியை எடுத்துக் கொள்வார்கள் என்பது யாருக்கும் தெரியாது. வழக்குத் தொடுத்த நபர்கள் வீடுகள் கட்டிக்கொண்டபோது, சட்டபூர்வமாக எத்தகைய ஆட்சேபணையும் செய்யப்படவில்லை. ஆகவே, இப்பொழுது அவர்களிடமிருந்து அக் கட்டடங்களை எடுத்துக் கொள்ளுவதானால் அவற்றுக்கு இப்போதுள்ள மதிப்புப்படி சர்க்கார், அரசியல் நிர்ணயச் சட்டப்படி தக்க ஈடு அளித்தேயாக வேண்டும் என்று வற்புறுத்த நியாயம் உண்டு. இப்படிச் சர்க்கார் அவர்கள் சொத்துக்களை எடுத்துக் கொண்டு, நிலத்துக்கு மட்டும்தான் 1948-ம் வருஷ மதிப்பின்படி நஷ்ட ஈடு தருவோமே தவிர, கட்டடத்துக்கு ஈடு தொகை தரவியலாது என்று கூறி, பறிமுதல் செய்யும் அளவுக்கு அவர்கள் மகத்தான தவறு செய்துவிடவில்லை!''

இந் நிலையில் சர்க்கார் நில உடைமைக்கு உச்சவரம்பு கட்டி, உபரி நிலத்தை ஆர்ஜிதம் செய்தால் எப்படி நடந்து கொள்வார்கள் என்று சொல்லத் தேவையில்லை. பிரதமர் நேரு இத்தகைய அட்டூழியங்களுக்கு உடந்தையாக இருக்க விரும்புவாரா? இதுதான் கேள்வி!

நன்றி செலுத்துவோமாக

காமகோடி சங்கராச்சார்ய சுவாமிகள் சென்னையை விட்டுச் செல்லப் போகிறார்கள். இவ்வளவு நாட்கள் இந்தக் கலி நிறைந்த நகரில் ஒரு தர்மஸ்ரீயாக எழுந்தருளியிருந்தார்கள். அவர்கள் போன பிறகு இந்த நகரத்தில் ஆஸ்திகர்களுக்கும் நாஸ்திகர்கள் என்று சொல்லிக் கொள்பவர்களுக்குங்கூட வெறிச்சென்றிருக்கும், சந்தேகமில்லை. தர்மாத்மாக்களின் ஆன்ம சக்தி இதுதான்.

இத்தனை நாட்கள் ஒரு வரண்ட பூமியில் மழை பெய்தது போல் மக்களுக்குத் தர்மபோதனை செய்து வந்தது வீண் போகாது. ஓரளவாவது பயிர் உண்டாகும். நம்முடைய மூதாதைகள் தங்கள் வம்சத்தின் போக்கைக் கண்டு இரங்கி மறுபடியும் அவதரித்து வந்து நல்லுபதேசமும் ஆசீர்வாதமும் செய்ததுபோல் ஸ்ரீ காமகோடி சுவாமிகள் நமக்கு இரங்கி இவ்வளவு நாட்கள் இங்கே இருந்து வந்து உபதேசம் செய்தார்கள். முக்கியமாக அன்பே உருவமான அவர்களுடைய இதயம் மக்கள் உள்ளங்களைக் கவர்ந்தது. அன்பும் சத்தியமும் தருமமும் எந்த இரும்பையும் நெகிழச் செய்யும். நம் உள்ளம் கரைந்த நன்றியை ஆசார்ய சுவாமிகளுக்குச் செலுத்துவோமாக. தர்மம் அழிந்தால் குடும்பம் கெடும், ஊரும் கெடும், தேசமும் நாசமாகும். இந்த உண்மையை இப்போதே ஓரளவு அனுபவத்தில் பார்த்து வருகிறோம். பெரியோர்களின் எச்சரிக்கையைக் கவனிப்போமாக. பல்லாயிர வருஷங்களின் அனுபவந்தான் வயிரம் ஏறி தர்மம் ஆகிறது.

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரி

பிடிக்காத கட்சியே வேண்டும்!

ராஜாஜி நீண்ட நாட்களாக எதிர்க் கட்சி வேண்டும் என்று சொல்லி வருகிறார். முற்போக்குக் கட்சியென்றும், இடதுசாரிக் கட்சி என்றும் தொழிற்படும் அத்தனை கட்சிகளின் கொள்கைகளையும் திட்டங்களையும் காங்கிரஸ் ஏற்றுக் கொண்டு விடுவதால் காங்கிரஸுக்கு எதிராக ஒரு 'கன்ஸர்வேடிவ்' கட்சி வேண்டும் என்று வற்புறுத்தி வந்தார்.

இதைப்பற்றி நிருபர்கள் பிரதமர் நேருஜியிடம் கேட்டதற்குக் 'கன்ஸர்வேடிவ் கட்சி' என்றாலே எனக்குப் பிடிக்கவில்லை என்று சொல்லிவிட்டார். ஆட்சிப் பிரதமருக்குப் பிடிக்காத கட்சி தானே எதிர்க் கட்சியாக இருக்க முடியும்? அவருக்குப் பிடிக்கவில்லை என்பதனாலேயே அத்தகைய கட்சி மிக மிக அவசியம் என்பதாகிவிட்டது. அப்பொழுது தான் விவாதங்கள் தீவிரமாக நடைபெற்று, நாட்டு நடப்பு ஒழுங்கான முறையில் செல்லும்! எதிர்க்கட்சியும் பிரதமருக்குப் பிடித்த கட்சியாகிவிட்டால் எப்படி அது எதிர்க்கட்சியாகும்? பிரிட்டனில் தொழிற் கட்சியாளருக்குக் கன்ஸர்வேடிவ் கட்சி பிடிப்பதில்லை; அப்படியே கன்ஸர்வேடிவ் கட்சியாருக்குத் தொழிற் கட்சி பிடிப்பதில்லை. அதனாலேயே அங்கு நல்ல ஜனநாயகம் நடைபெறுகிறது.

கம்பன் நினைவுக் கூடம்

கம்பர் பிறந்த தேரழுந்தூரில் அவருக்கு ஒரு நினைவுக் கூடம் ஏற்படுத்த வேண்டும் என்று பெரு முயற்சியில் ஈடுபட்டுள்ள மர்ரே கம்பெனி திரு ராஜம், சென்ற வாரம் ஒரு அரிய கூட்டம் நடத்தினார். அந்தக் கூட்டத்தில் ஸர் ஸி. பி. ராமசாமி அய்யர் பேசிய பேச்சு ரஸிகமணி டி. கே. ஸி. யின் கருத்துக்களை அப்படியே பிரதிபலித்தது. கம்பரையும் ரஸிகமணியையும் அறிந்தவர்களுக்கு இனியதோர் வியப்பாக இருந்தது.

"கம்பன் வடமொழிக் கடலை நிரம்பப் பருகியவன். அத்துடன் அவன் தமிழ் மரபுணர்ந்த பெருங் கவிஞன். ஆகவே, வால்மீகியின் ராமாயணத்தை எழுதப் புகுந்த அவன், ஒரு புது ராமாயணத்தைச் சிருஷ்டித்து விட்டான். வால்மீகியிலிருந்து மாறுபட்டு அவன் சில இடங்களில் பாடியிருந்தாலும், ராமாயணத்தின் அடிப்படைத் தத்துவத்தை அவன் விடாமலே இருந்திருக்கிறான். ஏன், அவ்விஷயத்தில் அவன் வால்மீகியையும் மிஞ்சியிருக்கிறான். வால்மீகி எப்பொழுதாகிலும் ராமனை அவதாரபுருஷன் என்று எழுதுவார். கம்பனோ அதை வற்புறுத்துவதிலே பெரு மகிழ்ச்சி அடைந்தான்."

இங்கிலாந்தில், ஷேக்ஸ்பியர் பிறந்த 'ஸ்ட்ராட்போர்டு ஆன் ஆவான்' என்ற இடத்தில் நினைவுக்கூடம் இருப்பதுபோல், தமிழ் நாட்டில் கவிச்சக்கரவர்த்தி கம்பர் பிறந்த தேரழுந்தூரில் நினைவுக்கூடம் எழுப்பும் முயற்சியில் சாந்தி சாதனத்தார் ஈடுபட்டிருக்கிறார்கள். முதலில் தேரழுந்தூரைச் சேர்ந்த ஒரு குடும்பத்தினர் ஆறு ஏக்கர் நன்செய் நிலத்தையும் எண்பது சென்ட் தோப்பையும் கம்பன் ஞாபகார்த்தத்துக்குச் சாஸனம் செய்திருக்கிறார்கள் என்பதை அறிந்து கம்பன் பக்தர்கள் எல்லோரும் மகிழ்வார்கள்; நன்றி செலுத்துவார்கள். மேற்கொண்டு கம்பனுக்கு நினைவுக்கூடம் அமைக்க ஏழு அம்சத் திட்டம் ஒன்று வகுத்திருக்கிறார்கள். அது விரைவில் வெற்றிகரமாக முடிவடைவதற்குத் தமிழ் கூறும் நல்லுலகப் பெருமக்கள் உதவ வேண்டும் என்று வேண்டுகிறோம்.


காந்திஜியும் லிங்கனும்

இருவருக்கும் தோற்றத்தில் ஒற்றுமை இல்லை. ஒருவர் நெட்டை மனிதர். மற்றவர் குட்டை. அதிகாரத்திலும் பதவியிலும் ஒற்றுமையில்லை. ஒருவர் ஜனாதிபதி. அதிகாரத்தின் வலிமையினால் செயலாற்ற வல்லவர். மற்றவர் சாதாரண மனிதர். சட்டத்தை எதிர்த்து நின்றவர்.

ஆனால் இருவரும் தத்தம் நாட்டு மக்கள் இருதய பீடத்தில் ஆட்சி செலுத்தியவர்கள்; இரக்கமும், பண்பும், மனிதத் தன்மையும் நிரம்பியவர்கள். மனித உரிமையிலும் சமத்துவத்திலும் தளராத நாட்டம் கொண்டவர்கள். தாழ்த்தப்பட்டவர்களில், ஒடுக்கப்பட்டவர்கள் என்பவர்களிடம் பிரத்தியேக அன்பு கொண்டவர்கள். இருவரும் நாட்டைக் காத்தவர்கள். ஒருவர் நாடு பிளவு படாமல் காத்தார். மற்றொருவர் நாட்டுக்குச் சுதந்திரத்தையே வாங்கித் தந்தவர். ஒருவர் மனிதன் மனிதனையே அடிமையாகக் கொள்ளும் கொடிய பழக்கத்தைச் சட்ட மூலம் ஒழித்தார். மற்றவர் தீண்டாமை என்னும் கொடிய பழக்கத்தை அன்பின் மூலமே தகர்த்தெறிந்தார்.

இப்படி மானிட வர்க்கத்தில் இரண்டு இலகங்களாக வாழ்ந்தவர்களின் குணாதிசயங்களைப் பற்றி அமெரிக்கத் தூதர் திரு எல்ஸ்வொர்த் பங்கர், லிங்கன் பிறந்த 150-வது வருஷ விழாவின் போது உருக்கமாக எடுத்துக் கூறி, ஒருவருக்கு அஞ்சலி செய்ய நேர்ந்த சந்தர்ப்பத்தை இருவருக்குமாகச் சேர்த்துச் செய்து ஏற்கனவே உள்ள இந்திய-அமெரிக்க நட்பை மேலும் பலப்படுத்தினார். இவ்விரண்டு அமரர்களுக்கு நாமும் மனமுவந்து அஞ்சலி செலுத்துகிறோம்.

அருள் வாக்கு



நான்கு வேதங்களை வகுத்துத் தொகுத்தார் வியாசமுனிவர். நான்கு சீடர்களிடம் இவற்றைத் தந்து உலகுக்குப் பிரசாரம் செய்யும்படி அவர்களைப் பணித்தார். இதைத் தவிர பதினெட்டு புராணங்களையும் உப புராணங்களையும் செய்து அவற்றையெல்லாம் ஒருவரிடம் கொடுத்துப் பிரசாரம் செய்யும்படி அருளினார். இவர்தான் நான்காவது வருணத்தைச் சேர்ந்தவரான சூதர் என அழைக்கப்பட்டவர். இவர் மூலமாகத்தான் உலகுக்குப் புராணங்கள் பிரசாரமடைந்து வந்திருக்கின்றன.

இப்புராணங்கள் எல்லா வர்ணத்தார்களுக்கும், ஆண்களுக்கும் பெண்களுக்கும், பொதுவான தர்மங்களைப் பற்றியும், அவரவர்களுக் குண்டான தனித்தனி தர்மங்களைப் பற்றியும் விரிவாகச் சொல்லுகின்றன. இவையெல்லாம் நம்முடைய பண்டைக்கால சாஸ்திரங்கள். இவற்றைக் கேட்டுக் கேட்டு அறிவை வளர்த்துக் கொண்டவர்கள் நம் முன்னோர்கள். அவர்கள் வேதத்திலும், சாஸ்திரத்திலும், கணிதத்திலும், ஜோதிஷத்திலும் பெரும் அறிவாளிகள். அவர்கள் ஆராய்ச்சியும் அறிவும் மனத்திலேயேதான். கையெழுத்துப் போட வேண்டுமென்றால் அவர்களுக்குத் தெரியாது. புராண வாயிலாகவும் பரம்பரையாகவும் கேட்டுக் கேட்டுப் பொது அறிவையும் தொழில் அறிவையும் வளர்த்துக் கொண்டார்கள்.

அந்தப் பழக்கம் இப்போது குறைந்துவிட்டது. காலத்துக்கு ஏற்ப அந்த ஸ்தானத்தில் பத்திரிகைகள் வந்து விட்டன. இவற்றைப் படித்துத் தான் ஜனங்கள் தங்கள் அறிவை வளர்க்க வேண்டியிருக்கிறது. எனவே, புராணங்கள் இடத்தில் பத்திரிகைகள் வந்துவிட்டன. அவற்றைப் பிரவசனம் செய்த சூதர் ஸ்தானத்தில் பத்திரிகையாளர்களும் எழுத்தாளர்களும் வந்து விட்டனர். அவர்கள் தாம் இந்தக் காலத்திய சூத புராணிகர்கள்.

அறிவைப் பரப்புவதில் அவர்களுடைய பொறுப்பு அதிகம். புதுப்புது விஷயங்களை அடிக்கடி மக்களுக்கு ஏற்றவகையில் சொல்ல வேண்டும். இதற்கு அவர்கள் பலப்பல விஷயங்களைத் தெரிந்து கொண்டால்தானே முடியும்? அவர்கள் முதலில் பல நூல்களைப் படிப்பது என்ற பழக்கம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அப்போதுதான் அவர்கள் அறிவு பெருகும். புதிதாகக் கற்ற விஷயத்தை மற்றவர்களுக்குச் சொல்லத் தோன்றும். இதில் அவர்கள் காகங்களைப் போல. உணவு எங்கேயாவது இடைத்துவிட்டால், காகம் தனது இனத்தவர்களைக் கூவி அழைத்து அவற்றுடன் சேர்ந்து உண்ணும். பத்திரிகையாளர்களும் அதேபோல. புதிய கருத்தோ, விஷயமோ தெரிந்து கொண்டால் அதை மற்றவர்களுக்குச் சொல்லித் தான் சந்தோஷப்படுவதுடன் படிப்பவர்களையும் சந்தோஷமடையச் செய்கிறார்கள்.

மக்களுக்குச் சந்தோஷமூட்ட சர்க்கரை போன்ற இனிப்புப் பொருள் கொஞ்சம் சேர்த்துக் கொடுக்கலாம். எவ்வளவு சர்க்கரை சேர்ப்பது என்பதைப் பத்திரிகையாளர்கள் நிர்ணயித்துக் கொள்ளலாம். ஆனால் வெறும் இனிப்பாகவே இருந்துவிடக் கூடாது. அதனால் சொல்பவர்களுக்கும் பலனில்லை; படிப்பவர்களுக்கும் பலனில்லை. இன்றைக்கு எழுதுவதில் நேற்று எழுதியதைக் காட்டிலும் ஒரு புதிய விஷயமாவது இருக்க வேண்டுமென்பதை லட்சியமாகவே கொண்டு பத்திரிகையாளர்கள் நடந்து கொண்டால் அறிவு வளரும்.


படிப்பவர்களும் கேவலம் இனிப்புள்ள விஷயங்கள் மட்டுமே பத்திரிகைகளில் எதிர்பார்ப்பது என்ற பழக்கத்தை விட்டுப் புது விஷயம் கோரும் ஆர்வம் காட்ட வேண்டும். அப்போதுதான் எழுதுகிறவர்களுக்கும் அப்படிப்பட்ட விஷயங்களை அதிகமாக எழுத வேண்டும் என்ற தூண்டுதல் ஏற்படும்.

ஸ்ரீ சங்கராச்சாரியார் – காஞ்சி காமகோடி பீடம்


மூன்று பத்ம பூஷணங்கள்

இந்த வருஷக் குடியரசு தினப் பட்டமளிப்பு ஜாபிதாவில் தமிழகத்துத் தவப் புதல்வர் மூவருக்குப் பதமபூஷண் கௌரவம் வழங்கப்பட்டிருப்பது கண்டு தமிழ்நாடே மகிழ்ச்சியடைகிறது.

ராவ்பகதூர் திரு பி. சம்பந்த முதலியாரைத் தெரியாத தமிழன் இல்லையென்று நிச்சயமாகச் சொல்லலாம். தமிழ் நாடகம் என்று சொன்னவுடன் ஒருவர் பெயர்தான் நமது கவனத்துக்கு முதலில் வரும். அவர்தான் திரு பி. சம்பந்த முதலியார். நீதிபதியாகப் பதவி வகித்துப் பல காலம் சிறப்புடன் பணியாற்றியவர். நாடகத் துறையில் அபார அறிவும் ஆற்றலும் கொண்டு சுமார் 85 நாடகங்கள் வரை தயாரித்துத் தமிழுக்கு அளித்து, நாடகக் கலைக்கே புத்துயிரளித்து வளர்த்து, தமிழ்த் தொண்டாற்றுவது சாதாரணப் பணியன்று. இது ஒரு மகத்தான சேவை.


திரு பி. சம்பந்த முதலியார்

மத்திய அரசாங்கம் இப்பெரியாருடைய சேவையைப் பாராட்டுவதற்கு முன்னமேயே சென்னை ராஜ்ய சங்கீத நாடக அகாடமியும் சென்னைக் கார்ப்பரேஷனும் தமிழ் நாட்டு நாடகப் பேராசிரியர் திரு சம்பந்த முதலியாரைக் கௌரவித்திருக்கின்றன. தாங்கள் ஐந்து வருஷ காலமாகச் சங்கீத நாடக அகாடமி மூலம் அரசாங்க ஆதரவின் கீழ் நாடகக் கலைக்குச் செய்யும் சேவையைச் சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு முன்னமே தனிப்பட்ட முறையில் செய்து அதில் வெற்றியும் கண்ட திரு சம்பந்த முதலியாரை அவருடைய 85-வது வயதிலாவது கௌரவிக்க வேண்டுமென்று மத்திய அரசாங்கத்துக்குத் தோன்றியதைக் கண்டு மிகவும் பெருமையடைகிறோம்.


திரு டி. வாசுதேவாச்சாரியார்

பத்மபூஷண் விருது பெற்ற மற்றொருவர் சாஸ்திரீய சங்கீதத் துறையில் இவரைப் போலவே இணையற்ற தொண்டாற்றிவரும் மைசூர் டி. வாசுதேவாச்சாரியார். தொண்ணூற்றைந்து வயது நிரம்பிய ஸ்ரீ வாசுதேவாச்சாரியார் தற்கால சங்கீத சாகித்ய கர்த்தாக்களில் பீஷ்மாச்சாரியார். இப்பெரியார் மத்திம கால தானங்களில் பிரத்தியேகத் திறமை பெற்று இசைக் கலையில் நுண்ணறிவுடன் பல ஆராய்ச்சிகள் நடத்தியிருக்கிறார். அவர் இயற்றியுள்ள கீர்த்தனைகள் பக்திச் சுவைக்கும் இலக்கிய உயர்வுக்கும் இசை நயத்துக்கும் பெயர் போனவை. பல சங்கீதக் கச்சேரிகளில் அவருடைய கீர்த்தனைகள் சாதாரணமாகவே பாடப்பட்டுப் பிரபலமடைந்து வருகின்றன. சங்கீத சாஸ்திர ரத்ன, சங்கீதசாஸ்திரவிசாரத, சங்கீத கலாநிதி என்ற விருதுகளை மைசூர் மகாராஜாக்களிடமிருந்தும் சென்னை சங்கீத வித்வத் சபையிடமிருந்தும் பெற்றுள்ள திரு வாஸுதேவாச்சாரியார் கலா க்ஷேத்திரத்தில் குருஸ்தானத்தில் வீற்றிருந்து அந்த ஸ்தாபனத்தை ஒரு 'க்ஷேத்ரமாக'வே ஆக்கியிருக்கிறார். அவருக்குப் பத்மபூஷண் பட்டமளித்ததைக் குறித்து மகிழ்கிறோம்.

வேறு ஒரு துறையில் சிறப்பும் புகழும் எய்தியவர் பேராசிரியர் திரு டி. ஆர். வெங்கடாசல மூர்த்தி. வாரணாசி என்னும் காசியில் அரசாங்க சம்ஸ்கிருதக் கல்லூரியில் இந்திய நாகரிகம், பண்பாடு என்பன பற்றி விரிவான ஆராய்ச்சிகள் நடத்தும் பிரிவின் பேராசிரியர். வேதாந்த வியாகரண சாஸ்திரங்களில் புலமை வாய்ந்த இப்பண்டிதர் ஆக்ஸ்போர்ட் சர்வகலாசாலையில் கிழக்கத்திய நாடுகளின் கலாசார சம்பந்தமாகப் பணியாற்றியதுடன் இலங்கை சர்வகலாசாலையிலும் தத்துவப் பேராசிரியராகப் பணியாற்றியுள்ளார். எனவே, நமது நாட்டில் கௌரவங்கள் கிட்டுவதற்கு முன் மேல்நாடுகளில் அறிமுகமானவர். நமது அரசாங்கம் டாக்டர் டி. ஆர். வி. மூர்த்திக்கும் 'பத்மபூஷண்' கௌரவம் அளித்திருக்கிறது. இக்கௌரவம் கிடைக்கப் பெற்ற டாக்டர் மூர்த்தியையும் பாராட்டுகிறோம்.



69

யான்எனது என்னும்
 செருக்குஅறுப்பான் வானோர்க்கு
உயர்ந்த உலகம்
 புகும்.

'நான்' என்றும் 'என்னுடையது' என்றும் மனிதன் மயங்கி நிற்கும் நிலையை அறுத்துத் தள்ள வேண்டும்.

வடமொழியில் 'அகங்காரம்' என்பது 'யான் என்னும் செருக்கு'. 'மமகாரம்' என்பது 'எனது என்னும் செருக்கு.'

இந்த இரண்டும் அறியாமை-மயக்கம். 'செருக்கு' என்கிற சொல்லுக்கு மயக்கம் என்பது பொருள். அந்த மயக்கத்தில் ஓரளவு கர்வமும் கலந்து நிற்கிறது.

தேவர்களின் உலகத்தைக் காட்டிலும் உயர்ந்த பதவி மோக்ஷம். தேவர்களும் இந்த மயக்கத்துக்கு உட்பட்டவர்கள். அவர்கள் அனுபவிக்கும் பதவியை விட மேலான பதவியே முக்திநிலை. அது இறுதியில்லாத நிலை. தேவர்களின் பதவிகளுக்கு இறுதி உண்டு என்பது நம்முடையசாஸ்திரம்.

"நீர் நுமது என்பதை
 வேர் முதல் மாய்த்து இறை
சேர்மின்; உயிர்க்கு அதன்
 நேர்நிறை இல்லை"

என்று நம்மாழ்வார் பாடிய பாசுரமும் இதுவே. 'நீர்' 'நுமது', அதாவது யான் எனது என்கின்ற மோகங்களை வேரோடு அழித்துப் பகவானைச் சேருங்கள். ஆன்மாவுக்கு இதற்குச் சமானமான நன்மை வேறு இல்லை. 'நேர் நிறை' என்றால் சம எடை..

• • •

சுகானுபவத்துக்கு வேண்டிய விஷயங்களை விட்டால் மட்டும் போதாது. எல்லாவிதப் பற்றுகளையும் தீரத் துறக்க வேண்டும். அவற்றைப் பற்றிய கருத்தும் அறவே தீர வேண்டும். ஆழ்வார் 'வேர் முதல்' என்றது இதுவே.

தலைப்பட்டார் தீரத்
 துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றை
 யவர்.

'தீரத் துறந்த'லாவது பற்றையும் விட்டு நீங்குதல், பற்றறத் துறத்தல். அப்படி பற்றறத் துறந்தவர்கள் முக்தி அடைவார்கள்.

தலைப்பட்டார்-நிச்சயமாக அடைந்து விட்டனர். 'தலைப்படுவார்' என்று சொல்லாமல் 'தலைப்பட்டார்' என்று இறந்த காலத்தில் சொன்னது துணிவு பற்றி வந்தது. நிச்சயம் அடைந்து விட்டார்கள் என்ற உறுதி பற்றி வந்தது.

மற்றையவர், அதாவது பற்று வைத்துக் கொண்டே விஷயங்களினின்று விலகி நிற்பவர்கள் துறவு பூண்ட போதிலும் மயக்கத்தில் சிக்கியவர்கள் ஆவார்கள். பிறவிச் சுழலினின்று விடுபட மாட்டார்கள்.

பற்றற்ற கண்ணே
 பிறப்புஅறுக்கும் மற்று
நிலையாமை காணப்
 படும்.

பற்றைத் தீரத் துறந்தாலேதான் பிறப்பு தீரும். இல்லாவிடில் பிறப்பும் இறப்புமாகிய சம்சாரச் சுழலில் இருந்து கொண்டே இருப்பான்.

'அற்றது பற்றெனில் உற்றது வீடு' என்று நம்மாழ்வார் பாடியதும் இதுவே. பற்று அறாமல் நின்றால் 'நிலையாமை காணப்படும்'. அதாவது, நிலையாமையே இலக்கணமான இந்த உலகத்தில் பிறந்தும் இறந்தும் உழல வேண்டியதாகும்.

பற்றுக பற்றற்றான்
 பற்றினை; அப்பற்றைப்
பற்றுக பற்று
 விடற்கு.

பற்று விடுவது கஷ்டம், விஷயானுபவத்துக்கு வேண்டிய பொருளை விட்டு விடலாம். ஆனால் அதன் நினைவை விடுவது கஷ்டம். இதற்கு ஒரு சாதனம் வேண்டும். ஓர் உதவியைக் கொண்டு பற்றையும் நீக்கிக் கொள்ளலாம். எந்த உதவி என்பதைச் சொல்லுகிறார். பகவானிடம் 'நீயே கதி' என்று பக்தி செலுத்து என்கிறார். 'அப்பற்றைப் பற்றுக': அந்தப் பக்தியை விடாமல் பற்றி நில் - என்கிறார்.

பொருள்களில் உனக்குள்ள பற்றை அந்தப் பக்தி நீக்கச் செய்யும் என்கிறார்.

'பற்றற்றான்' என்றது 'பகவானை'. 'பற்றிலன் ஈசன்' என்று நம்மாழ்வார் சொன்னார். கீதையில் கண்ணனும் இதைச் சொல்லுகிறான்: 'எனக்கு யாரும் ஒன்றே, எல்லா உயிரும் ஒன்றே' என்று சொல்லுகிறான். பகவானைப் போல் பற்றறுத்து நிற்க விரும்ப வேண்டும் நாமும். அவனிடம் மனத்தைச் செலுத்தினால் அதுவே ஒரு பெரிய நல்ல பற்று ஆகும். அந்தப் பற்று நமக்கு மற்றப் பொருள்களில் உள்ள பற்றை நீக்க நல்ல உபாய மாகும். பெரும் பற்று அற்பப் பற்றை நீக்கிக் கொள்ள நல்ல உபாயமாகும்.

இது கீதையிலும் சொல்லப்பட்டிருக்கிறது. "பகவானிடத்தில் மனத்தைச் செலுத்தினால், விஷயங்களைத் துறந்த பின்னும் அவற்றின் மீது வைத்துள்ள ருசியும் நினைவும் வேதனை செய்கின்றன அல்லவா, அதுவும் தீரும்!" என்று கண்ணன் சொன்னான். "அப்பற்றைப் பற்றுக" என்று வள்ளுவர் அழுத்தம் தந்து சொல்லுகிறார். தண்ணீரில் மூழ்கி அலைகிறவன் மிதக்கும் மரத்தைப் பற்றிப் பிடித்துக் கொள்ளுவதுபோல் "அப்பற்றைப் பற்றுக" என்கிறார்.

பகவானிடம் பக்தி செலுத்தாமல் தன் அறிவின் சக்தியைக் கொண்டே காமக் குரோதாதிகளைத் தீரத் துறப்பது முடியாத காரியம். ஆண்டவனை மனத்தில் நிறுத்திப் பக்தி செய்யுங்கள். அப்போதுதான் தீரத் துறக்க முடியும். இது முனிவருடைய உபதேசமும், ஆழ்வாருடைய உபதேசமும், கண்ணன் அருச்சுனனுக்குச் சொன்னதும்.

நன்மையும் தீமையும் எனக்குத் தெரியும், நல்வழியில் நிற்பதற்குத் தெய்வபக்தி வேண்டியதில்லை, என் அறிவாலேயே நான் என்னைக் காத்துக் கொள்ள முடியும் என்று யாரேனும் எண்ணுவது அகங்காரமாகும். மோசம் போவதற்கு வழியாகும். தெய்வ பக்தியே நல்வழிக்கு இன்றியமையாதது. எவனுடைய கண்ணுக்கு எல்லாம் புலப்படுமோ, எவனிடம் எதையும் மறைக்க இயலாதோ, அந்த ஈசனிடம் பக்தியைச் செலுத்தித்தான் நல்வழியைக் காத்துக் கொள்ள முடியும். இல்லாவிடில் நம்முடைய மனமே நம்மை ஏமாற்றி விடும்.

'கல்கி' மாவட்டச் சிறுகதைப் போட்டி

மொழிவழி மாகாணப் பிரிவினைக்குப் பின்பு தமிழ்நாடு பதின்மூன்று மாவட்டங்களாகப் பிரிந்து புதிய அமைப்பைப் பெற்றிருக்கிறது.

தமிழ் நாட்டின் ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொரு விதமான வாழ்க்கை அமைப்பும், வள முறைகளும், பழக்க வழக்கங்களும் நிலவுகின்றன. ஒரு மாவட்டத்தில் இருப்பதைப் போல், ஒரு பிரதேசத்தில் இருப்பதைப் போல் மற்றொரு மாவட்டத்திலோ, பிரதேசத்திலோ, வளமுறைகளும் பழக்க வழக்கங்களும், தொழில்களும் இருப்பதில்லை.

கடலோரத்தைச் சார்ந்த பிரதேசங்கள் சில, மலைகளின் மடியில் இயற்கையழகு கொலுவிருக்கும் பிரதேசங்கள் சில, பசுமையான வயல்களோடு கூடிய பிரதேசங்கள் சில, உலகத் தொடர்பற்ற ஊர்களாய்க் காடாந்தகாரத்தில் அமைந்தவை பல. அந்தந்தப் பிரதேசங்களில் வாழும் மக்களின் தொழில்களும், வாழ்க்கைப் பிரச்னைகளும் ஒன்றுக்கொன்று வேறுபாடுடையவை.

இவ்வாறாகத் தமிழ்நாட்டின் வர்ண விஸ்தாரமான வாழ்க்கை பல நிறங்களோடு கூடிய பெரிய ஓவியம்போல் காட்சியளிக்கிறது. அதைக் கூர்ந்து கவனித்தால், எத்தனை எத்தனையோ, அற்புதமான நல்ல சிறுகதைகளை எழுதலாம்.

உதாரணமாகத் தஞ்சை, திருச்சி மாவட்டங்களில் காவிரியின் இரு புறமுமுள்ள பிரதேசத்தின் பசுமை நிறைந்த வாழ்வை மையமாகக் கொண்டும், நீலகிரி மாவட்டத்தின் மலைச்சூழ்நிலையைப் பகைப்புலனாகக் கொண்டும், சேலத்து நெசவாளர்களின் வாழ்வை நிலைக்களனாகக் கொண்டும் அந்தந்தப் பிரதேசத்தின் சூழ்நிலை குறைவின்றி முழுமையாக வருமாறு கதைகள் எழுதலாமல்லவா?

பிரதேச வாரியாக, தொழில் வாரியாக, வளமுறை வாரியாகத் தமிழ் நாட்டில் அங்கங்கே பரவிக் கிடக்கும் வாழ்க்கை அனுபவங்களைப் பார்த்து, உணர்ந்து அவற்றின் சுவைகளைச் சிறுகதைகளாக்கும் விரிந்த கற்பனைத் திறனை வளர்ப்பதற்காக மாவட்டச் சிறுகதைப் போட்டி ஒன்றை நடத்த முன் வந்திருக்கிறோம்.

ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு மாவட்டத்தை இலக்காகக் கொண்டு இந்தச் சிறுகதைப் போட்டி நடத்தப்படும்.

வருகிற மார்ச்சு மாதம் தஞ்சை மாவட்டச் சிறுகதைப் போட்டியில் தொடங்கி ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு மாவட்டத்தை இலக்காகக் கொண்டு இந்தப் போட்டி நடைபெறும்.

ஒவ்வொரு பிரதேசத்தைப் பற்றிய சிறுகதையிலும் அதன் சூழ்நிலை, தொழில், வாழ்க்கை வளமுறைகள், அந்தப் பக்கத்துப் பழமொழிகள், பழக்க வழக்கங்கள், கோட்பாடுகள் முதலியவை இடம் பெறலாம். ஆனால் அவற்றை யெல்லாம் திணிப்பதற்காகக் கதையை எழுதக் கூடாது. இயல்பாகவே அவை கதையில் வந்து அமைய வேண்டும்.

ஏற்கெனவே எழுதிக் கைவந்த பயிற்சியும், புதிதாக எழுதும் ஆர்வமும் கொண்டுள்ள இருவித எழுத்தாளர்களுக்கும் தமிழ் மக்களின் அன்புக்கு என்றும் பாத்திரமான 'கல்கி' பத்திரிகை ஏற்படுத்தியிருக்கும் இந்த மாவட்டச் சிறுகதைப் போட்டி ஒரு அருமையான வாய்ப்பு.

ஒவ்வொரு மாதமும் தேர்ந்தெடுக்கப்படும் கதைகளில் இரண்டு கதைகளுக்குப் பரிசு வழங்கப்படும். முதற் பரிசுக்குத் தேர்ந்தெடுக்கும் கதைக்கு ரூ. 200ம், இரண்டாவது பரிசுக் கதைக்கு ரூ. 100ம் சன்மானமாக வழங்கப்படும். அத்துடன் பரிசு பெறாத, ஆனால் பிரசுரத்துக்கு உகந்த இதர சிறுகதைகளும் 'கல்கி'யில் வெளியிடப்படும். அவற்றுக்கும் உரிய சன்மானம் வழங்கப் பெறும்.

'புகழ் மண்டிக் கிடக்கும் தமிழ்நாடு' என்று பாரதியார் பாடிய தமிழகத்தின் இன்பமும், துன்பமும், இயற்கையும், செயற்கையும் நிறைந்த வாழ்க்கை வண்ணங்களை இந்தப் போட்டியில் பரிசு பெறும் கதைகள் தமிழ்ப் பெரு மக்களுக்கு அளித்துச் சுவையூட்டும் என்று நம்புகிறோம்.

கல்கி மாவட்டச் சிறுகதைப் போட்டி சம்பந்தமான விதிகளை எதிர்ப்புறத்தில் காணலாம்.

கல்கி

மாவட்டச் சிறுகதைப் போட்டி

முதற் பரிசு ரூ. 200. இரண்டாவது பரிசு ரூ 100

●

★ ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு மாவட்டத்தை இலக்காகக் கொண்டு இந்தச் சிறுகதைப் போட்டி நடத்தப்படும். ஒவ்வொரு மாதமும் தேர்ந்தெடுக்கப்படும் கதைகளில் இரண்டு கதைகளுக்குப் பரிசு வழங்கப்படும்.

★ தமிழ் நாட்டின் மாவட்டங்களான கன்யாகுமரி, திருநெல்வேலி, மதுரை, ராமநாதபுரம், திருச்சி, தஞ்சை, தென் ஆற்காடு, செங்கற்பட்டு, வட ஆற்காடு, சென்னை, சேலம், கோயமுத்தூர், நீலகிரி ஆகிய பதின்மூன்று மாவட்டங்கள் இந்தப் போட்டியில் இடம் பெறும்.

★ எல்லா மாவட்டங்களைப் பற்றிய கதைப் போட்டிகளிலும், எல்லாத் தமிழ் எழுத்தாளர்களும் கலந்து கொள்ளலாம்.

★ கதைகள் பண்பட்ட தமிழ் நடையில் அந்தந்த மாவட்டத்தைப் பின்புலமாகக் கொண்டு, முழுவதும் அந்தப் பிரதேச மணம் கமழ்வதாக இருப்பதோடு சொந்தக் கற்பனையாகவும் இருக்க வேண்டும்.

முதற் போட்டி

தஞ்சை மாவட்டம்

விதிகள்

1. கதைகள் தஞ்சை மாவட்டத்தின் சூழ்நிலை எல்லா வகையிலும் அமையுமாறு எழுதப்பட வேண்டும். தஞ்சைப் பிரதேசத்தைச் சேர்ந்த ஊர்கள், பழக்க வழக்கம், தொழில், காவிரிக்கரை வாழ்வு போன்றவற்றைச் சித்திரிக்கும் கதைகளே இப் போட்டியில் இடம் பெறும்.

2. கதைகள் 'கல்கி' இதழின் ஐந்து பக்கங்களுக்குக் குறையாமல் ஏழு பக்கங்களுக்கு மேற்போகாமல் இருக்க வேண்டும்.

3. ஒரு எழுத்தாளரே ஒன்றுக்கு மேற்பட்டும் கதைகள் அனுப்பலாம்.

4. பரிசுக்கதைகளைத் தேர்ந்தெடுக்கும் விஷயத்தில் 'கல்கி' ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.

5. பரிசுபெறாத கதைகளில் பிரசுரிக்கத் தகுதியுடையவை, உரிய சன்மானம் அளித்துக் 'கல்கி'யில் பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளப்படும்.

6. பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளப்படாத கதைகளைத் திரும்பப் பெற விரும்புவோர் கதைகளோடு உரிய தபால் பில்லைகள் இணைக்க வேண்டும்.

7. கதைகள் சம்பந்தமாக எவ்விதக் கடிதப் போக்குவரத்தும் வைத்துக் கொள்வதற்கில்லை.

8. தஞ்சை மாவட்டப் போட்டிக்கான கதைகள் மார்ச்சு மாதம் 31-ந் தேதிக்குள் 'கல்கி' காரியாலயத்துக்கு வந்து சேர வேண்டும்.

9. போட்டி முடிவு ஏப்ரல் மாத இறுதிக்குள் அறிவிக்கப்படும்.

10. கதைகளின் உறைகளிலும், கதைகளின் தலைப்புக்களிலும் "கல்கி தஞ்சை மாவட்டச் சிறுகதைப் போட்டி" என்று குறிப்பிட வேண்டும்.

குறிப்பு:—தஞ்சை மாவட்டத்தின் சிறுகதைப் போட்டி முடிவு வெளியாகும் இதழிலேயே அடுத்த மாவட்டச் சிறுகதைப் போட்டிக்குரிய விவரங்கள் அறிவிக்கப்படும்.

ஆசிரியர், கல்கி



சிறையிலே பிறந்த-
புகழேந்திக் காவியம்...
திரையிலே தவழும் தேதியை
எதிர்பாருங்கள்
பானுமதி
நாகையா
கெம்பராஜ் நடிக்கும்
கெம்பராஜ் புரொடக்ஷன்ஸ்...
நளதமயந்தி
ஜனதா ஸினி கார்பொரேஷன்
...ரிலீஸ்...
மலிபுகழ் நளன் சரிதை கேட்டவர்க்கு கலிபுகும் பயமேது!

பாகவதமாகிய

பக்திவயல்

பௌராணிகர்

24. கஜேந்திர மோக்ஷம்

சுகர் பரீக்ஷித்து மன்னனுக்கு மன்வந்தரங்களின் கணக்கையும், ஒவ்வொரு மன்வந்தரத்திலும் யார் அதிகாரமுள்ள மனுவாக விளங்கினார் என்பதையும் எடுத்துரைத்தார். நான்காவது மன்வந்தரத்தில் யானைத் தலைவனை முதலை வாயினின்று நாராயணன் விடுவித்தார் என்று சுகர் கூறுங்கால், மன்னவன் அவ் வரலாற்றை விவரித்துச் சொல்ல வேண்டும் என்று கேட்டார். முனிவர்கள் சூழக் கங்கைக் கரையில் வீற்றிருந்த வேந்தனுக்குச் சுகர் கீழ்வரும் கதையை எடுத்துரைத்தார் :—

திரிகூடம் என்று ஒரு பெரும் பர்வதம் இருந்தது. பதினாயிரம் யோஜனை உயரம் வாய்ந்தது. தன்னுடைய பொன், வெள்ளி, இரும்பு, இம்மூன்று முடிகளால் நாலா திக்குகளிலும் ஒளியைப் பரப்பி வந்தது. கனிகள் மிகுந்து, மரம் செடிகள் அடர்ந்து, அருவியின் ஓசையால் ஓயாது ஒலித்திருந்தது. மலையின் அடியைப் பாற் கடலின் அலைகள் மோதி வந்தன. மலிந்து கிடந்த மரகதக் குவியல்கள் மலைச்சாரலுக்குப் பசுமையை அளித்தன. மலையின் பல குகைகளில் சித்தரும், கந்தர்வரும், சாரணரும், வித்யாதரரும், கின்னரரும், நாகரும், அப்ஸரரும் கூடிக் களித்திருப்பர். குகையினின்று வெளிவரும் ஒலியைக் கேட்ட சிங்கங்கள் குகைக்குள் வேறு சிங்கங்கள் இருக்கின்றன என்று எண்ணிச் சினத்துடன் கர்ஜனை செய்யும். சாரலெல்லாம் விலங்குகள் நிறைந்து, மரங்களெல்லாம் பாடும் பறவைகள் மிகுந்து, ஆங்காங்கு ஆறுகள் ஓடத் தண்ணீர் நிரம்பிய தடாகங்களால் அலங்கரிக்கப்பட்டு, விண்ணுலக மங்கையர் நீராடி நறுமணம் அளித்த நீர்த்துளியுடன் வீசும் காற்றினால் குளிர் கொண்ட அம்மலை, நிகரற்று விளங்கியது.

அம் மலையின் ஒரு சாரலில் ரிதுமான் என்று பெயர்வாய்ந்த ஓர் பூங்காவனம் இருந்தது. அது வருணனுக்குச் சொந்தமானது. தேவ மாதர் கிரீடை செய்யும் தனி இடம். எப்பொழுதும் மலர் மல்கும் மரங்கள் சூழ்ந்தது. அங்கே பொற்றாமரைகள் அடர்ந்த தடாகம் ஒன்று உண்டு. மதம் கொண்ட வண்டினங்களின் ரீங்காரமும், பறவைகளின் இனிய குரலும் அங்கு இடைவிடாது கேட்கலாகும். தடர்கத்தில் தவழும் அன்னங்களே ஒரு அலங்காரம். நீரெல்லாம் தாமரையின் மகரந்தத்தால் மூடுண்டு கிடக்கும்; மீன்கள் பாயுங்கால் மகரந்த மஞ்சளும் அசைவுறும்.

ஒரு நாள் அவ்விடத்துக்கு யானைக் கூட்டத்தின் தலைவன் ஒன்று, பெண்ணினம் பல சூழ, வரும் வழியிலிருந்த மூங்கில் புதரை எல்லாம் மிதித்துத் துகளாக்கிக் கொண்டு வந்து சேர்ந்தது. இதன் வரவைத் தூரத்திலேயே முகர்ந்து அறிந்து கொண்ட காட்டு விலங்குகள் பயம் மேலிட்டுப் பல திசைகளிலும் சிதறி ஓடின. கூட்டத்தின் நடுவே, மதஜலம் வழிய, பாரத்தால் பர்வதமே நடுங்க, பவனி வரும் யானையை வண்டினங்கள் சூழ்ந்து சென்றன. தடாகத்தினின்று மகரந்த மணத்துடன் கலந்து வீசும் காற்றை முகர்ந்து கொண்டு அத்திசையை நோக்கித் தம் தாகத்தைத் தீர்த்துக் கொள்வதற்காக, யானையும் அதன் பரிவாரங்களும் விரைந்தன. தடாகத்தில் இறங்கி, நிர்மலமான நீரால் உடம்பைக் குளிரச் செய்து கொண்டு தலைவனான யானை களித்தது. பெண் யானைகளின் மேல் நீரைத் துதிக்கையால் வாரி இறைத்தது. பெண்களையும் சிற்றானைக் கூட்டத்தையும் நீர் பருகச் செய்தது. இவ்வாறு இறைவனுடைய மாயையால் தன்வினை தெரியாத யானை, அண்டி வரும் ஆபத்தை எவ்வாறு அறியும்?

விதிப் பயனால் அங்கிருந்த பெரிய முதலையொன்று யானையின் காலைத் தன் பற்களால் பிடித்துக் கொண்டது. மதம் கொண்ட பெரும் கரியும் தன்னால் இயன்றவரை முதலை வாயினின்று தன் காலை விடுவித்துக் கொள்ள முயன்றது. தலைவன் படும் துயரத்தைக் கண்ணுற்ற பெண் யானைகள் என்ன செய்வதென்று தெரியாது வீறிட்டு அலறின. கூட்டத்திலிருந்த மற்ற யானைகள் பின்னின்று



தலைவனை இழுத்தும் சிறிதேனும் பயன் படவில்லை. நீருக்குள் முதலை இழுக்க, வெளியேற வேண்டி யானை இழுக்க, ஒன்றோடொன்று போரிட்டன. இவ்விதம் ஒருவருக்கும் வெற்றியின்றிப் பல்லாண்டுகள் போயின.

ஆனால் நாளடைவில் உண்ண உணவின்றி யானை, திறமும் குன்றி, மனமும் சோர்ந்தது. முதலையோ, நீரிலே வாழும் வழக்கத்தால் பலமேறிப் பன்மடங்கு ஊக்கத்துடன் யானையை இழுக்கலாயிற்று. தன் உயிருக்கே ஆபத்து நெருங்கிவிட்டதென்று யானைக்குத் தெரிந்தது. தன்னைக் காப்பாற்றிக் கொள்ளத் தன்னிடம் திறமில்லை என்று தெளிந்தது. வெகு நேரம் சிந்தனையில் ஆழ்ந்தது. "சுற்றத்தார் சூழ்ந்திருந்தும் உதவ முடியவில்லை. பெண்ணினங்கள் என்ன தான் செய்ய இயலும்? ஆகவே விதியினால் முதலையின் வாயில் அகப்பட்டுக் கொண்ட எனக்கும் பரமனே புகலிடம். சாவென்ற பாம்பைக் கண்டு பதறி வந்தவனைக் காத்தருள வல்லவன் எந்த ஈசனோ. எவனைக் கண்டு கூற்றமே அஞ்சி ஓடுமோ, அவனையே சரண் புகுவேன்" என்று தீர்மானம் செய்தது.

இவ்வாறு தன்னைத் தேற்றிக் கொண்ட யானை முன் பிறவியில் தான் அறிந்திருந்த தோத்திரத்தைத் தனக்குள் ஜபம் செய்தது. (இப் பிறவியில் யானையாதலால் மனித வாக்கால் பேசத் திறமையற்று, முன் பிறவியிற் கற்றதை மனத்துக்குள் சொல்லிக் கொண்டது என்பது கருத்து).

1. "ஓம்" என்ற பிரணவமான பரமனை வணங்குகிறேன்.

யாரிடம் அண்ட சராசரங்கள் ஒடுங்கி நிற்குமோ, யாரிடம் நின்று அனைவ யாவும் வெளிவருமோ, யாரால் இவையெல்லாம் படைக்கப்படுமோ, இருப்பதெல்லாம் எவனின்றி வேறன்றோ, ஆயினும் சிருஷ்டிக்கும் அதன் காரணமான மாயைக்கும் அப்பால் இருப்பவன் எவனோ, அந்தப் பரம்பொருள் ஆனவன் என்னைக் காப்பாற்றட்டும்.

3. பற்றை விட்டுத் தனித்திருந்து, நோன்புகள் பல நோற்றுப் பெரியோர் தேடி வரும் தேவனே எனக்குக் கதி."

4. "என்னைப் போன்ற பசுக்களைப் பாசத்தில் நின்று மீட்கவல்ல மீண்டவனே! உன்னை வணங்குகிறேன்."

5. "காமத்தை விரும்புவோர்க்குக் காமத்தையும், முக்தியை விரும்புவோர்க்கு முக்தியையும் அளித்து, கேளாத மற்றவை அனைத்தையும் அள்ளிக் கொடுக்கும் வள்ளலுக்கு, இந்தக் கட்டிலிருந்து நான் விலகவே வந்தனம் செய்கிறேன்.

6. "எவனின்றி மற்றொன்றை மதியாத பெரியோர், பாடிப் புகழ்ந்திடும் ஆனந்தமே எல்லா வரங்களுக்கும் மேலென்று கருதியே களிப்பரோ, அவ்வருவனை, முதல்வனை, புலனுக்குப் புரியாத பெரியோனை, அனந்தனை, அண்ணலை மனதாரப் போற்றுகிறேன்."

7 "எம்பெருமான் தேவனில்லை, அரக்கனில்லை, மனிதனில்லை, மிருகமுமில்லை, ஆணுமில்லை, பெண்ணுமில்லை, குணமுமில்லை, செயலுமில்லை, இல்லை என்ற அனைத்தையும் மறுத்த பின்பு மிஞ்சுவோன், மிஞ்சியும் அனைத்திலும் புகுந்திருக்கும் பெரியவன்."

8 "முதலை வாய்ப்பிடியினின்று மீண்டு வாழ எண்ணிலேன். உள், புறம், இரண்டிலும் இருண்டிருக்கும் யானையாய் வாழ்வதில் பயன் இல்லை. தேவனை மறைத்திருக்கும் திரை போன்ற இருளை கற்ற வேண்டியே துதிக்கிறேன்."

இவ்விதம் யானைத் தலைவன் செய்த துதியைத் தனி உருவம் எய்தித் தத்தம் வேலையைச் செய்யும் பிரமன் முதலோர் ஏற்றுக் கொள்ளவில்லை. ஏற்றுக் கொள்வதற்கு அவர்களுக்கு உரிமையுமில்லை. ஒருருவம் என்பதே இல்லாது ஆனால் அனைவருக்கும் ஆன்மாவாயிருப்பதால் தேவர்கள் மயமாகித் தானாகத் தனித்திருக்கும் நாராயணன், கரையும் கரி அரசன் முன் தோன்றினார். தான் விரும்பும் வேகத்தில் விரைந்து வரத் திறமை கொண்ட கருடன் மீதேறி, விண்ணவர் புகழ்ந்து கொண்டு சூழ்ந்து வர சுதர்சனத்தைக் கையில் ஏந்தி, ஹரி அங்கு வந்து நின்றார்.

வானத்தில் வரும் பொழுதே யானையும் ஹரியைக் கண்டு கொண்டது.

மேலோங்கிய சுதர்சனத்தைக் கண்ணுற்று ஆறுதலடைந்தது. தடாகத்திலிருந்து எடுத்த ஒரு தாமரைப் பூவைத் தன் துதிக்கையால் ஏந்தித் துதிக்கையைத் தலைமேல் தூக்கி, விரைந்து வரும் மாதவனை வணங்கி, வருந்திய குரலில், "உலகங்களுக் கெல்லாம் குருவே! பகவானே! நான் உன்னை வணங்குகிறேன்" என்றது. யானை படும் பாட்டைப் பரமன் பார்த்தார். கருணை மிகுந்து, கருடன் மீதிருந்து பரபரப்புடன் கீழே குதித்தார். முதலையுடன் யானையைச் சேர்த்துத் தடாகத்தினின்று வெளியே இழுத்தார். சுதர்சனத்தால் முதலையைக் கொன்றார். சிவனும் பிரமனும் முன்னிற்க, விண்ணவர் மலர்மாரி பொழிந்தனர். வானத்தில் துந்துபி முழங்கியது. கந்தர்வர் கானம் செய்தனர். சித்தர் துதித்தனர்.

அச்சமயம், அத்தருணம் வரை முதலை வடிவுடன் இருந்த ஜீவன், தன் சாபம் தீர்ந்து எழில் வாய்ந்த "ஹூஹூ" என்ற கந்தர்வத் தலைவனாய் மாறி, நாராயணன் தாள் வணங்கித் தோத்திரம் செய்தான். இக் கந்தர்வன் ஒரு நாள் தன் மனைவிமாருடன் நீராடிக் களித்திருந்தான். அப்பொழுது தேவலர் என்ற ரிஷி, தாமும் நீராட அந்தத் தடாகத்தில் இறங்கினார். இவர் நீரில் இறங்கியதும், கந்தர்வன் அவர் காலை நீருக்குள் பிடித்து இழுத்தான். அப்பொழுது அவனை முதலையாகப் பிறக்கக் கடவது என்று முனிவர் சபித்தார். அந்தச் சாபம் இப்பொழுது நீங்கியது. ஹரியை வலம் வந்து வணங்கி விட்டுத் தன்னிடம் ஏகினான் கந்தர்வன்.

எம்பெருமான் கைபட்டுப் புனிதமான யானையும் தன் உருமாறி அவனுருவைப் பெற்று, நான்கு கைகளுடனும் மஞ்சள் பட்டாடையுடனும் திகழ்ந்தது. முன் பிறவியில் இந்த யானை இந்திரத்யும்னன் என்று பெயர் பூண்ட பாண்டிய மன்னனாக இருந்தது. அவ்வரசன் விஷ்ணுவின் வழிபாட்டில் ஈடுபட்டிருந்தான். ஒரு சமயம் இவ்வேந்தன் நாட்டை விட்டுத் தவவேடம் பூண்டு விஷ்ணுவை ஆராதனம் செய்வதற்கென்று குலாசல மலையை அடைந்தான். பேசாவிருதம் மேற்கொண்டு, மனத்தையும் அடக்கியிருந்தான். பூஜையில் இவன் ஆழ்ந்திருக்கையில் அவ்விடத்துக்கு அகஸ்திய முனிவர் வந்தார். வந்தவரை 'வா'வென்று அழைக்காமல், அர்க்யமும் அளிக்காமல், பேச்சின்றிப் பூஜை செய்யும் மன்னவனிடம் முனிவர் சினம் கொண்டார். அவனுக்குச் சாபம் அளித்தார். "முனியை அவமதித்த இப் பாமரன் யானையென மந்தபுத்தி உடையவன். இவன் யானையாகவே பிறக்கட்டும்" என்றார். இந்திரத்யும்னன் 'இதுவும் விதி' என்று சாபத்தை ஏற்றுக் கொண்டு யானையாய்ப் பிறந்தனன். ஆனால் நற்செயலின் பயன் அந்த யானைக்குத் தகுந்த தருணத்தில் ஹரியின் ஞாபகத்தை மூட்டியது.

யானையை விடுவித்து விட்டு, நாராயணன் கருடன்மீது ஏறி வைகுண்டம் சென்றார்.

இக் கதையை விரிவாகப் பரீக்ஷித்துக்குச் சுகர் சொல்லி விட்டுப் பின் வரும் பலன் கூறினார்.


"அரசே! இக் கதையைக் கேட்பவர்களுக்குக் கலியினால் வரும் கஷ்டம் நீங்கும். புகழ் நாடி வரும், மோக்ஷம் கை கூடும், கெட்ட சொப்பனங்கள் வரமாட்டா, துயில் எழுந்ததும் அதிகாலையில் இக்கதையைப் பெரியோர் உரைத்துத் தம் பாபங்களை அகற்றிக் கொள்வர். தாம் விடுவித்த யானைக்குப் பின்வருமாறு விஷ்ணுவே கூறியிருக்கிறார்:—

வைகறையாமம் துயிலெழுந்து, மாசற்ற மனத்துடன் என்னையும், உன்னையும், இம் மலையையும், நீரையும் நினைப்பவர் பாபத்தை விட்டகலுவார். நீ செய்த தோத்திரத்தை உரைப்பவருக்கு இறக்கும்தறுவாயில் என் நினைவைத் தருவேன்."





1


2


3


4



5


6


7



8






பாரத நாட்டுக்குச் சமீபத்தில் விஜயம் செய்து சிறப்பித்த எடின்பரோ கோமகனை அவர் சென்றவிடமெல்லாம் மக்கள் திரளாக வந்து உற்சாகமாக வரவேற்றார்கள்.

1. பிரதம மந்திரி நேருவுடன் இளவரசர் பிலிப். 2. ஜனாதிபதி குடியரசு தினத்தன்று அளித்த வரவேற்பில் கலந்து கொண்டார். 3. சென்னை ராஜ்பவனில் கல்கி அதிபர் திரு சதாசிவம் அவர்களுடன் குதூகலமாகப் பேசிச் சிரிக்கிறார். 4. புது தில்லி இந்திய விவசாய ஆராய்ச்சிக் கழகத்தைப் பார்வையிடுகிறார். 5. பஞ்சாப் பாக்ரா - நங்கல் அணையைப் பார்க்கிறார். 6. சென்னை கவர்னர் அளித்த விருந்தின் போது ஸ்ரீமதி மேதி சென்னை மக்கள் சார்பிலும், அரசாங்கத்தின் சார்பிலும் இங்கிலாந்து ராணிக்கும் அவர்களுடைய குழந்தைகளுக்கும் பரிசுகள் அளித்தார். அருகே திரு சி. சுப்பிரமணியம் நிற்பதைக் காணலாம். 7. சென்னை மேயர் திரு கமலக்கண்ணன் மாலை சூட்டி வரவேற்றார். 8. பிரதமர் நேருவுடன் 'இந்தியா - 1958' பொருட் காட்சிக்கு விஜயம் செய்தார். 9. பங்களூரில் இந்திய விஞ்ஞானக் கழகத்தில். 10. மாமல்லபுரச் சிற்பங்களைப் பார்வையிடுகிறார் இளவரசர். 11. திரு முத்தையா செட்டியார் அளித்த பரிசை ஏற்றுக் கொள்கிறார். 12. பெரம்பூர் ரயில் பெட்டி தயாரிப்புத் தொழிற்சாலையில். 13. புதுதில்லியில் வந்திறங்கியதும் அளிக்கப்பட்ட ராணுவ மரியாதை. 14. விஞ்ஞான காங்கிரசுக்கு அழைக்கப்பட்டிருந்தவர்களுடன் அளவளாவுகிறார். 15. குடியரசு தினத்தன்று ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற வரவேற்புக்கு நேருஜியுடன் வருகிறார்.











மதுரையில் ரோட்டரி விழா!

எஸ்.வி.எஸ்

"மதுரை மாநகரில் ரோட்டரி மகாநாடு நடக்கிறது. நீ போக வேண்டும்" என்றார் ஆசிரியர்.

இரும்புப் பட்டறையில் ஈக்கு என்ன வேலை என்றுதான் நினைத்துக் கொண்டேன். ஏனெனில் ரோட்டரி சங்கங்களைப் பற்றி நான் ஏதோ அரையும் குறையுமாகக் கேள்விப்பட்டிருந்தேன். ஊரிலுள்ள பணக்காரர்கள் ஒன்று கூடி, "டின்னர், லஞ்சு" என்று விருந்து சாப்பிடும் ஒரு கழகம் ரோட்டரிச் சங்கம் என்று நினைத்திருந்தேன். அங்கு போன பிறகுதான் எவ்வளவு தவறான கருத்துக் கொண்டிருந்தேன் என்பது தெரிந்தது! அதுமட்டுமல்ல; என்னைப் போல் பலரும் இத்தகைய எண்ணந்தான் கொண்டிருக்கிறார்கள் என்பது அங்கு வந்திருந்த அங்கத்தினர்கள் பேச்சுக்களிலிருந்தும் தெரிந்தது. "ரோட்டரி கிளப் என்பது விருந்து சாப்பிட்டு உல்லாசமாகப் பொழுது போக்கும் கும்பல் என்று பலர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். இத் தவறான எண்ணத்தை நீக்க வேண்டும்" என்று பலர் பேசினார்கள். மதுரைக்குப் போன பிறகு ரோட்டரி கிளப்பின் முழு விவரங்களும் புரிந்தன.

* * *

மதுரையில் அகில உலக ரோட்டரி சங்கத்தின் 320-வது ஜில்லா மகாநாடு நடைபெற்றது. அகில உலக ரோட்டரி சங்கத்தினர், பல சங்கங்கள் கொண்ட பிரதேசத்தை ஒரு எண் கொடுத்து ஜில்லாவென்று குறிப்பிடுகின்றனர். அதனால் ரோட்டரி ஜில்லா நாம் குறிப்பிடும் ஜில்லாவைவிட மிகப் பரந்த பிரதேசத்தைத் தன்னுள் அடக்கியது.

இந்த 320-வது ஜில்லா வடக்கே பெல்லாரி பகுதியில் ஆரம்பித்துத் தெற்கே இலங்கை உள்ளிட்ட பகுதியாகும். இந்தப் பிரதேசத்தில் சுமார் 46 ரோட்டரி சங்கங்கள் இருக்கின்றன. இந்தச் சங்கங்களின் இவ்வருஷத்தியத் தலைவர் டி. வி. எஸ். ஸ்தாபனத்தின் அதிபரான திரு டி. எஸ். ராஜம். இவரை ரோட்டரி கவர்னர் என்று சொல்லுகிறார்கள். ரோட்டரி கவர்னர் ராஜம் நடத்திய 320-வது ஜில்லாவின் ஆண்டு விழாதான் மதுரையில் சென்ற ஜனவரி 31, பிப்ரவரி 1 தேதிகளில் சிறப்பாக நடைபெற்றது.

மதுரையில் நடந்த அந்த அமோகமான அழகிய விழாவைக் கண்டவர்கள், தாங்களும் இந்த ரோட்டரி சங்கத்தில் அங்கத்தினர்கள் ஆகி விட்டால் என்ன என்று துடித்திருப்பார்கள். ஆனால் அங்குதான் வருகிறது கஷ்டம்.


ரோட்டரி சங்கத்தில் யார் வேண்டுமானாலும் விண்ணப்பத்தின் மேல் அங்கத்தினராகிவிட முடியாது. ரோட்டரி சங்கத்தின் அழைப்பின் பேரில்தான் அங்கத்தினராக முடியும்.

ஊரில் பல நகை வியாபாரிகள் இருக்கிறார்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள். அந்த நகை வியாபாரிகளில் யார் யோக்கியமானவர், நல்லவர், வியாபாரத் துறையில் முன்னணியில் நிற்பவர் என்று அறிகிறார்களோ, அவரிடம் அவ்வூர் சங்கத்தின் காரியதரிசியும், தலைவரும் சென்று, "ஐயா! தாங்கள் தயவுசெய்து எங்கள் ரோட்டரி சங்கத்தில் அங்கத்தினராக வேண்டும்!" என்று அழைக்கிறார்கள். இப்படி வாழ்க்கையில் பல துறைகளில், தொழில்களில் ஈடுபட்ட முக்கியஸ்தர்கள் கொண்ட சங்கம், ரோட்டரி சங்கம். அதனாலேயே அந்தச் சங்கத்துக்கு உலகிலுள்ள அத்தனை சங்கங்களையும் விடத் தனியானதோர் கௌரவம் இருக்கிறது. அதனாலேயே உலகத்திலுள்ள பேர் அறிஞர்களெல்லாம் ரோட்டரி சங்கத்தில் பேசுவதற்கு அழைக்கப்பட்டால் தங்களுக்கு ஒரு கௌரவம் கிடைத்து விட்டதாகவே எண்ணுகிறார்கள்.

மதுரைக்கு நான் போய் இறங்கியவுடனே, மகாநாட்டு விழா மலர் கொடுத்தார்கள். உயர்தரமான தாளில் அழகாக அச்சிடப்பட்ட அந்த மலரைப் பார்த்ததும், அதைப் பார்த்துக் கொண்டேயிருக்கலாம்போல் தோன்றியது. பிறகு அதிலிருந்த மணி மணியான கட்டுரைகளைப் படித்துக் கொண்டு வந்தபோது, ரோட்டரி சங்கம் ஆரம்பமான வரலாறு கண்ணில் பட்டது. அதைப் படித்த போது மெய்சிலிர்த்தது.

பால் ஹாரிஸ் என்ற அமெரிக்க இளைஞர் வக்கீல் பட்டப் படிப்பை முடித்துக் கொண்டு, தொழில் ஆரம்பிக்க இருந்தார். தொழிலில் ஈடுபடத் தொடங்கினால் ஓய்வு கிடைக்குமோ என்னவோ என்று கருதி முன்னாலேயே உலகைச் சுற்றிப் பார்ப்பது என்று கிளம்பினார். உலகத்தைச் சுற்றிவிட்டு வந்து சிகாகோ நகரில் ஏற்கனவே நல்ல முறையில் வக்கீல் தொழில் செய்து வந்த நண்பருடன் தங்கினார். அவர் ஒரு நாள் இரவு சாப்பாட்டுக்குப் பின்னர், ஹாரிஸை அழைத்துக் கொண்டு தெருத் தெருவாய்ச் சுற்றித் தமக்குத் தெரிந்த சின்னக் கடை, பெரிய கடை என்று பலவிதக் கடைகள் வைத்து வியாபாரம் செய்து வந்தவர்களுக்கெல்லாம் அறிமுகம் செய்து வைத்தார். அதிலிருந்து வாழ்க்கையில் பல துறைகளில், பல தொழில்களில் ஈடுபட்டவர்கள் ஒன்று சேர்ந்து தங்கள் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டால் எவ்வளவு நலமாக இருக்கும், அன்யோன்யமான நட்புச் சூழ்நிலையில் பழகினால் சமுதாயத்துக்கு அது எவ்வளவு லாபமுள்ளதாக இருக்கும் என்று

கருதினார். இது 1900-ல் நிகழ்ந்தது. அந்தக்கருத்து அவர் உள்ளத்தில் ஊறி ஊறி 1905-ம் ஆண்டு ரோட்டரி சங்கமாக உருவெடுத்தது! அன்று முளை விட்ட ரோட்டரி சங்கம் நாளடைவில் உலகமெல்லாம் பரவி விட்டது. இன்று 111 நாடுகளில் 10,040 சங்கங்கள் இருக்கின்றன என்றும், சுமார் 4,70,000 பேர்கள் அங்கத்தினர்களாக இருக்கிறார்கள் என்றும் கவர்னர் ராஜம் தமது தலைமையுரையில் புள்ளி விவரத்தோடு கூறிய போது, அதிசயமும் பெருமிதமும் ஒருங்கே ஏற்பட்டன.



புது வருட கவர்னர் கே. கோபால் ராவ்

உலகில் ஏதாகிலும் ஒரு ஊரிலுள்ள ரோட்டரி சங்கத்தின் அங்கத்தினராக ஒருவர் இருந்து விட்டால் போதும், அவர் மற்றச் சங்கங்களிலுள்ள அத்தனை 4,70,000 பேர்களின் நெருங்கிய உறவினராகவும் நண்பராகவும் ஆகிவிடுகிறார்! இத்தனை பெரிய சுற்றமும் நட்பும் பெறுவதைவிட மனிதனுக்கு வேறு என்ன தான் வேண்டும்?

ரோட்டரி சங்கத்தின் கோட்பாடு மிக உயரியது. ''தனக்கில்லையாயினும் பிறருக்குச் சேவை செய்ய வேண்டும். யார் பிறருக்குச் சிறந்த முறையில் தொண்டாற்றுகிறாரோ அவரே அதிக லாபம் அடைகிறார்'' என்ற கொள்கையுடையது ரோட்டரி சங்கம்.

'இவ்வுயரிய லட்சியத்தை ரோட்டரி சங்கத்தினர் அனைவரும் கடைப்பிடிக்கின்றனரா? எல்லாம் சுயநலக்காரர்கள்' என்று சிலர் அபவாதம் கூறலாம். ஆனால் உலகில் எந்தச் சங்கத்தார்தான், எந்தக் கட்சியினர்தான் தாங்கள் வகுத்துக் கொண்ட லட்சியங்களுக்கு ஏற்ப வாழ்கிறார்கள்? இப்படி மற்றச் சங்கங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது ரோட்டரி சங்கம் மற்றச் சங்கங்களைவிட நல்ல சேவை செய்து வருகிறது. பற்பல நாடுகளைச் சேர்ந்த பல ஆயிரக்கணக்கான மாணவர்களுக்கு வேறு நாடுகளுக்குச் சென்று கல்வி பயில வசதி யளிக்கிறது. வைத்திய வசதி, முதலிய பல பணிகள் புரிந்து வருகிறது. உலகப் பேர் அறிஞர்களின் கருத்துக்களை விருப்பு வெறுப்பின்றிக் கேட்கும் மனப்பான்மையும் வளர்த்து வருகிறது.

320-வது ஜில்லாவிலுள்ள பல சங்கங்கள் தங்கள் தங்கள் வட்டாரங்களில் ஏழை மாணவர்களுக்குப் புத்தகங்கள் வாங்கிக் கொடுத்தும், பள்ளிக்கூடச் சம்பளங்கள் கட்டியும், மத்தியான இலவச உணவு அளித்தும், ஆஸ்பத்திரிகளில் பல படுக்கைகள் நிர்வகித்தும், தாய்-சேய்-நல விடுதிகள் திறந்தும், இன்னும் பலப் பல பணிகள் செய்து வருவதாக மிக அடக்கத்துடனும் அமைதியுடனும் அங்கத்தினர்கள் சொல்லிவந்த போது, 'சபாஷ்! பலே!' என்று மற்ற அங்கத்தினர்களும் பார்வையாளர்களும் பாராட்டினார்கள். அதிலும் மதுரை அங்கத்தினர் திரு பி. ரங்கசாமி நாயுடு அவர்கள் தங்கள் சங்கம் செய்துள்ள பல சமூகநலப் பணிகளைக் கூறிவிட்டு, இவற்றுக்குச் சிகரமாக அமைந்த பணி, தொழிலாளர்களுக்குக் குடும்பக் கட்டுப்பாட்டைப் பற்றிப் போதிக்கும் பிரசுரங்களை விநியோகித்து, அதன் அவசியத்தை உணரச் செய்தது தான் என்று தீவிரமாகப் பேசியபோது, சபையில் தனி குதூகலம் காணப்பட்டது.

அப்போது 'நகைச்சுவை விரும்பி' ஒருவர் ''ஐயா! தங்களுக்கு எத்தனை குழந்தைகள்?'' என்று கேட்டார். அவர் ஒரு எண்ணைக் குறிப்பிட்டார். ''இவ்விஷயத்தில் உம்முடைய உணர்ச்சி இவ்வளவு தீவிரமாக இருந்ததன் காரணம் புரிந்து விட்டது'' என்று கரகோஷம் செய்தனர் சபையோர்.

மதுரையில் நடைபெற்ற இவ்விழாவைப் போல், ரோட்டரி சங்கச் சரித்திரத்திலேயே எங்கும் நடைபெற்றதில்லை என்று ஒவ்வொருவரும் சொன்னார்கள். 320வது ஜில்லாவில் எத்தனை சங்கங்கள் இருக்கின்றனவோ அத்தனை சங்கப் பிரதிநிதிகளும் வந்திருந்தார்கள். இப்படி எந்த மகாநாட்டிலும் நடந்ததில்லையாம். இப்படிப் பிரதிநிதிகளும் விருந்தினர்களுமாகச் சுமார் ஆயிரம் பேருக்குமேல் வந்திருந்தார்கள். இவர்களுக்கெல்லாம் தங்க வசதி செய்து கொடுத்த பான்மையை எவ்வளவு புகழ்ந்தாலும் தகும்.

இப்பொழுது அகில உலக ரோட்டரிச் சங்கத்தின் தலைவராக விளங்கும் கிளிப்போர்டு ஏ. ராண்டல் இம் மாநாட்டுக்கு வாழ்த்துரையும் அவரது பிரதிநிதியாகக்

1. ரோட்டரி கவர்னர் டி. எஸ். ராஜம், கேரள கவர்னர் ராமகிருஷ்ண ராவ், அகில உலக ரோட்டரி சங்கத்தின் பிரதிநிதி திரு குரு கோவிந்தபசு, முன்னாள் ரோட்டரி கவர்னர் திரு ராமகிருஷ்ணா. 2. கவர்னர் ராஜம் பேசுகிறார். 3. பிரதிநிதிகள். 4. வரவேற்புரை வழங்கப்படுகிறது. 5. நடன விருந்தளித்த பத்மினி பிரியதர்சினிக்கு ஸ்ரீமதி ராஜம் பொன்மாலை அளித்துப் பாராட்டுகிறார். 6. காரியதரிசி திரு கங்காராம் துரைராஜ் வாழ்த்துரைகளை வாசிக்கிறார். 7. திரு ஆர். ராமச்சந்திரன் நன்றியுரை வழங்குகிறார்.


1
2
3
4
5
6
7

கல்கத்தாவிலிருந்து அந்நகரின் ஷெரீப் குரு கோபிந்த பஸு அவர்களையும் அனுப்பி வைத்திருந்தார். விழாவைத் துவக்கக் கேரளத்தின் கவர்னர் திரு ராமகிருஷ்ணராவ் வந்திருந்தார்.

முதல் நாள் விழாவன்று மாலை குமாரி பத்மினி பிரியதரிசினி விருந்தினர்களுக்கு இனிய நடன விருந்தளித்து மகிழ்வித்தார். நடனம் முடிந்தபிறகு, சபையோரை நிற்கும்படி பாவம் காட்டி, நட்டுவாங்கம் செய்து வந்த ஆசிரியரை 'ஜன கண மன' பாடச் செய்த காட்சி எல்லா அபிநயத்துக்கும் சிகரமாக விளங்கியது!

முதல் நாள் பிற்பகல் விருந்தின்போது நாதமணி ஏ. கே. வி. நடராஜன் கிளாரினெட்டில் மெல்லிய இன்னிசை வழங்கி இன்னடிசிலை இன்னும் இனியதாக்கினர்!

இவ்விழா இவ்வளவு சிறப்பாக அமைந்ததற்குக் காரணம், மதுரை ரோட்டரி சங்கத்தின் தலைவர் திரு எல். நாராயணன் செட்டியார், மகாநாட்டுக் கமிட்டி சேர்மன் என். எம். ஆர். கிருஷ்ணமூர்த்தி, காரியதரிசிகள் திரு வி. ஆர். கங்காராம் துரைராஜ், திரு ஆர். ராமச்சந்திரன் முதலியவர்களும், மற்ற மதுரை அங்கத்தினர்களும்தான் என்று சொல்லவேண்டும். மதுரை டி. வி. எஸ். ஸ்தாபனத்தின் தன்னலம் கருதாத உத்தியோகஸ்தர்களின் ஒத்துழைப்பு காரணமாகச் சாதாரணமாகவிருந்த இடங்களெல்லாம், அழகும் கலைப்பண்பும் துலங்கும் இந்திரபுரியாகவும் சொப்பனபுரியாகவும் மாறிவிட்ட விந்தையை என்னவென்பது!

இந்த மகாநாட்டில் அடுத்த வருஷ கவர்னராகச் சென்னை பரோடா பாங்க் மானேஜர் திரு கே. கோபால் ராவ் அவர்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். இவருடைய பதவிக்காலத்தில் தென்னகத்து, 320 - வது ஜில்லாவிலுள்ள ரோட்டரிச் சங்கங்கள் இன்னும் பலப்பல சமுதாய நலப் பணிகள் புரியும் என்று எதிர்பார்ப்போமாக. முன்னொரு விஷயம் இங்கு சொல்லிவிட வேண்டும்.

ரோட்டரி சங்கம் எவ்வளவு சீரிய பணி புரிந்து வருகிறது என்பது ஒரு சிலருக்கே இதுவரை தெரிந்து வந்தது. இன்று அதை உலகறியச் செய்துவிட்டார் கவர்னர் திரு டி. எஸ். ராஜம். மக்கள் மனத்தில் அதைப் பற்றியிருந்த தவறான எண்ணங்களைப் போக்கிவிட்டார். இதற்கு உலகத்திலுள்ள அத்தனை ரோட்டரி அங்கத்தினர்களும் ராஜம் அவர்களுக்குக் கடமைப் பட்டிருக்கிறார்கள்.


கடைசியாக ஒரு விஷயம் சொல்லி முடித்து விடுகிறேன். இந்த மகாநாட்டுக்கு நம் நாட்டின் பல பிரமுகர்களிடமிருந்தும் வெளி நாடுகளிலிருந்தும் ஆசிச் செய்திகள் வந்திருந்தன. அந்தச் செய்திகளுக்குள் எல்லாம் ஒரு செய்தி தனியான ஒளியுடன் பிரகாசித்துக் கொண்டிருந்தது. அந்தச் செய்தி பின்வருமாறு:

"இச்சங்கத்தின் அங்கத்தினர்கள் பெரும்பாலும் செல்வந்தர்கள். அவர்கள் பெற்றுள்ள பொருளும் செல்வமும், ஏழை எளியவர்களுக்கும் பயன்பட வேண்டியவை. ஆகவே, இச்செல்வத்தின் தர்மகர்த்தாக்களாகவும் பாதுகாவலர்களாகவும் வாழ வேண்டும் என்பதே இந்த அகில உலக ரோட்டரிச் சங்கத்தின் லட்சியமாக இருக்கும் என்று நினைக்கிறேன். அத்துடன் இவ்வுலகனைத்தும் ஒன்றே என்று அறிவுறுத்தும் கருணையுள்ளத்தை வளர்க்கும் லட்சியத்தையும் கொண்டுள்ளது என்றெண்ணுகிறேன்."

"இந்தச் செய்தி யாருடையது?" என்று கேட்கும் குரல் காதில் விழுகிறது.

வேறு யாருடையதாக இருக்கமுடியும்? ராஜாஜியினுடையதுதான்.

இன்றுள்ள அரசியல் பொருளாதாரச் சூழ்நிலையில் இதைவிடச் சிறந்த ஆசிமொழிகளை யார் இந்தத் தனவந்தர்களுக்கு நல்க முடியும்?



உதவி ஷெரீப் திரு ஜி. ஷண்முகம்

சென்னையின் உதவி ஷெரீப் பதவிக்கு நியமிக்கப்பட்டிருக்கும் திரு ஜி. ஷண்முகம், காலஞ்சென்ற டாக்டர் குருசுவாமி முதலியாரின் புதல்வர். சிமெண்ட் மார்க்கெடிங் கம்பெனியின் சென்னைக் கிளைக்கு இவர் நிர்வாகஸ்தராகவும், இதர கம்பெனிகளுக்கு டைரக்டராகவும் இருக்கிறார். தொழில் அனுபவத்துடன் கல்வித் துறையில் பழைமையான உயர்நிலைப் பள்ளியான டி. டி. வி. பள்ளி நிர்வாகக் கமிட்டியிலும் அங்கம் வகிக்கிறார். திரு சண்முகம் இந்தப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டதை நாம் மகிழ்ச்சியுடன் வரவேற்கிறோம்.



பாண்டிமாதேவி

அத்தியாயம் 26

கொற்றவைக் கூத்து

'அதோ அவர்களே வந்துவிட்டார்கள்' என்று அரசூருடையான் வாயில் பக்கமாகத் தன் கையைச் சுட்டிக் காட்டிய போது மற்ற நான்கு பேருடைய எட்டுக் கண்களும் தணிக்க இயலாத ஆர்வத் துடிதுடிப்போடு விரைந்து நோக்கின. நான்கு முகங்களின் எட்டு விழிகள் ஒருமித்துப் பாய்ந்த அந்தத் திசையிலிருந்து வந்து கொண்டிருந்தவர்கள் சோர்ந்து, தளர்ந்து தென்பட்டனர். பார்த்தவர்களின் உற்சாகமும், ஆவலும் பார்க்கப்பட்டவர்களிடம் காணோம். அவர்களுடைய முகத்தில் களை இல்லை. பார்வையில் மிடுக்கு இல்லை. நடையில் உற்சாகமில்லை. பயந்து நடுங்கிக் கொண்டே வருவது போல் தோன்றியது, அவர்கள் வந்த விதம். வந்தவர்கள் வேறு யாரும் இல்லை. முன்பு நாகைப் பட்டினத்திலிருந்து அனுப்பப்பட்ட ஆறு ஒற்றர்களில் தெற்கே, குமாரபாண்டியனைக் கொல்வதற்காக ஈழத்துக்குச் சென்ற மூன்று பேர்தான் வந்து கொண்டிருந்தார்கள். மெல்லத் தயங்கி வந்து நின்ற அவர்கள் அங்கே வீற்றிருந்த வடதிசை யரசர்களுக்கு வணக்கம் செலுத்தி விட்டுத் தலை குனிந்தனர். தென்திசைப் படையெடுப்பைப் பற்றிய முக்கிய ஆலோசனையில் இருந்த அந்த ஐவரின் முகத்தையும் நேருக்கு நேர் பார்ப்பதற்குத் தெம்பில்லாதவர்கள் போல் நடந்து கொண்டனர் வந்தவர்கள்.

"எப்பொழுது வந்தீர்கள்?" என்று சோழன் அவர்களை நோக்கிக் கேட்டான்.

"நாகைப் பட்டினத்தில் வந்து இறங்கியதும் நேரே இங்குதான் புறப்பட்டு வருகிறோம். 'நாங்கள் வந்தால் அங்கிருந்து உடனே கொடும்பாளூருக்கு வரச் சொல்லிக் கட்டளை' என்று துறைமுகத்தில் காத்திருந்தவர்கள் கூறினார்கள். அதன்படி வந்து விட்டோம்" என்று அந்த மூவரில் ஒருவன் பதில் கூறினான்.

சோழன் முகத்தில் கடுமை படர்ந்தது. குரலில் கண்டிப்பு ஏறியது. "நீங்கள் வந்த வரலாற்றை விவரிக்கச் சொல்லவில்லை. இப்போது உங்களைக் கேட்கவில்லை, எந்தக் காரியத்தைச்

நா. பார்த்தசாரதி


செய்வதற்காகக் கடல் கடந்து போய், இத்தனை நாட்கள் சுற்றினீர்களோ, அந்தக் காரியம் என்ன ஆயிற்று? அதை முதலில் சொல்லுங்கள். உங்களுடைய குனிந்த தலைகளும், பயந்த பார்வையும், நல்ல விடை கிடைக்குமென்று எனக்குச் சிறிதும் நம்பிக்கையூட்டவில்லையே?''

சோமனுடைய கேள்விக்கு அந்த மூன்று பேருமே பதில் கூறவில்லை. தங்களுக்குள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டு சொல்லத் தயங்கி நின்றனர்.

''என்னடா! ஒருவருக்கொருவர் பார்த்துத் திருட்டு விழி விழித்துக் கொண்டு நிற்கிறீர்கள்! எனக்குத் தெரியுமே! நீங்கள் போன காரியத்தைக் கோட்டை விட்டு விட்டுத்தான் வந்திருக்கிறீர்கள். உங்கள் நெற்றியில் தோல்விக் களை படிந்து போய்க் கிடப்பதைப் பார்த்தாலே தெரிகிறதே?'' என்று தன் முரட்டுக் குரலை உரத்த ஒலியில் எழுப்பி அவர்களை விரட்டினான் கொடும்பாளூரான். அவர்கள் தலைகள் இன்னும் தாழ்ந்தன.

''என்ன நெஞ்சழுத்தம் இந்தப் பயல்களுக்கு? நான் கேட்கிறேன். பதில் சொல்லாமல் தலையைக் குனிந்து கொண்டு ஊமை நாடகம் நடிக்கிறீர்களே!'' என்று முன்னினும் உரத்த குரலில் கூப்பாடு போட்டுக்கொண்டு புலி பாய்ந்து வருவதுபோல் அவர்கள் அருகே பாய்ந்து வந்தான் கொடும்பாளூர் மன்னன். கடுங் குளிரில் உதறல் எடுத்து நடுங்கும் மணிப்புறாவைப் போல் அந்த மூன்று பேருடைய உடல்களும் பயத்தால் நடுங்கின.

''குமார பாண்டியனைத் தேடிக் கண்டு பிடித்துக் கொன்றீர்களா, இல்லையா? வாயில் கொழுக்கட்டையா அடைத்திருக்கிறது? பதில் சொல்லேன்.''—இவ்வாறு ஆத்திரத்தோடு கத்திக்கொண்டே முன்னால் பாய்ந்து வந்த கொடும்பாளூரான் அந்த மூவரில் ஒருவனுடைய கன்னத்தில் பளீரென்று ஓங்கி அறைந்தான். அவனுடைய ஆத்திரத்தின் வேகத்துக்கு அளவு கூறியது அந்த அறை. வெட வெடவென்று நடுங்கிக் கீழே விழுந்துவிடும் போல் ஆடியது அறைவாங்கியவனின் உடல். பேசுவதற்





காக அவன் உதடுகள் துடித்தன. ஆனால் பயத்தினால் பேச்சு வரவில்லை.

"இப்படிக் கேட்டால் உன்னிடமிருந்து பதில் கிடைக்காது. இரு, அப்பனே! கேட்கிற விதமாகக் கேட்கிறேன். 'உண்டு' என்று பதில் வந்தால் உங்கள் தலைகள் உங்களுக்கு உண்டு. இல்லை என்று பதில் வந்தால் உங்கள் தலைகள் உங்களுக்கு இல்லை" என்று மறுபடியும் கையை மடக்கி ஓங்கிக்கொண்டு அறைவதற்கு வந்தான் கொடும்பாளூரான். அந்த அறை தன்மேல் விழுவதற்குள் பேசத் துடித்துக்கொண்டும் பேச முடியாமலும் நின்ற அவன் பேசி விட்டான்:

"ஈழ நாட்டை அடையுமுன்பே சற்றும் எதிர்பாராதவிதமாகச் 'செம்பவழத் தீவு' என்ற தீவில் குமார பாண்டியனைக் கண்டுபிடித்து விட்டோம். ஆனால் எங்கள் வாளுக்கு இரையாகிச் சாவதற்கு முன் மாயமாக மறைந்து எப்படியோ தப்பி விட்டான் அவன். அதன் பின்பு அந்தத் தீவு முழுதும் விடாமல் தேடிப் பார்த்தும் எங்களால் அவனைக் கண்டு பிடித்துக் கொல்வதற்கு முடியவில்லை."

குரலில் இருந்த நடுக்கத்தின் காரணமாக ஒவ்வொரு வார்த்தையையும் முழுமையான வார்த்தையாக, முழுமையான ஒலியோடு அவனால் கூற முடியவில்லை. வார்த்தைகள் ஒவ்வோர் எழுத்தின் ஒலிப்பிலும் தயங்கித் தேங்கி நடுங்கின. பசியோடு தன் கோரப் பெரு வாயைத் திறந்து நிற்கும் வேங்கைப் புலியின் காலடியில் நிற்கும் சிறிய மான் குட்டிகளைப் போல் அரண்டுபோய் நின்று கொண்டிருந்தனர் அந்த மூன்று பேரும். எதிர்பார்த்த பதிலில் கிடைத்த ஏமாற்றம் கொடும்பாளூர் மன்னனைக் கோபத்தின் உருவமாக மாற்றியது. அவனுடைய விழிவட்டங்களில் அனல் கனன்றது. சிங்க முகத்தில் சிவப்புப் பரவியது. நினைப்பிலும், முழங்காலைத் தொடும் நீண்ட கைகளிலும் வெறி வந்து குடி புகுந்தது. முகிலுறை கிழித்து வெளிப்பாயும் மின்னல் ஒளிக்கோடுபோல் அவன் தன் உறையிலிருந்து வாளை வெளியே உருவினான்.

பின்புறமிருந்து அரசுருடையானது கேலிச் சிரிப்பின் ஒலி கிளர்ந்து எழுந்தது: "இனிமேல் சந்தேகத்துக்கு இடமே இல்லை. கொடும்பாளூராருடைய திட்டம் முழுக்க முழுக்கத் தோற்று விட்டது. இப்போது அவருக்கு உண்டாகும் அதிகப்படியான கோபமே அவருடைய அதிகப்படியான தோல்விக்கு அடையாளம்தான்."

அரசுருடையானின் இந்தச் சொற்கள் கொடும்பாளூர் மன்னனின் கொதிப்பை மிகைப்படுத்தின. அவன் வலக்கையில் துடித்த வாளின் நுனியிலிருந்து சிதறி மேலெழும் ஒளிக்கொழுந்துகள் பயந்து நின்றுகொண்டிருந்த அந்த மூன்று பேருடைய கண்களையும் கூசச் செய்தன. அந்த ஒளியும், அதை உண்டாக்கும் வாளின் நுனியும் இன்னும் சில கணங்களில் தங்கள் நெஞ்சுக் குழியை நறுக்கிக் குருதிப் பெருக்கில் குளித்தெழுந்து விடப் போகிறதே என்று அவர்களுடைய தேகத்தின் ஒவ்வொரு அணுவும் புல்லரித்து நடுங்கிக் கொண்டிருந்தது. தங்கள் மூவரின் உயிருக்கும் மொத்தமாக உருப்பெற்ற காலன் அந்த வாள் வடிவில் மின்னிக் கொண்டிருப்பதை அவர்கள் புரிந்து கொண்டு விட்டார்கள். இன்னும் ஒரு நொடியில் அற்றுப்போக இருக்கும் உயிருக்கும் தங்களுக்கும்







நடுவேயிருந்த பந்தத்தைக் கூட ஏறக்குறைய அவர்கள் மறக்க ஆரம்பித்து விட்டார்கள்.

அந்தச் சமயத்தில் கொடும்பாளூரானின் கோபத்தைச் சோழ மன்னன் தணிக்க முன் வந்தான்.


“ஐயா! கொடும்பாளூர் மன்னரே! கோபத்தை இடம் தவறி, இலக்குத் தவறித் தகுதி தவறி, அநாவசியமாக இவர்களிடம் செலவழித்து என்ன பயன்? எவர்களுடைய தலைகளை வாங்க வேண்டுமோ, அவர்களுடைய தலைகள் கிடைக்காவிட்டால் அதைச் செய்வதற்குச் சென்ற இவர்களுடைய தலைகளை வாங்கி என்ன பெருமைப் பட்டுவிட முடியும்? புலி வேட்டையாடப் போனவன் குழிமுயலை அடித்துக் கொண்டு திரும்புகிற மாதிரிப் ‘பெரியது கிடைக்காததனால் சிறியதை எண்ணிச் சிறியதைச் செய்யும்’ அற்ப மகிழ்ச்சி பண்புக்குப் பலவீனம். வாளையும், கோபத்தையும், ஒன்றாகச் சேர்த்து உறையில் போடுங்கள். இப்போது நமக்குத் தேவையான பொருள் நிதானம். இந்தத் தடியர்கள் ஒன்றும் செய்யாமல் திரும்பி வந்திருப்பதைப் பார்த்ததும் எனக்கும் சினம் தான் உண்டாயிற்று. ஆனால் என்ன நன்மையைச் சினத்தால் அடையப் போகிறோம்? நெருப்பைத் தண்ணீர் அவித்து அணைக்கிறமாதிரி நெருப்பு, தண்ணீரை விரைவாக அவித்து அணைக்க முடியாது. வற்றி இல்லையாகும்படி செய்யவும் நீண்ட நேரமாகும். கோபம், குமுறல், பொறுமை போன்ற எதிர்மறையான குணங்கள் அன்பு, பொறுமை போல் காரியத்தை விரைவாகச் சாதித்துக் கொள்ளப் பயன்படாது. இந்த மாதிரி அறிவுரைக் கருத்துக்களெல்லாம் நம்மைப் போன்று சூழ்ச்சியும், போரும், மண்ணாசையும் விரும்புகிறவர்களுக்குப் பயன்படாதென்றாலும், இப்போதைக்குப் பயன்படுத்துவோம். நாம் கூறியதைச் செய்யாததற்காக இந்த மூன்று பேரையும் கொடும்பாளூர் அரண்மனையின் இந்த இரகசியமான இடத்தில் கொன்று அந்தக் கொலையை மறைத்து விடுவதும் நமக்கு எளிதுதான். ஆனாலும் வேண்டாம். கோபத்தையும், ஆத்திரத்தையும், பெரிய சாதனைகளுக்காக மீதப்படுத்திச் சேமித்து வைத்துக் கொள்வோம்.”

சோழனுடைய பேச்சு முடிவு பெற்று நின்றபோது கொடும்பாளூரானுடைய வாள் உறைக்குள் சென்று அடங்கிக் கொண்டது. வளர்த்துப் பால் வார்க்கும் நன்றிக்காகப் பாம்பாட்டியின் பெட்டிக்குள் அடங்கும் பாம்பு போல் சீறிக் கொண்டு வெளி வந்த சினமும் செயற்கையாக அடங்கி மனத்தில் போய்ப் புகுந்து கொண்டது. அதைப் பார்த்து அரசூருடையான் ஓசைப்படாமல் மெல்லச் சிரித்துக் கொண்டான். பரதூருடையானும், கண்டன் அமுதனும் அந்தக் கூட்டத்துக்குப் புதியவர்களாகையினால் அதற்குரிய அடக்கத்தோடு அமைதியாக இருந்தார்கள்.

கொடும்பாளூரானுடைய ஆத்திரத்துக்கு ஆளாகாமல், அந்த மட்டில் தங்கள் தலைகள் தப்பினவே என்ற நிறைவுடன் அந்த இடத்திலிருந்து மெதுவாக நழுவி நகர முற்பட்டனர் அம்மூன்று ஆட்களும்.

“நில்லுங்கள். எங்கே போகிறீர்கள் இவ்வளவு அவசரமாக?” சோழ மன்னனின் குரல் அவர்கள் நடையைத் தடைப்படுத்தி நிறுத்தியது. அடுத்த விநாடி கொடும்பாளூர் மன்னனைக் கையைப் பற்றி இழுத்துக் கொண்டு தனியே ஒரு மூலைக்குச் சென்றான் சோழ மன்னன். அந்த மூலையில் சித்திர வேலைப்பாடுகளோடு கூடிய பெரிய கிளிக்கூண்டு ஒன்று கைக்கெட்டுகிற உயரத்தில் தொங்கியது. கூண்டின் கதவு திறந்திருந்தது. கூண்டில் வசிக்கும் பல நிறக் கிளிகளும், கிளிக்குஞ்சுகளும், அதன் இருபுறமும் இருந்த மரச் சட்டங்களில் சுதந்திரமாக உட்கார்ந்திருந்தன. திறந்து விட்டதும் வெளியேறி அடைகிற நேரத்துக்குத் தாமாகவே கூண்டுக்குள் வந்து சேர்ந்துவிடும்படி பழக்கப்படுத்தப்பட்ட கிளிகள் அவை. அந்தக் கிளிக்கூண்டின் அடியில் வந்து நின்று கொண்டதும், “சொன்ன காரியத்தைச் செய்து கொண்டு வரத் திறமையில்லாத அந்த அறிவிலிகளை அழித்து ஒழித்து விடுவதற்காக என் கைகள் துடித்தன. அந்தத் துடிப்பை நிறைவேற்றிக் கொள்ள முடியாமல் அத்தனை பேருக்கும் நடுவில் என்னைத் தடுத்து அவமானப்படுத்தி விட்டீர்கள்” என்று ஏக்கமும், ஏமாற்றமும் மேலிட்ட குரலில் சோழனை நிமிர்ந்து பார்த்துச் சொன்னான் கொடும்பாளூரான். சோழன் அதைக் கேட்டு மெல்ல நகைத்தான்

“கொடும்பாளூர் மன்னரே! வேகமாகக் கையை ஓங்க வேண்டும். ஆனால் இலேசாக அறைய வேண்டும்.


நீங்கள்
மனக்கவலை
யடையும்
பொழுது,
தேநீர்
உங்களுக்கு
உற்சாக
மூட்டுகிறது
TEA BOARD INDIA
நான்தான் டீ

கல்லை எறிவதற்கு முன்னுள்ள வேகம் எறியும்போது மெதுவாகி விடுவது நல்லது.

"கடிதோச்சி மெல்லஎறிக நெடிது ஆக்கம்
நீங்காமை வேண்டு பவர்"

என்ற பொய்யில் புலவர் பொருளுரை நம்மைப் போன்ற அரசர்களை மனத்தில் வைத்துக் கொண்டு கூறப்பட்டது அல்லவா? இதோ கொஞ்சம் என் பக்கமாகத் திரும்பிப் பார்த்து விட்டு, நான் என்ன செய்கிறேனென்று கவனியுங்கள்."

சோழனின் இந்த வார்த்தைகளைக் கேட்டதும், சிறிது வெறுப்பு நிழலாடும் பார்வையோடு திரும்பி நோக்கினான் கொடும்பாளூர் மன்னன். மரச்சட்டத்திலிருந்து ஒவ்வொன்றாக மூன்று கிளிக் குஞ்சுகளை எடுத்துக் கூண்டுக்குள் விட்டுக் கதவை அடைத்தபின், குறிப்பாக எதையோ சொல்லும் பொருள் செறிந்த நோக்கினால் சோழ மன்னன் கொடும்பாளூரானின் முகத்தைப் பார்த்தான். அந்தப் பார்வையை விளங்கிக் கொள்ளாமல், "உங்களுடைய இந்தச் செயலுக்கு என்ன அர்த்தமென்று எனக்கு விளங்கவில்லையே?" என்று கேட்டான் கொடும்பாளூரான்.

"கொடும்பாளூர் மண்ணுக்கே குறிப்பறியும் உணர்ச்சி அதிகம் என்பார்கள். ஆனால் அந்த மண்ணை ஆளும் அரசராகிய உங்களுக்கே என் குறிப்புப் புரியவில்லையே?"

சோழன் குத்திக் காட்டிப் பேசியது வேதனையைக் கொடுத்தாலும், அந்தக் குறிப்புச் செய்கையின் பொருள் புரியக் கொடும்பாளூர் மன்னனுக்குச் சிறிது நேரமாயிற்று. அது புரிந்ததும்தான் அவன் முகத்தில் மலர்ச்சி வந்தது.

"புரிந்து விட்டது. அப்படியே செய்து விடுகிறேன்" என்று கிளிக் கூண்டையும் அடைபட்ட மூன்று குஞ்சுகளையும் பார்த்து விஷமத்தனமாகச் சிரித்துக் கொண்டே வெளியேறினான் கொடும்பாளூர் மன்னன். அடுத்த கால் நாழிகைக்குள் கொடும்பாளூர்க் கோட்டையின் ஒளி நுழைய முடியாத பாதாள இருட் சிறைகளின் இரகசிய அறை ஒன்றில் அந்த மூன்று ஒற்றர்களையும் கொண்டு போய் அடைத்து விட்டுத்தான் திரும்பி வந்தான் அவன்.

நீண்ட நேரமாகச் சூழ்ச்சிகளிலும், அரசியல் சிந்தனைகளிலுமே ஆழ்ந்து போயிருந்ததன் காரணமாக, வடதிசை யரசின் ட்டணியைச் சேர்ந்த அந்த ஐவருக்கும் களைப்பு ஏற்பட்டிருந்தது. ஒரு மாறுதல்-மன மகிழ்ச்சிக்குரிய ஒரு பொழுதுபோக்கு அப்போது அவர்களுக்குத் தேவைப்பட்டது. தங்களையும் தங்கள் அரசியல் கவலைகளையும் மறந்து ஏதாவதொரு கலையின் சுவை அனுபவத்தில் மிதக்க வேண்டும் போலிருந்தது அவர்களுக்கு.

"கொடும்பாளூர் மன்னரே! வெளியூர்களிலிருந்து வந்திருக்கும் நாங்கள் நால்வரும் இங்கேயிருக்கிறவரை உம்முடைய விருந்தாளிகள். உற்சாகமும், மன எழுச்சியும், வெற்றியில் நம்பிக்கையும், ஊட்டத் தக்க ஒரு பொழுதுபோக்கு இப்போது எங்களுக்குத் தேவை. அதற்கு ஏதாவது ஏற்பாடு செய்யுங்கள்" என்று சோழன் வேண்டிக் கொண்டான்.

"அப்படியானால் 'தேவராட்டி'யின் கொற்றவைக் கூத்துக்கு ஏற்பாடு செய்கிறேன். நீங்கள் எல்லோரும் கண்டுகளிக்க வேண்டிய கலை அது. இந்தச் சோர்ந்த சூழ்நிலையில் அதைக் கண்டு புதிய எழுச்சியும் பெற முடியும்" என்றான் கொடும்பாளூரான்.

"அது யார் தேவராட்டி?"

"அவள் இந்தக் கொடும்பாளூர் அரண்மனையில் தனிச் சிறப்பு வாய்ந்த ஒரு ஆடல் மகள். தன்னை மறந்து ஆடிக் கொண்டிருக்கும்போதே அவளுக்குத் தெய்வ ஆவேசத்தால் அருள் வந்து விடும். அந்தச் சமயத்தில் அவள் வாயிலிருந்து எதைப் பற்றியும் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம். தேவ சந்நதத்தில் வாய் சோர்ந்து நமக்கு வேண்டிய உண்மைகள் அவளிடமிருந்து வரும். கையில் திரிசூலம் ஏந்திச் சுழற்றிக் கொண்டே அவள் கொற்றவைக் கூத்தாடும்போது, அவளே காளியாக மாறிக் காட்சியளிப்பாள் நம் கண்களுக்கு."

"இது என்ன நம்ப முடியாத வேடிக்கையாக அல்லவா இருக்கிறது?"

"வேடிக்கையில்லை. அந்த ஆடல் மகள் இன்னும் தூய்மையான கன்னியாகவே வாழ்கிறாள். தேவதைகளுக்கு உள்ள மதிப்பு அவளுக்கு இந்த அரண்மனையில் உண்டு" என்று கொடும்பாளூர் மன்னன் பயபக்தியோடு மறுமொழி கூறினான்.

"அதற்கே ஏற்பாடு செய்யுங்கள். அந்தக் கொற்றவைக் கூத்தைக் காணும் பாக்கியத்தை நாங்களும் பெறுகிறோம்" – சோழ மன்னனின் விருப்பப்படி கொடும்பாளூர் மன்னன் கூத்தரங்கத்தை வகுத்து அவர்களை

யெல்லாம் அழைத்துக் கொண்டு போய் உட்கார்த்தினன். கொற்றவைக் கூத்துக்காகத் தயார் செய்யப்பட்டிருந்த அரங்கம் கோவில் போலத் தூய்மையாகப் புனிதப் பொருள்கள் நிறைந்திருந்தது. தீபச் சுடர்கள் பூத்திருந்தன. தூபக் கலசங்கள் கொடி படரச் செய்தன. எல்லோரும் பயபக்தியோடு அரங்கில் வீற்றிருந்தனர். மத்தளம் கொட்ட, வரிசங்கம் ஊத, அரங்கின் எழினி (திரைச் சீலை) மெல்ல விலகியது. ஆ! அதென்ன தோற்றம்? புவன கோடியைப் போக்குவரவென்னும் கவன ஊஞ்சலிட்டு ஆட்டும் கௌரியே அங்கு நிற்கிறாளா? தேவராட்டி மும்முகச் சூலம் ஏந்திய கோலத்தோடு அரங்கில் வந்து நின்றாள்.

அத்தியாயம் 27

திரிசூலம் சுழன்றது

சகல புவனங்களையும் ஆட்டுவிக்கும் தேவ தேவனைத் தன் இரு விழிகளால் ஆட்டி வைத்த உமையே சின்னஞ்சிறு கன்னிப் பெண்ணாய் உருக்கொண்டு கூத்துடை தரித்து வந்து நிற்பதுபோல் வலக்கையில் திரிசூலதாரியாய்க் கம்பீரமாக அரங்கில் காட்சியளித்தாள் தேவராட்டி. அவள் கொடும்பாளூர் அரசவையில் ஆடல் மகளாய்ப் பணி புரியும் ஒரு சாதாரண மானிடப் பெண்தான் என்ற உணர்வு, அரங்கில் கூடியிருந்த அரசர்களுக்கு ஏற்படவே இல்லை. இமையா விழிகளால் அரங்கின்மேற் சென்ற பார்வையை மீட்க மனமின்றி வீற்றிருந்தனர். அழகொழுக எழுதி நிறுத்திய உயிரோவியமாய்த் தோன்றிய அவள் கூத்தைத் தொடங்குவதற்கு முன்பே அவர்கள் மனங்களை வென்றுவிட்டாள்.

தேவராட்டியின் தோற்றத்தைப் பற்றி இங்கே சிறிது கூற வேண்டும். மறக்குலத்துப் பெண்கள் அணிந்து கொள்வது போல் முழங்கால்களுக்கு மேல் கச்சம் வைத்துக் கட்டிய புடைவை. பாதங்களுக்கு மேல் இரண்டு பாம்புகள் சுருண்டு கிடப்பதுபோல் பாடகங்கள். (ஒரு வகைச் சிலம்பு) இல்லையோ, உண்டோவெனத் திகழ்ந்த இடையில் மேகலை போல் இறுகப் பிணித்த புலித்தோல். கழுத்திலும், தோளிலும், முன்கைகளிலும் பலநிறப் பூமாலைகள் அணிந்திருந்தாள். கூந்தலைத் தலைமீதாக நிறுத்திய சங்கின் தோற்றம்போல் உச்சந்தலையில் தூக்கி அழகாக முடிந்து கொண்டிருந்தாள். அந்தக் கொண்டையைச் சிறிய கொன்றைப் பூச்சரம் ஒன்று அலங்கரித்துக் கொண்டிருந்தது. உடம்பெல்லாம் திருநீறு பூசிய வெண்மை. வலது கரத்தில் நீளமாக ஒளி மின்னும் கூர்மையான திரிசூலத்தைப் போல இடது கையில் சிறிதாக அழகாக ஒரு உடுக்கு. இந்தக் கோலத்தில் ஒரு பக்கமாகத் துவண்டு சிங்காரமாக அவள் நின்ற அபிநய அலங்காரம் பார்க்கும் கண்களிலெல்லாம் தெய்வத்தைப் படரவிட்டது. கொற்றவைக் கூத்துக்குரிய வீராவேசத்தோடு தேவராட்டி தன் ஆடலைத் தொடங்கினாள். பாறைகளுக்கு நடுவேயுள்ள சுனைத் தண்ணீரில் கூழாங்கல்லை வீசி எறிவது போன்ற இன்ப ஒலி கிளர்ந்தது. கால் பாடகத்தின் உள்ளேயிருந்த பரல்கள் (சிறு சிறு மணிகள்) ஒலித்தன. சூலம் ஒளிக்கக்கிச் சுழன்றது. துள்ளியது.

ஆட்டத்தின் ஒன்பது வகைக் கூத்துக்களில் ஒன்றாகிய 'வீரட்டானக் கூத்தின்' கம்பீரமான துரிதகதியில் தெய்வ ஆவேசத்தோடு சுழன்று சுழன்று ஆடினாள் அந்தப் பெண். காளிதேவியாகிய கொற்றவையே அந்தப் பெண்ணின் உடலில், உணர்வுகளில் தன்மயமாகிக் கலந்து விட்டதுபோல் ஒரு தத்ரூபம் அவள் ஆடலில் இருந்தது. வீரட்டான அபிநயத்தின் முடிவில், முத்திரை பிடித்துக் காட்ட வேண்டிய 'குனிப்பு' என்னும் விகற்பத்தைத் தாண்டி அற்புதமான 'உள்ளக் கூத்தில்' தன்னை மறந்து லயித்துக் கொண்டிருந்தாள் அவள். தெய்விகம் கலையாக மாறித் திகழ்ந்து கொண்டிருந்தது அவளிடம்.

சோழ கோப்பரகேசரி தன்னை மறந்து தன் நினைவை இழந்து பார்த்துக் கொண்டிருந்தான். கண்டன் அமுதன், அரசூருடையான், பரதூருடையான் எல்லோரும் ஏறக்குறைய அதே நிலையில்தான் இலயித்திருந்தார்கள். ஆனால் கூத்து அரங்குக்கு ஏற்பாடு செய்த கொடும்பாளூர் மன்னனின் கண்கள் மட்டும் ஒன்றிலும் ஊன்றிப் பார்க்காமல் நாற்புறமும் அலைபாய்ந்து கொண்டிருந்தன. கனற் கோளங்களைப் போன்ற

அவனுடைய பெரிய கண்கள், அரங்கின் மேலும், தன்னோடு உடன் வீற்றிருந்த சோழன் முதலியவர்கள் மேலும், அரங்கின் வெளிப்புறத்து நுழைவாயில் மேலும், மாறி மாறி நிலைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தன. இயற்கையிலேயே அவனுக்கு அப்படி ஒரு சுபாவம். குட்டி போட்ட பூனை மாதிரிச் சாதாரணமான காரியங்களுக்காகக் கூடப் பதறி அலைபாய்கின்ற மனம் அவனுக்கு. கலைகளை அனுபவிக்க ஆழ்ந்து ஈடுபட்டுத் தோயும் மனம் வேண்டும். இந்த மாதிரி அலை பாயும் மனமுள்ளவர்களால் எந்தக் கலையிலும் ஈடுபட்டு இலயிக்க முடியாது. கொடும்பாளூரானிடம் அந்த ஈடுபாடு இல்லை என்பதை அவன் கண்களே விளக்கின. குணரீதியாகவே இப்படி எதிலும் ஆழ்ந்து ஈடுபட முடியாதவர்கள் முன் கோபக்காரர்களாகவும் ஆத்திரமும், உணர்ச்சி வெறியும் அடைபவர்களாகவும் இருப்பார்கள். தேவராட்டியின் ஆடல் சுவையனுபவத்தின் உயர்ந்த எல்லையில் நிகழ்ந்து கொண்டிருந்தது. அருளாவேசமுற்றுத் தானே கொற்றவை என்ற முனைப்பால் சுழன்று சுழன்று ஆடிக் கொண்டிருந்தாள். அவள் மட்டுமா ஆடிச் சுழன்றாள்? அவள் ஆடும்போது கொண்டையாக முடிந்திருந்த சடா மகுடத்தின் கொன்றை மலர்க் கொத்தும், பிறைச் சந்திரனைப் போல் தங்கத்தில் செய்து புனைந்திருந்த அணியும், செவிகளின் நாக குண்டலங்களும் எல்லாம் ஆடிச் சுழன்றன.

பார்த்துக் கொண்டேயிருந்த சோழனுக்குக் கண்களில் நீர் பனித்துவிட்டது. உள்ளம் நெக்குருகி உடல் சிலிர்த்தது. மகாமன்னனான கோப்பரகேசரி பராந்தக சோழன் எத்தனையோ அற்புதமான ஆடல்களை உறையூரிலும், காவிரிப்பூம்பட்டினத்திலும் கண்டிருக்கிறான். நாட்டியக் கலையில் தலைக்கோல் பட்டமும் (அக்காலத்தில் நாட்டியக் கலையில் சிறந்த ஆடல் மகளிர்க்கு அரசனால் அளிக்கப்படும் விருதுப்பெயர்) பொற்பூவும், பொன் மோதிரமும் பெற்ற பெரிய பெரிய ஆடல் மகளிரின் ஆடல்களையெல்லாம் அவன் கண்டிருக்கிறான். அவையெல்லாம் அவன் உணர்வுக்குக் கிளர்ச்சி மட்டுமே ஊட்டின. அவைகளில் இல்லாத — அவைகளினும் மேம்பட்ட ஏதோ ஒன்று இந்தத் தேவராட்டியின் ஆடலில் இருப்பதாக அவனுக்குத் தோன்றியது.

தேவராட்டியின் ஆடற் கலையில் வெய்யில் படாத நீரிற் குளிர்ச்சிபோல் தெய்விகப் பண்பு விரவியிருந்தது. நீரைச் சுட வைத்துக் குளிர்ச்சியை நீக்கிச் செயற்கையாகச் சூடாக்குவது போல் பாட்டு, கூத்து, புலமை, ஒவ்வொரு துறையையும், அறிவின் வெம்மையால் சூடேற்றி அவைகளிலிருக்கும் தெய்விகப் பண்பை நீக்கிவிடும் போது அவை சாதாரணமாகி விடுகின்றன. அரங்கில் ஆடிக் கொண்டிருந்த அந்தத் தேவராட்டியின் முகத்தைப் பார்க்கும்போதே மலையரையன் மகளாகத் தோன்றிய உமையின் கன்னித் தவக்கோலம்தான் நினைவுக்கு வந்தது. எப்போதும் ஏதோ



பெரிய இலட்சியங்களுக்காகக் கனவு கண்டு கொண்டிருப்பதுபோல் இடுங்கிய கண்கள், நீள முகம், கன்னிப்பருவத்துப் பேதைமையின் அழகு நிழலாடும் நெற்றி, வடிந்த நாசி, வளர்ந்த புருவங்கள். கரந்து நிற்கும் சிரிப்பு, கனிந்து சரிந்த கன்னங்கள்.

தேவராட்டி சந்நத நிலையில் அருளுற்று ஏதேதோ பிதற்றினாள். தங்களுடைய கூட்டணியைப் பற்றியும், தென் திசைப் படையெடுப்பைப் பற்றியும், அதில் வெற்றி ஏற்படுமா; தோல்வி ஏற்படுமா என்பதைப் பற்றியும், தேவராட்டியிடம் குறி கேட்டு நிமித்தம் தெரிந்துகொள்ள வேண்டுமென்று சோழன் எண்ணியிருந்தான். தனக்குப் பழக்கமில்லாத காரணத்தால் கொடும்பாளூர் மன்னனைவிட்டே அவைகளைத் தேவராட்டியிடம் கேட்கச் செய்யலாமென்று மனத்துக்குள்

ஒரு முடிவுக்கு வந்தவனைத் தன் பக்கத்தில் கொடும்பாளூரான் வீற்றிருந்தஆசனத்தைப்பார்த்தசோழன் ஏமாற்ற மடைந்தான்.

அங்கே கொடும்பாளூரானைக் காண வில்லை. அவன் வீற்றிருந்த இருக்கை காலியா யிருந்தது. மற்ற மூவரையும் பார்த்தான். அவர்கள் இந்த உலகத்தையே மறந்து தேவராட்டியின் கூத்தில் ஆழ்ந்திருந்தார்கள். 'அவ்வளவு அற்புதமான கூத்தை இரசிக்காமல் நடுவில் எழுந்திருந்து, கொடும்பாளூரான் எங்கே போயிருப்பான் என்ற கேள்வியும், சந்தேகமும் சோழன் மனத்தில் உண்டாயின. சோழனுடைய கண்கள் கொடும்பாளூரானைத் தேடிச் சுழன்றன. அவனைக் காணோம். கூத்தரங்கத்தின் வாயிற்புறம் போய் அங்கு யாராவது ஆட்கள் இருந்தால் அவர்களை அனுப்பிக் கொடும்பாளூரானை அழைத்துக் கொண்டு வரச் செய்யலாமென்ற நோக்கத்தோடு சோழன் மெல்ல எழுந்தான்.

ஆனால் அந்தக் கணமே அவன் எழுந்திருக்க வேண்டிய அவசியமில்லாமல் போய்விட்டது. கொடும்பாளூரானே மிக வேகமாக வாயிற்புறத்திலிருந்து கூத்தரங்கத்துக்குள் வந்து கொண்டிருந்தான். அவன் முகச்சாயலும், நடையின் வேகமும், பரபரப்பையும், அவசரத்தையும் காட்டின. வெளியே செல்வதற்காக எழுந்திருந்த சோழன் மறுபடியும் இடத்திலேயே உட்கார்ந்து கொண்டான். வேகமாக உள்ளே பிரவேசித்த கொடும்பாளூர் மன்னன் சோழன் காதருகே போய்க் குனிந்து மெதுவாகப் பேசினான்: "அரசே! தென் பாண்டி நாட்டின் பலவீனத்தை மிகைப்படுத்தக் கூடிய வேறொரு செய்தி சற்று முன்புதான் என் காதுக்கு எட்டியது."

"அப்படி என்ன செய்தி அது?" சோழனும் மெதுவான குரலிலேயே கேட்டான். "சில நாட்களுக்கு முன்னால், இடையாற்றுமங்கலம் மகாமண்டலேசுவரர் மாளிகையில் பாதுகாக்கப்பட்டு வந்த பாண்டிய மரபின் சுந்தர முடியும், வீர வாளும், பொற் சிம்மாசனமும், திடீரென்று காணாமற் போய் விட்டனவாம்."

"யார் வந்து கூறினார்கள், இந்தச் செய்தியை?"

"தெற்கேயிருந்து நம் ஒற்றர்களில் ஒருவன் வந்து கூறினான். நீங்களெல்லாம் கூத்தில் ஈடுபட்டிருந்தபோது இடையில் நான் கொஞ்சம் வெளியே எழுந்து சென்றேன். அதே நேரத்துக்கு அந்த ஒற்றனும் வந்து சேர்ந்ததனால் அவனை அங்கேயே நிறுத்திச் செய்தியை விசாரித்துக் கேட்டுக் கொண்டு வந்தேன்."

"ஒருவேளை இந்தச் செய்தி இப்படியும் இருக்கலா மல்லவா? நம்மைப் போன்ற வடதிசையரசர்கள் தெற்கே படையெடுத்துத் தென்பாண்டி நாட்டை வென்று விட்டால் இடையாற்றுமங்கலத்தில் போய் முடியையும், வாளையும், சிம்மாசனத்தையும் தேடி எடுத்துக் கொண்டு விடுவோமோ என்பதற்காக இப்படி ஒரு பொய்ச் செய்தியை மகாமண்டலேசுவரர் பரப்பியிருப்பார்."

"இருக்காது, அரசே! வந்திருக்கும் ஒற்றன் கூறுவதைப் பார்த்தால் உண்மையாகவே அரசுரிமைப் பொருள்கள் கொள்ளை போயிருக்கலாம் என்றுதான் தோன்றுகிறது."

"எப்படியிருந்தாலும் நாம் படையெடுப்புக்கு ஏற்பாடு செய்யத்தான் போகிறோம். நமக்கு ஏன் இந்தக் கவலை?"

சோழனும், கொடும்பாளூரானும் மேற்கண்டவாறு மெதுவான குரலில் பேசிக் கொண்டிருந்தபோதும், தேவராட்டியின் கொற்றவைக் கூத்து நடந்து கொண்டுதான் இருந்தது. அவள் வலக்கையில் திரிசூலத்தின் சுழற்சியும், இடக்கையில் உடுக்கின் ஒலியும் குன்றவில்லை; குறையவில்லை.

சோழனும் கொடும்பாளூரானும் வீற்றிருந்த இடத்தின் பின்புறத்துச் சுவரில் அவர்கள் தலைக்குமேல்மானின் கண்களைப் போல் துவாரங்கள் அமைந்த பலகணி ஒன்று இருந்தது.

அருளூற்று ஆடிக்கொண்டேயிருந்த தேவராட்டி திடீரென்று இருந்தாற் போலிருந்து அந்த மான்விழிப் பலகணியைச் சுட்டிக்காட்டி 'வீல்' என்று அலறிக் கூச்சலிட்டாள். அந்தப் பலகணியை நோக்கித்தான் திரிசூலத்தை ஓங்கிச் சுழற்றினாள். பற்களைக் கடித்தாள். கால்களை உதைத்தாள். திரிசூலத்தைக் குறி பார்த்துச் சுழற்றி, அந்தப் பலகணியை நோக்கி எறிந்தாள்; எல்லோரும் அவளுடைய கோபத்தின் காரணம் விளங்காமல் எழுந்திருந்து அந்தப் பலகணியைப் பார்த்தபோது, அதன் நடுத்துவாரத்திலிருந்து ஒளி மின்னும் இரு கண்கள் வேகமாகப் பின்னுக்கு நகர்ந்தன.

(தொடரும்)


பிரீப்மென் மற்றும்
ஸுலேகா
இன்றைய
மிகவும்
நம்பகமான
பேனுக்கள்
பலவித ரகங்களிலும் கவர்ச்சியான
தோற்றத்திலும் எங்கும் விற்கப்படும்
Sole Distributors :
PENMEN'S INDUSTRIAL
SERVICES
Kandivli, Bombay (S. D.)


வியக்கத்தக்க
நீளமான
செழிப்பான
கூந்தல்
ரோமா
கூந்தல் வளர்க்கும் டானிக்
Roma
தயாரிப்பாளர்கள்:



படித்துப் பாருங்கள்

"பொங்கும் மங்களம்"

"ஒரு அழகான வீதியில் எதிரெதிரே இரண்டு வீடுகள். எதிரெதிரே இரண்டு ஜன்னல்கள். இந்தப் பக்கத்து ஜன்னலில் வீட்டுக்குள்ளேயே அடைந்து கிடக்கும் நொண்டி இளைஞன். அந்தப் பக்கத்து ஜன்னலில் ஊமைப் பெண். ஜன்னல் வழியே பார்த்தால் ஒருவருடைய முகம் தான் மற்றவருக்குத் தெரியும். இளைஞன் ஒரு கதாசிரியன். அந்தப் பெண்ணின் மனத்தைக் கவர்ந்த கதாசிரியன். அவன் இரண்டு காலுமில்லாத நொண்டி என்று அவளுக்குத் தெரியாது. அழகிய அந்தப் பெண் ஊமை என்று அவனுக்குத் தெரியாது. ஒருவரைப் பற்றிய பலவீனம் மற்றவருக்குத் தெரியாதவரைக் காதல் கடித மூலமும், கண் பார்வைகளின் மூலமும் ஜன்னல்களின் துணையால் வளருகிறது. அவள் ஊமை என்று அவனும், அவன் நொண்டி என்று அவளும் அறிந்தபோது உணர்வுகள் வேகமாக முறிந்து விடுகின்றன. இரண்டு ஜன்னல்களும் மூடிக் கொண்டன. ஊமைப் பெண்ணுக்கு வேறிடத்தில் திருமணமாகி விடுகிறது."

இந்தச் சிறுகதைத் தொகுதியில் கடைசிச் சிறுகதை இது. இதைத் தவிர இன்னும் பதினொரு சிறுகதைகள் அடங்கியிருக்கின்றன. கதாசிரியர் வாசவனின் கற்பனை, கதையின் உரு, நடை, எல்லாவற்றிலுமே ஒரு புதிய அழகு இருக்கிறது. அவருடைய கதைகள் எல்லாவற்றிலும் தனித்தன்மையைக் காண்கிறோம். காதல் தத்துவத்தை விளக்கும் 'இரண்டாவது மனிதன்' மனத்தின் விகாரங்களைச் சித்திரிக்கும் 'ஆத்ம சிகிச்சை,' தெய்வ நம்பிக்கைக்கு வலுவூட்டும் "கடவுளின் கண்கள்"—'சாட்சி' மறைத் தீ—ஆகிய கதைகள் யாவுமே சிறப்பானவை.

படிப்பதால் இன்பம், பயன், சிந்தனை, பொழுது போக்கு, ஆகிய நான்கும் தரும் கதைத் தொகுதி இது.

எழுதியவர்: வாசவன், கலைஞன் பதிப்பகம், சென்னை-17. விலை: ரூ. 2.

இன்பமாக வாழ வேண்டுமா? நல்வாழ்வுக்கு நலமான யோசனைகள் தூக்கம் ஓர் கலை

இம் மூன்று நூல்களின் தலைப்பைப் பார்க்கும்பொழுதே படிப்பவர்களுக்கு இன்பமாக வாழ வேண்டும் என்ற ஆசையோடு, நல்வாழ்வுக்கு, நலமான யோசனைகள் இருப்பின், அவை என்னவென்பதை அறிந்துகொள்ள வேண்டும் என்ற ஆவலும் எழக் கூடும். ஆவலைக் கிளறும் இந்தச் சிந்தனையில் லயித்து விட்டால் தூக்கம் கெடக்கூடும் அல்லவா? அதற்காகவே, 'தூக்கம் ஓர் கலை' என்னும் நூலையும் ஆசிரியர் ஆர். எஸ். மணி தந்துள்ளார். இம்மூன்று நூல்களிலும் பயன் அளிக்கும் பல விஷயங்கள் இருக்கின்றன என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால், ஒரே சீரான பக்கத்துடன், ஒரே மாதிரியான விலையில் நூல்களைத் தொகுக்க வேண்டும் என்ற ஆர்வமோ என்னவோ, சொன்ன விஷயங்களையே திரும்பத் திரும்பத் 'தோசை திருப்பல்' முறையில் சொல்லி வளர்த்தப்பட்டிருக்கிறது.

பிரசுரம்: மின்னொளிப் பதிப்பகம், சின்னத்தம்பி தெரு, சென்னை—1. ஒவ்வொன்றும் விலை: ரூ. 1-25.

பத்மாவதி சரித்திரம்

தமிழில் நாவல்கள் வரத் தொடங்கிய காலத்தில், மாயூரம் வேதநாயகம் பிள்ளை அவர்கள் எழுதிய "பிரதாப முதலியார் சரித்திரம்" வெளி வந்து பிரசித்தி அடைந்தது. பிறகு பி. ஆர். ராஜமையர் எழுதிய "கமலாம்பாள் சரித்திரம்," அ. மாதவையர் இயற்றிய "பத்மாவதி சரித்திரம்," வரகவி திரு அ. சுப்பிரமணிய பாரதியார் இயற்றிய "ஜடாவல்லவர்" ஆகிய நாவல்கள் அடுத்தடுத்து வெளி வந்தன. அதிலிருந்து தமிழில் பெருங் கதை படிக்கும் ஆர்வம் நம் மக்களிடையே பெரும் அளவுக்கு வளர்ந்தது; பிறகு தொடர்ந்து பல நாவல்கள் வெளிவந்தன.

ஆகவே, நாவல் சகாப்தத்தில் மைல் கற்களாக விளங்கின சில நாவல்களில் "பத்மாவதி"யும் ஒன்று என்று கூறலாம். தமிழ்நாட்டுக்குக் குடும்ப நிகழ்ச்சிகளை ஆதாரமாகக் கொண்டு புனையப்பட்ட பெருங் கதை இது. மனித உள்ளங்களின் உயர்வு தாழ்வுகளையும், விருப்பு வெறுப்புகளையும், ஆசாபாசங்களையும் அற்புதமாக எடுத்துக்காட்டியிருக்கிறார் ஆசிரியர். நம் நாட்டுச் சூழ்நிலையிலேயே உருவான சம்பவங்கள் பல கதையோடு பின்னிக்கொண்டு சுவையூட்டுகின்றன. இக் கதையில் உருவாகியிருக்கும் பாத்திரங்கள் யாவும் உயிரும் உணர்வும் கொண்டு நம்மோடு பழக ஆரம்பித்து வருகின்றன. மேற்படி பாத்திரங்களின் வாயிலாக ஆசிரியர் பல அரிய கருத்துக்களையும் நீதிகளையும் எடுத்துக் கூறுகிறார். சுமார் அறுபது ஆண்டுகளுக்கு முன்பு, தமிழ் வசன நடை அபிவிருத்தியடைவதற்கு முன்பு எழுதப் பட்ட நூல் என்பதை மனத்தில் பதித்துக் கொண்டு படித்தால் பெரிதும் ரசிக்கலாம்.

விப்கோ மலிவுப் பதிப்பு மலராக வந்திருக்கும் இந் நூல் கவர்ச்சியாக அமைந்திருப்பது அதிசயமில்லை.

பிரசுரம்: இ விட்டில் பிளவர் கம்பெனி, 8, ரங்கநாதன் ரோடு, தியாகராயநகர், சென்னை—17. விலை: ரூ. 1-80.

ஒரே ஒரு நிமிஷம்

"டிக் டிக்"


தினந்தோறும் மாலையில் '21 பி'யில் 5-30க்கு ஏறுவேன் நான். 'க்யூ.எம்.ஸி'யில் இறங்கிக் கடற்கரைச்சாலையின் நடைபாதையில் சற்றுத் தூரம் நடப்பேன். தந்திக் கம்பிகளில் வரிசையாக உட்காரும் குருவிகளைப் போல் நடைபாதைக்குப் பக்கத்தில் அமைக்கப்பட்டிருக்கும் சிறிய மதிலில் மாணவர்களும், மாணவிகளும், வயது முதிர்ந்தவர்களும் இளைஞர்களும், கணவன் மனைவிகளும், காதலன் காதலிகளுமாக அமர்ந்திருப்பார்கள். நானும் அவர்களுள் ஒருவனாகச் சேர்ந்து கொள்வேன்.

நான் உட்கார்ந்துகொண்ட அதே சமயத்தில் சொல்லி வைத்தாற் போல, அந்த நீல நிற மோட்டார் வந்து நிற்கும். அதிலிருந்து ஒரு மதிவதனம் எனக்குத் தென்படும். அந்த வதனத்தின் இரண்டு அகன்ற விழிகள் என்னை விழுங்கி விடுவது போல் ஒரு கணம் பார்க்கும். அப்புறம் வேறு பக்கம் திரும்பிவிடும். ஆனால் நான் மட்டும் அந்த முகத்தை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருப்பேன். மணிக் கணக்காக, கார் கிளம்பும் வரை, நேரம் போவதே தெரியாமல் பார்த்துக் கொண்டிருப்பேன்.

முதன் முதலில் அவளைப் பார்த்த போது அவளருகே முன் சீட்டில் அமர்ந்திருந்தவன் அவள் கணவனாக இருக்குமோ என்று நான் நினைத்ததுண்டு. அப்போது அவனிடம் பொறாமைப் பட்டேன். ஆனால் இரண்டாவது நாளே அவன் காரை விட்டு இறங்கி நடைபாதையில் உலாவ ஆரம்பித்த போது அருகேயிருந்து உருவ ஒற்றுமையைக் கண்டேன். அண்ணனாக அல்லது தம்பியாக இருக்க வேண்டும் என்று நிர்மானித்தேன்.

சீக்கிரத்திலேயே இது ஊர்ஜிதமாயிற்று. அவன் என் அருகே வந்து உட்கார்ந்தான். குளிரும் சூழ்நிலையில் ஆரம்பித்துக் குடும்ப விஷயத்திலும் புகுந்து விட்டோம். ரொம்பச் சாமர்த்தியமாக, நாசுக்காக நான் விசாரித்தேன், 'அவள் யார்' என்று. அவனுடைய தங்கையாம்! இன்னும் கல்யாணமாகவில்லையாம்! சற்றுத் தூரத்தில் அலைபுரண்ட கடல் அப்படியே என் உள்ளத்துக்குள் புகுந்து விட்டதோ என்று தோன்றியது எனக்கு.

நாட்கள் சென்றன. பேச்சு வளர்ந்தது. நட்பும் வளர்ந்தது. இப்போதெல்லாம் தூரத்திலிருந்தபடியே நான் அவளுக்குக் கண்களால் விடை கொடுத்து அனுப்புவதில்லை. அவன் என்னிடமிருந்து விடை பெற்றுக் கொண்டு கிளம்பும் போது, நானும் பின்னோடு எழுந்து நடப்பேன். அவளை வழி அனுப்பப் போவது போல் காருக்கருகே சென்று அவளிடமும் இரண்டொரு வார்த்தை பேசுவேன். அவள் அதிகமாகப் பதில் பேசமாட்டாள். அதனால் பரவாயில்லை! அருகே சென்று பார்க்கும்போதுதான் அவள் முகம் எவ்வளவு பொலிவுடன் திகழ்கிறது? எப்போதாவது வாய் திறந்து என்னுடன் ஒரு வார்த்தை பேசி விட்டால், அன்று இரவு முழுவதும் தூக்கமே பிடிக்காது. 'ஏன் இப்படிப்பட்ட அழகிக்கு இன்னும் கல்யாணம் ஆகவில்லை? அட அசடே! இது கூடவா தெரியவில்லை? உன்னைக் கண்டாள்; காதலித்தாள்: கல்யாணத்துக்குக் காத்திருக்கிறாள்' என்று உள்ளம் கேட்கும்; பதிலும் சொல்லும். அப்போது எனக்கு உற்சாகம் கரை புரளும். கல்யாணமான பின்னர் அவளைக் காரிலேயே உட்கார்ந்திருக்க விடமாட்டேன். கீழே இறங்கச் சொல்லிக் கை கோத்துக் கொண்டு மணல் பரப்பிலே நடந்து சென்று கடல் அலைகள் அவள் பட்டுப்



பாதங்களைத் தழுவும் காட்சியைக் கண்டு மகிழ்வேன்! கற்பனை எங்கெங்கோ பறந்து சென்றது.

மறுநாள் கொஞ்சம் நேரம் கழித்துப் போனேன். ஆபீஸில் அலுவல்கள் அதிகம். எனக்கு முன்னமேயே நீலக் கார் வந்திருந்தது. கதவிலே அவள் புடவை சிக்கியிருந்தது போலும்! அதை விடுவித்துக்கொள்ள அவள் தன் பக்கத்துக் கதவைத் திறந்தாள். என்னைப் பார்த்ததும் அவள் அவசரம் அவசரமாகக் கதவை மூடிக் கொண்டாள். அதற்குள் நான் பார்க்க வேண்டியதைப் பார்த்து விட்டேன். அவளுக்குக் கால்கள் இல்லை. நடப்பதற்கு உதவியாக இரண்டு கொம்புகளை அங்கே வைத்திருந்தாள்!

நான் அதைக் கவனித்ததாகவே காட்டிக் கொள்ளவில்லை. வழக்கம் போல் அவர்களுடன் ஏதேதோ பேசினேன். ஊர் வம்பெல்லாம் அளந்தேன். உலக விவகாரங்களை அலசினேன்.

மறுநாள் முதல் நான் கடற்கரைப் பக்கமே போவது கிடையாது!



பாண்ட்ஸ்

ட்ரீம்ப்ளவர் டால்க்

**உபயோகித்தால்
நாள் முழுவதும்
புத்துணர்ச்சியுடனும்
நறுமணத்துடனும்
இருக்கலாம்**

மிகுந்த சுகமூட்டுவதும், நறுமணம் வாய்ந்ததுமான பாண்ட்ஸ் ட்ரீம்ப்ளவர் டால்கம் பவுடர் உபயோகித்தால்; நீங்கள் கொடிய வெப்பத்திலும், புழுக்கமான நாட்களிலும்கூட இனிய உணர்ச்சியுடன் இருக்கலாம். மென்மையான இந்த டால்கம் பவுடரை உடம்பில் தூவிக்கொண்டால், எரிச்சலூட்டும் வியர்வைத் தொல்லை ஒழியும். நாள் முழுவதும் புதுமலரைப்போல் இனிய புதுமையுடன் இருக்க பாண்ட்ஸ் ட்ரீம்ப்ளவர் டால்கம் பவுடர் உபயோகியுங்கள்.

சீஸ்ப்ரோ-பாண்ட்ஸ் இன்கார்ப்பரேடட் (வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு. எஸ். அமெரிக்காவில் இணைக்கப்பெற்றது)

சோக்ரதர் சம்வாதங்கள்

க. சந்தானம்

5. காவலர் கல்வி

(பங்கெடுத்துக் கொள்ளுவோர்: சோக்ரதர், களக்கோன், ஆதிமந்தேசன் முதலானோர்.)

சோக்: அவர்கள் எம்முறையில் கல்வி கற்பிக்கப்படவேண்டும்? பரம்பரையான முறையைக் காட்டிலும் சிறந்ததுண்டா? அதற்கு இரண்டு பாகங்கள். தேகத்துக்கு உடற் பயிற்சி, ஆன்மாவுக்கு மனப் பயிற்சி.

ஆதி: உண்மை.

சோக்: முதலில் மனப்பயிற்சியை எடுத்துக்கொண்டு, பின்னர் உடல்பயிற்சிக்குப் போகலாமா?

ஆதி: உமது விருப்பம் போல் செய்யலாம்.

சோக்: மனப் பயிற்சியில் சங்கீதமும், சாகித்தியமும் அடங்கியுள்ளன அல்லவா!

ஆதி: அடங்கியுள்ளன.

சோக்: சாகித்தியம் சத்தியமானதும், அல்லாததாகவுமிருக்குமன்றோ!

ஆதி: ஆமாம்.

சோக்: இளைஞர் இருவிதத்திலும் பயிற்சி பெற வேண்டுமல்லவா?

ஆதி: உமது பொருள் விளங்கவில்லையே?

சோக்: குழந்தைகளுக்கு முதல்முதலில் கட்டுக்கதைகள் சொல்லிக் கல்வி கற்பிக்கத் தொடங்குகிறோமல்லவா? அவற்றின் உட்கருத்து ஓரளவு உண்மையாக இருக்கும் சம்பவங்கள் கற்பனையால் உண்டாக்கப் பட்டவைகளில்லையா?

ஆதி: உண்மை.

சோக்: எதிலும் ஆரம்பம் மிகவும் முக்கியமானது. இளம் பருவத்தில் இது அதிகப் பலனுடையது. அப்பொழுதே மனிதனின் குணம் உருவாகின்றது.

ஆதி: நிச்சயமாகவே.

சோக்: அந்தக் காலத்தில் ஊர்பேர் தெரியாதவர்கள் கட்டிய உபயோகமற்ற கதைகளைக் கேட்டு நாம் விரும்பாத நெறிகளை ஏற்கும்படியாக விட்டு விடலாமா?

ஆதி: கூடாது.

சோக்: ஆதலால் முதன் முதலில், கதை கட்டுவோர் மீது கட்டுப்பாடு செய்ய வேண்டும். பரிசிலகர்களை நியமித்து, நல்ல கதைகளை ஏற்றுத் தீயவைகளை விலக்க வேண்டும். தாய்மார்களும், வளர்ப்புத் தாய்களும் நல்ல கதைகளைச் சொல்லிக் குழந்தைகளின் மெல்லிய மனங்களை வளர்க்க வேண்டும். உடலை வளர்ப்பதை விட இதில் அதிகக் கருத்துடையவர்களாக இருக்கவேண்டும். அப்படிச் செய்ய வேண்டுமாயின், தற்சமயம் நிலவி வரும் கதைகளில் பெரும்பான்மையை நிராகரிக்க வேண்டி வரும்.

ஆதி: எவ்விதக் கதைகளைப் பற்றிக் கூறுகிறீர்?

சோக்: நமது மாபெரும் கவிகள் ஹோமர், ஹெஸியத் போன்ற பிரசித்தமான புராணிகர்கள் புனைந்திருக்கும் கதைகளை.

ஆதி: எம்மாதிரிக் கதைகளைக் குறிப்பிடுகிறீர்? அவற்றின் தீமைகள் என்ன?

சோக்: தெய்வங்களையும் வீர புருஷர்களையும் வர்ணிக்கும்பொழுது, பொய்யும் அநீதியும் அவர்கள்மீது சுமத்துவதைக் கண்டிக்க வேண்டாமா!

ஆதி: வேண்டும்.

சோக்: தெய்வங்கள் தமக்குள் சண்டை செய்யும் கதைகளையெல்லாம் தடுக்க வேண்டும். அவை உண்மையாயிருக்க முடியாது. தவிர, நமது காவலர்கள் தமக்குள் சண்டை போடுவதைக் கொடிய பாவமாகக் கருத வேண்டும். தேவர்களும், ராக்ஷஸர்களும், வீரர்களும் தமக்குள்ளும், உறவினர்களோடும் பகை கொண்டு போர் புரிவதைப் பற்றிப் பாடுவதோ, சித்திரம் எழுதுவதோ குற்றமாக வேண்டும். நமது ராஜ்யத்தில் எந்தப் பிரஜையும், மற்றோர் பிரஜையை வெறுப்பது தகாதென்றும், அப்படி இருந்தால் கடவுளுக்கு விரோதமென்றும் நம்ப வேண்டும். கவிகள் தங்கள் கதைகள் மூலம் அந்தச் சற்குணங்களையே போதிப்பது தமது கடமையாகக் கருதவேண்டும்.

ஆதி: தெய்வங்களைப் பற்றிய கதைகள் எவ்விதம் அமைய வேண்டுமென்று ஒருவர் வினவினால், அதற்கு என்ன பதில் கூறத் தகும்?

சோக்: கடவுள் முற்றிலும் நல்லவர் அல்லவா? வர்ணனையும் அப்படியே இருக்க வேண்டாமா?

ஆதி: ஆமாம். ஆனால் எதற்கு இப்படி வினவுகிறீர்?

சோக்: நல்லோர் தீங்கு இழைப்பாரா?

ஆதி: மாட்டார்.

சோக்: ஆதலால், நன்மையே மூர்த்தியான கடவுள், நன்மை தீமை அனைத்துக்கும் காரணம் என்று கூறுவது சரியா? நன்மைகளுக்கு அவர்மீது பொறுப்பைப் போடலாம். தீமைக்கு வேறு காரணங்கள் கண்டுபிடிக்க வேண்டும்.

ஆதி: இது பொருத்தமேயாகும்.

சோக்: ஆனால் ஹோமர் கூறுவது என்ன?

" தேவாதி தேவன் கோட்டை வாயிலிலே
குவித்திருப்பன நன்மை தீமை இரு
சுமைகள்;
களித்திருக்குங்கால் நலம் கொடுப்பான்;
சுளித்திருந்தால் தீமை தந்திடுவான்."

அப்படியே எங்கிவன் என்ற கவியும்,

"குடும்பத்தை அழிக்க விரும்பினால்
கடவுள் மனிதனைச் சபித்துவிடுவார்"

என்கிறார்.

முழுநலக் கடவுள் எம்மனிதனுக்கும் தீமை செய்ததாகக் கவிகள் கூறுவதை அனுமதிக்கலாகாது. நமது நகரில் நீதியான சட்டங்கள் செய்ய வேண்டுமானால் இப்படித் தவறான கொள்கைகளைப் பரவ விடலாகாது.

ஆதி: அந்தக் கட்டுப்பாட்டை நான் ஒப்புக் கொள்ளுகிறேன்.

சோக்: நமது காவலர்கள் தீரர்களாக இருக்க வேண்டும். சாவுக்கு அஞ்சாமல் இருக்கும்படியான சரிதங்களையே அவர்களுக்குப் போதிக்கவேண்டும், மனத்தில் அச்சம் குடிகொண்டவன் வீரனாக இருக்க முடியுமா?

ஆதி: அது எப்படி முடியும்?

சோக்: சாவுக்குப் பின் பாதாளலோகத்துக்குச் சென்று வருந்துவார்களென்று அவர்களுக்கு உபதேசிக்கலாமா? வேண்டுமானால் கவிகள், பரலோகத்தைப் புகழட்டும். ஆனால் அதற்குப் போகும் வழியிலுள்ள பயங்கரக் கற்பனைகளையெல்லாம் ஒழித்துவிடவேண்டும்.

ஆதி: அப்படியே செய்து விடுவோம்.

சோக்: வீரர்கள் அழுது புலம்பும் காட்சிகளையும் விலக்கி விடுவோமா?

ஆதி: அவைகளையும் விலக்க வேண்டும்.

சோக: சத்தியத்துக்கு உத்தம ஸ்தானம் கொடுப்போம். அதிலிருந்து பிறழ்வது சில அபூர்வ காலங்களில் உசிதமாகலாம். ஆனால் மருந்தை வழங்க வைத்தியருக்கே உரிமையுண்டு; சாதாரண மனிதருக்கல்ல. அவ்வாறே அசத்தியத்தை அவர்கள் தீண்டலாகாது.

ஆதி: அதுதான் சரி.

சோக்: நமது இளைஞருக்கு அடக்கம் இருக்குமா?

ஆதி: அவசியம்.

சோக்: பிரஜைகள் அதிகாரிகளுக்கு உட்பட்டும், ஆசைகளும், பாசங்களும் மனிதனுக்கு உட்பட்டும் இருப்பது அடக்கமல்லவா?

ஆதி: நானும் அப்படியே நினைக்கிறேன்.

சோக்: ஹோமர் தேவமதேசன் வாக்கால் கூறும் இம்மொழிகளை நாம் வரவேற்க வேண்டுமல்லவா?

"உனது ஆத்திரங்களை அடக்குவாய்.
எனது அடக்கத்தின் உண்மை உணர்வாய்."

ஆதி: எவ்வளவு அழகாக இருக்கிறது!

சோக்: நமது வீரர்கள் பணத்தாசை பிடித்தவர்களாகவும், லஞ்சம் வாங்குகிறவர்களாகவும் இருக்கக் கூடாது.

ஆதி: ஒரு காலும் கூடாது.

சோக்: அப்படியானால் கவியின் இக்கூற்றை,

'பேணிப்பலிகொடுத்தால் தெய்வத்துக்குத் திருப்தி,
காணிக்கை கண்டு பாரின் மன்னர்
மகிழ்வர்!'

என்று நாம் கற்பிக்கலாகாதல்லவா?

ஆதி: கூடாது.

சோக்: நமது காவலர் நகரின் சுதந்திரத்தைக் காக்க வேண்டிய பயிற்சிகளைத் தவிர, இதர கைத்தொழில்களையோ, வேறு கலைகளையோ கற்கலாகாது. சிறு வயது முதற்கொண்டு தைரியத்தையும், அடக்கத்தையும், தெய்வபக்தியையும், சுதந்திர உணர்ச்சியையும் அவர்களிடம் வளர்க்க வேண்டும். அவர்களின் பேச்சும், பாட்டும், குரலும், ராகமும் அனைத்தும் நல்லொழுக்கத்தை அனுசரித்திருக்கும். அவற்றில் காம்பீர்யம் ஜொலிக்கும். இது சரியான முறை அல்லவா?

ஆதி: அதற்கென்ன சந்தேகம்?

சோக்: ஓவியமும், கலைகளும், வேலைப்பாடுள்ள தொழில்களும் அவற்றைச் செய்பவரின் குணத்தைப் பொருத்திருப்பன. அழகும் நேர்மையும் ஓர் புறம், அவற்றுக்கு எதிரான குணங்கள் எதிர்ப்புறம், செய்கைகளில் அழகில்லாதவரின் வாக்கில் தீய சொற்கள் வெளிவரும்; மனத்தில் தீய உணர்ச்சிகள் குடிகொள்ளும்.*

ஆதி: இது உண்மையே.

சோக்: ஆதலால் நமது கவிகள் சற்குணத்தின் உருவையே கவிதைகளில் காட்டும்படி கட்டுப்பாடு அவசியம். அவ்வாறே எல்லாக் கலைஞரும் அழகில்லாத, அருவருப்பான பொருள்களையும், வீடுகளையும் ஆக்கலாகாது. எங்கும் அழகும், தூய்மையும் வாய்ந்த கலைஞர்களைத் தேடி ஆதரிக்க வேண்டும். அப்பொழுதே நமது காவலின் சூழ்நிலை அழகும், ஆரோக்கியமும், காம்பீர்யமும் கூடியதாக இருக்கும்.


ஆதி: இம்முறை மிகவும் உயர்ந்ததென்பதை ஒருவரும் மறுக்க மாட்டார்.

---

*"உள்ளத்தில் உண்மை யொளியுண்டாயின் வாக்கினிலே ஒளியுண்டாகும்" —பாரதி



வேகத்தை வெல்பவன்



கி. ராஜேந்திரன்

பிராண்டோ தன்னுடைய 'ஜகுவா'ரை அன்புடன் தட்டிக் கொடுத்தான். "வழக்கம்போல் இன்றும் எனக்கு வெற்றி தேடித் தரவேண்டும் தெரியுமா?" என்று அதனுடன் மானசிகமாகப் பேசினான். முதல்நாள் 'கார்புரேட்ட'ரைச் சுத்தம் செய்து எண்ணெய் ஊற்றியது முதல் டயர்களுக்குச் சரியான அளவுக்குக் காற்றடித்து வைத்தது வரையில் அவனுக்கு ஞாபகம் வந்தன. இயந்திரத்தின் ஒவ்வொரு சிறு பகுதியும் குற்றமற்றதாக இருந்தால்தான் வெற்றி பெறலாம்.

'டிராக் கிளியர்' - மோட்டார்கள் ஓடப் போகும் சாலையில் தடங்கல்கள் எதுவும் இல்லை என்பதை ஒலிபெருக்கி அறிவித்தது. ஆயிரக்கணக்கான மக்கள் கழுத்தை ஒடித்துக் கொண்டு ஆர்வத்துடன் கண் கொட்டாமல் பார்த்தார்கள்.

பிராண்டோ கடைசியாக ஒரு முறை தன் ஜகுவாரைப் பார்த்தான். தாய் தன் குழந்தையைக் கவனிப்பது போல் அந்த மோட்டாரிடம் அன்பு செலுத்தினான்.

மோட்டார் பந்தயங்களில் காரை ஓட்டுபவர்களுக்கு மட்டும் அல்லாது பார்ப்பவர்களுக்கும் அபாயம் அதிகம். எத்தனையோ விபத்துக்கள் நேர்ந்தும் இருக்கின்றன. உலகம் கண்டறியாத கோர விபத்து 1955ல் பிரான்ஸ் தேசத்தில் லெ மான் என்ற இடத்தில் ஏற்பட்டது. 82 பேர் உயிர் இழந்தார்கள். 100 பேர் காயமடைந்தார்கள். இருப்பினும் மோட்டார் ரேஸ்கள் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. சமீபத்தில் சென்னைக்கருகே சோளவரம் விமான நிலையத்தில் கூட மோட்டார் பந்தயம் நடைபெற்றது. இங்கும் நான்கைந்து விபத்துக்கள் நேர்ந்தன. தெய்வாதீனமாக உயிர்ச்சேதம் ஏதும் உண்டாகவில்லை. இத்தகைய பயங்கரமான விளையாட்டில் மோட்டாரோட்டிகள் ஈடுபடக் காரணம் என்ன?



அந்த அன்பை அது உணர்ந்தது. தான் உணர்ந்து கொண்டதை அவனுக்கு உணர்த்தியது. மனிதனுக்கும் இயந்திரத்துக்கும் இடையே இப்படி ஒரு பிணைப்பு-மற்றவர்கள் அறியாத, அறிந்துகொள்ள முடியாத ஒரு பிணைப்பு.

மோட்டாரோட்டிகள் அனைவரும் தயாராக நின்றார்கள். பிராண்டோவின் இருதயத் துடிப்பு அதிகரித்தது. பல பந்தயங்களிலே பங்கு பற்றிப் பழகியிருந்த போதிலும், புதிதாக ஒரு ரேஸ் ஆரம்பமாகுமுன்னர் இருதயத் துடிப்பு அதிகரிக்கத்தான் செய்தது. ஒவ்வொரு முறையும் நடைபெறும் சாதாரண நிகழ்ச்சி. ஆனால் இன்று அதற்கு இன்னொரு காரணமும் இருப்பதாகப் பிராண்டோவுக்குத் தோன்றியது.

பந்தய மைதானத்துக்குள் அவன் நுழையும்போது அவனுக்கு முன்னால் திடுதிப்பென்று தோன்றி "பெஸ்ட் ஆப் லக்" என்று வாழ்த்தினாள் அந்த அழகி.

'அந்த அதரங்களிலிருந்து வெளிப்பட்ட வார்த்தைகள் வீண் போகக் கூடாது. தன்னை நம்பிக்கையுடன் ஏறிட்டுப் பார்த்த அந்தக் கண்கள் ஏமாற்றமடையக்கூடாது. தனக்கு நிகரில்லை என்ற இறுமாப்புடன் அரும்பிய புன்னகை தோல்வியைக் கண்டு மறைந்து விடக் கூடாது.

'பந்தயம் முடிந்ததும் அதே நம்பிக்கை நிறைந்த கண்கள் அதே இறுமாப்பு புன்னகை பூண்ட அதரங்கள் தன்னை வரவேற்க வேண்டும்!'

கார்கள் ஒவ்வொன்று கச்சாலையிலே ஓட ஆரம்பித்தன. தன்னைக் கடைசியில் தான் போக அனுமதிப்பார்கள் என்று அவனுக்குத் தெரியும்.





சூரிய ஒளியில் டாலடிக்கும் தன் நீண்ட கரிய மோட்டாரின் சக்தி, தனக்குள்ள திறமை இரண்டுக்காகவும் கடைசியில் அனுப்புகிறார்கள். அதில் அளவற்ற பெருமையடைந்தான் பிராண்டோ.

கொடி கீழே இறங்கியது. கண்களில் கண்ணாடியை அணிந்துகொண்டு தன் ஜகுவாரில் பாய்ந்து ஏறினான் பிராண்டோ. "நெ. 24 கிளம்பி விட்டது. பிராண்டோ புறப்பட்டுவிட்டான்" என்று ஒலிபெருக்கி அலறியது. பந்தயத்தைக் காணக் குழுமியிருந்தவர்கள் அந்தச் செய்தியைக் கரகோஷம் செய்து வரவேற்றார்கள்.

தன் இரையைப் பிடிக்கப் பாயும் ஒரு வேங்கையைப்போல ஜகுவார் விரைந்தது. முதல் சுற்றிலேயே இரண்டு மோட்டார்களை முந்திக் கொண்டான் பிராண்டோ. இரண்டாவது மூன்றாவது சுற்றுக்களை முடித்துக் கொண்டு நான்காவது ஆரம்பித்தபோது அவனுக்கு முன்னால் ஒரே ஒரு 'மெர்ஸிடஸ்'தான் இருந்தது.

நூறு மைல் வேகத்தில் ஏற்கனவே சென்று கொண்டிருந்தவன் 'திராட்டில்'லை முழுக்கத் திறந்து விட்டான். உறுமிக் கொண்டு புதிய வேகத்தோடு பாய்ந்த ஜகுவார் மெர்ஸிடெஸ்ஸை அநாயாசமாகத் தாண்டிக் கொண்டு சென்றது. ரசிகர்கள் தொண்டை கிழியக் கத்தினார்கள், கும்மாளம் போட்டார்கள், கைக்குட்டையை ஆட்டினார்கள், தொப்பிகளைத் தூக்கி எறிந்து பிடித்தும், ஆரவாரம் செய்தும் மகிழ்ந்தார்கள்.

வெற்றி கண்ட பெருமிதத்தில் பந்தய மைதானத்தைத் தாண்டி வந்த பிராண்டோவை இரண்டு மென்மையான கரங்கள் கெட்டியாகப் பிடித்துக் கொண்டன. சாயம் தீட்டி அழகுபடுத்தப்பட்ட குவிந்த உதடுகள் 'கங்கிராஜுலேஷன்ஸ்' என்று மகிழ்ச்சியைத் தெரியப்படுத்தின.

ஒரு கோட்டுப் புத்தகத்தை நீட்டிக் கையெழுத்துக் கேட்டாள் பமீலா. கூடவே அவள் இதயத்திலும் தன் பெயரை அறியாமல் செதுக்கி விட்டான் பிராண்டோ.

2

பங்களூர் 'லால்பாக்' நந்தவனத்துக்கு ஜகுவார் சென்று கொண்டிருந்தது. பிராண்டோவையும் பமீலாவையும் ஏற்றிக் கொண்டு. திடீரென்று நடுச்சாலையில் நின்று விடவே பிராண்டோவின் நெற்றி கவலையில் சுருங்கியது. சில விநாடிகளில் அவன் உரக்கச் சிரித்தான்.

"ஏன் சிரிக்கிறீர்கள்?" — ஒன்றும் புரியாமல் கேட்டாள் பமீலா.

" இதுவரையில் இந்தக் கார் நடுத்தெருவில் நின்று போனதே கிடையாது, பமீலா. அப்படியிருந்தால் நான் ரேஸ்களில் எப்படி வெற்றி பெற முடியும்? ஆனால் இன்று நின்று விட்டது. ஏன் தெரியுமா? உன்னைக் கண்டால் அதற்கு ஆகவில்லை. பொறாமை!"

பமீலாவுக்கு அது விசித்திரமாகத் தோன்றியது. "இயந்திரத்துக்கு மனித சுபாவமா? அப்படியே இருந்தாலும் என்னிடம் உங்கள் மோட்டாருக்குப் பொறாமை உண்டாவானேன்?"

"என்னுடைய அன்புக்குப் பாத்திரமாக இருந்து வந்தது என் ஜகுவார் மட்டும்தான், பமீலா! சில நாட்களாக நீ ஒருத்தி இடையில் புகுந்திருக்கிறாயல்லவா? அதற்குப் பொறுக்கவில்லை!"

"உங்கள் ஜகுவாருக்கு என்னிடம் பொறாமை ஏற்படலாம். ஆனால் எனக்கு அதனிடம் நன்றியுணர்ச்சிதான் பொங்குகிறது. ஒரு வகையில், நாம் சந்திக்க இந்தக் கார்தானே காரணம்?"

"உண்மைதான்! என்னைப் பார்க்க எண்ணி நீ வரவில்லையே? மோட்டார்கள் ஓடுவதைப் பார்க்கத்தானே வந்தாய்?"

"இப்போது எனக்கு அங்கு நடந்தது எதுவுமே நினைவில்லை. நோட்டில் கையெழுத்துப் போடுவதாகச் சொல்லி என் இதயத்தில் உங்களுடைய பெயரைச் செதுக்கியது ஒன்றுமட்டும்தான் நினைவிருக்கிறது."

பாலைவனத்தில் அலைந்தவர்கள் 'மன்னா' கிடைத்த போது எவ்வளவு மகிழ்ச்சியடைந்திருப்பார்களோ, அதைப் போல் நூறு மடங்கு ஆனந்த மடைந்தான் அவளருகே யிருந்த பிராண்டோ.

''பமீலா! அதற்கும் முன்பே, உன்னை முதன் முதலில் பார்த்த கணமே நீ என் இதயத்தில் இடம் பெற்று விட்டாய். உன்னுடைய கண் பார்வையால் என் நெஞ்சத்தை ஊடுருவி விட்டாய். உன் அதரங்களில் மலர்ந்த புன்னகையால் என் உள்ளத்தைத் தொட்டு விட்டாய்.''

''நான் ஒன்று கேட்கட்டுமா?''

''கண்டிப்பாகக் கேள், பமீலா!''

''நீங்கள் யாரை அதிகமாகக் காதலிக்கிறீர்கள்? என்னையா அல்லது உங்கள் ஜகுவாரையா?''

''ஜகுவாரை நான் காதலிக்கவில்லை, பமீலா. அது என் உயிர். என்னுடைய ஒரு பாகம். அது வேறு, நான் வேறு என்பதல்ல. அப்படியிருக்கையில் என்னை நானே எப்படிக் காதலிக்க முடியும்? உன்னைத்தான் காதலிக்கிறேன்.''

''ஈடேறாத காதல்.''

பிராண்டோ திடுக்கிட்டான். ''ஏன் அப்படிச் சொல்கிறாய், பமீலா?''

'''லால்பாக்'குப் போன பிறகு சொல்கிறேன். எத்தனை நேரம் நாம் நடுத் தெருவில் நிற்பது?''

அப்போதுதான் சூழ்நிலையை உணர்ந்தான் பிராண்டோ. கீழே இறங்கி எஞ்சினை ஒரு நோட்டம் விட்டான். தவற்றை எளிதில் கண்டுபிடித்து ஒரே நொடியில் சரிப்படுத்தினான். ஜகுவார் லால்பாக்கை நோக்கி விரைந்தது.

வண்ண வண்ண மலர்களையும் விதம் விதமான மரங்களையும் பசும்புல் வெளியையும் பல முறைகளில் அங்கு வந்து பார்த்திருக்கிறாள் பமீலா. இருப்பினும் இப்போது தன் காதலனுடன் கரம் கோத்துக் கொண்டு சென்றபோது எல்லாமே புதிதாகத் தோற்றமளித்தன. மௌனமாக நீண்ட நேரம் நடந்துவிட்டு ஒரு ஆசனத்தில் அமர்ந்தார்கள்.

''பமீலா! இங்கு வந்தபிறகு ஏதோ கூறுவதாகச் சொன்னாயே!'' என்று ஞாபகப்படுத்தினான் பிராண்டோ.

பமீலாவின் பெருமூச்சிலே அவள் தோள்கள் எழும்பி விழுந்தன. ''இந்தத் தொழில் எவ்வளவு அபாயகரமானது என்பது உங்களுக்குத் தெரியாதா? எந்த நிமிஷமும் பெரிய விபத்து ஏற்பட்டு விடலாமல்லவா? பந்தயத்தைப் பார்க்க வருபவர்கள் கூட எச்சரிக்கப்படுகிறார்களே, அவர்களுக்கு என்ன ஆபத்து நேர்ந்தாலும் இந்தப் பந்தயத்தை நடத்துபவர்கள் பொறுப்பாளிகள் அல்ல என்று. அது ஏன்? மோட்டார்கள் நிலை தவறிப் பார்ப்பவர்கள் மீது பாய்ந்து உயிர்ச்சேதம் விளைவிக்கலாம் என்றுதானே? பார்ப்பவர்களுக்கே இந்தக் கதி என்றால் மோட்டாரை ஓட்டுபவர்கள் உயிரைத் திருணமாகத்தானே மதிக்க வேண்டும்?''

பிராண்டோ சிரித்தான். ''பூ! இதற்காகவா ஈடேறாக் காதல் என்று என்னைப் பயமுறுத்தி விட்டாய்? அப்படியொன்றும் எனக்கு நேர்ந்துவிடாது. கவலைப்படாதே. ஒரு ஞாயிற்றுக்கிழமையன்று நீயும் நானும் மணி ஒலிக்கக் கோவிலில் நுழைவோம். நீ புன்னகை புரிய முயல்வாய். நான் பதற்றத்துடன் உன் அருகேயே வருவேன். ஒரே ஒரு வைரக்கல் பதித்த மோதிரத்தை உன் அழகிய நீண்ட விரலில் அணிவிப்பேன். கணவன் மனைவியாகத் திரும்பும்போது எல்லோரும் நம் மீது அரிசியை வாரி இறைப்பார்கள். இதே ஜகுவாரில் ஏறிக் கொண்டு இருவரும் 'ஹனிமூன்' புறப்படுவோம்....''

பமீலா தலையை அசைத்தாள். கழுத்து வரையில் புரண்ட அவள் கரிய கூந்தல் கன்னங்களை அப்போது கவ்வி அவற்றின் வெண்மையை வெளிக் கொணர்ந்தது.

''ஏன் பமீலா! உனக்கு நம் காதலில் நம்பிக்கையில்லையா?''

''காதலில் நம்பிக்கையிருக்கிறது. அது நிறைவேறும் என்பதில் நம்பிக்கையில்லை. என் அப்பா சம்மதிக்கவே மாட்டார். நீங்கள் இந்தத் தொழிலை விட்டால் தான் உங்களை மணந்து கொள்ள முடியும்.''

''பமீலா! ஒரு முடிவை அடைவதற்கான கருவியாக நான் என் காரைக் கருதவில்லை. அந்தக் காரின் ஒரு பாகம் நான். பந்தயங்களில் நூற்றில் ஒருவருக்குத்தான் விபத்து ஏற்படும், பமீலா! ஆயிரத்தில் ஒருவர்தான் இறந்துபோக நேரிடும்.''

''அந்த ஆயிரத்தில் ஒருவராக நீங்கள் இருக்க நேர்ந்துவிட்டால்?....நான் உங்களைத்தான் காதலிக்க விரும்புகிறேன். உங்கள் நினைவையல்ல! தயவுசெய்து என்னைப் புரிந்து கொள்ளுங்கள்.''

''பமீலா! என்னால் முடியாத காரியத்தைச் செய்யச் சொல்கிறாய்.''

''இரண்டில் ஒன்றுதான் நடக்க முடியும். நான் அல்லது உங்கள் ஜகுவார்; எது வேண்டும் உங்களுக்கு?''



"இரண்டுமே வேண்டும், பமிலா!" என்றான் பிரான்டோ அழமாட்டாதவனாக.

3

அவர்களுக்குத் திருமணமாகி ஒரு வருஷம் ஆகிவிட்டது. இந்த ஒரு வருஷமும் அவன் தன் ஜகுவாரை ஒரு முறைகூட ஓட்டவில்லை. புது மணம் புரிந்த இறக்கத்திலே அதை மறப்பது சாத்தியமாக இருந்தது. பமிலா ஜகுவாரை விற்று விடும்படி சொன்னாள். அதற்கு மட்டும் அவன் மனம் இசையவில்லை. "அது பாட்டுக்கு இருந்துவிட்டுப்போகட்டும், பமிலா! நான்தான் ஓட்டுவதில்லை என்று வாக்குக் கொடுத்திருக்கிறேனே? அதைப் பார்த்துக் கொண்டிருப்பதில் ஒரு திருப்தி. அதையும் பறித்துவிடப் போகிறாயா?"

பமிலா அநுதாபத்துடன் அவனை வற்புறுத்தாமல் விட்டாள்.

இந்தச் சமயத்தில்தான் பத்திரிகையில் அந்தச் செய்தி வந்தது. இலங்கையில்



நடக்கப்போகும் மோட்டார் பந்தயத்தில் ஆசியா முழுவதிலிருந்தும் புகழ் பெற்றவர்கள் வந்து கலந்து கொள்ளப் போகிறார்கள் என்று. பிரான்டோவுக்குக் கைகால்கள் தினவெடுத்தன. நினைவும் கனவும் அதைப்பற்றியேதான். கரங்கள் 'ஸ்டியரிங்'கைச் சுழற்றுவது போலவும், கால் 'ஆக்ஸிலேட்ட'ரை அழுத்துவதும் 'பிரேக்'கைத் தொட்டுத் தொட்டுவிடுவதுமாக இருப்பது போலவும் உணர்ந்தான்.

அந்தப் பந்தயத்தில் வெற்றி பெற்றுப் புகழ்மாலைகளும் மலர்மாலைகளும் அணிந்த வண்ணம் இருக்கிறான்....பெரிய கோப்பையும் ரொக்கப் பரிசும் தட்டிக்கொண்டு தூக்க முடியாமல் தூக்கி வருகிறான்... பமிலா கோப்பையை வாங்கி வைத்து விட்டு சந்தோஷத்தில் கைகொட்டிச் சிரித்து வரவேற்கிறாள்....

"பமிலா! உன் மனம் மாறிவிட்டதா? நான் மோட்டார் பந்தயத்தில் கலந்து கொண்டால் உனக்குக் கோபமில்லையா?" என்று கேட்கிறான் பிரான்டோ.

"நிச்சயமாக உங்களைக் கோபித்துக் கொள்வேன்" என்று அதட்டி உலுக்கி அவனை எழுப்பினாள் பமிலா.

"பமிலா! எனக்கும் அழைப்பு வந்திருக்கிறது. இந்த ஒரு பந்தயத்தில் மட்டும் கலந்துகொள்வதற்கு அனுமதியளிக்கமாட்டாயா?" என்று கெஞ்சினான் அவன்.

அவள் உள்ளம் நெகிழ்ந்தது. ஆனால் அதே சமயத்தில் பயம் சூழ்ந்து உள்ளத்தைக் கடுமையாக்கியது.

"என்னுடைய வேகத்தைக் கண்டு, வெற்றியைப் பார்த்து நீ என்னிடம் காதல் கொண்டாய். இப்போது அந்த இன்பத்தை, நம் காதலுக்கு அடிகோலிய அதே இன்பத்தை எனக்கு அளிப்பதற்குப் பிடிவாதமாக மறுக்கிறாய்."

"அதை மறக்கவில்லை நான். ஆனால் நான் காதலித்தது உங்களைத்தான். உங்கள் வேகத்தை அல்ல; ஏதாவது விபரீதமாக நேர்ந்து விட்டால் பிறக்கப் போகும் உங்கள் குழந்தைக்கு நான் என்ன பதில் சொல்வேன்?"

ஒரு குதூகலச் செய்தி மற்றொரு துயரத்தை, ஏக்கத்தை மறைத்தது. பமிலாவை வாஞ்சையுடன் கட்டியணைத்து உச்சி முகர்ந்தான் பிரான்டோ.

4

வாசல் கதவை யாரோ தட்டும் ஓசை கேட்டுத் திறந்தாள் பமிலா. உள்ளே நுழைந்த இருவரும் அவளுக்குப் புதியவர்கள், அறிமுகமாகாதவர்கள்.

"என்ன வேண்டும்?" என்று கேட்டாள் பமிலா, அவர்களுடைய தோற்றத்தைக் கண்டு வெறுத்து. இருவரும் தொப்பியை மரியாதைக்குக் கூடக் கழற்றவில்லை. அது கண்களை மறைத்து முன் பக்கம் சாய்ந்திருந்தது. திரண்ட தோள்கள். இடாத்திரமான சரீரம். கையில் கைக்குட்டை சுற்றியிருந்தார்கள். க்ஷவரம் செய்யப்படாத முகம். குரலில் கடுகடுப்பும் அதிகாரமும் தொனித்தன.

ஒருவன் தொப்பியை இலேசாக மேலே தூக்கி விட்டுச் சிவந்த கண்களால் பமிலாவையே முறைத்துப் பார்த்தான். உடனே மற்றொருவனும் அப்படியே செய்தான்.

"என்ன வேண்டும்?" என்று கேட்டாள் பமிலா மறுபடியும்.

"பிரான்டோ" என்றார்கள் இருவரும்.

"அவர் இங்கே இல்லையே! வெளியே போயிருக்கிறார்!"

ஒருவரை யொருவர் அர்த்தபுஷ்டியுடன் பார்த்துக் கொண்டார்கள் அவர்கள்.

"அதனால் பரவாயில்லை. நீ அவனுடைய மனைவிதானே?"

"ஆமாம்."

"உன் கணவனைப் பற்றி முக்கியமான விஷயம் பேச வேண்டும் உன்னுடன்."

பமிலாவின் புருவங்கள் நெறிந்தன. அந்த முரடர்களுடன் பேசப் பிடிக்க

வில்லை அவளுக்கு. "அவரிடமே நேரில் பேசிக் கொள்ளுங்கள்" என்றாள்.

"இல்லை. உன்னிடம்தான் பேச வேண்டும்" — ஒருவன்.

"ஆமாம்! உன்னிடம்தான் பேச வேண்டும்" — மற்றொருவன்.

அவள் அழைக்காமலே உள்ளே நுழைந்து உட்கார்ந்து கொண்டார்கள். "இலங்கையில் நடக்கப் போகும் ஆசிய மோட்டார் பந்தயத்தில் உன்னுடைய கணவன் பங்கெடுத்துக் கொள்ளப் போகிறானா?" என்று கேட்டான் ஒருவன்.

"அப்படித்தான் என்னிடம் சொல்லிக் கொண்டிருக்கிறார்."

"அதை நீ தடுக்க வேண்டும்."

"என் கணவரைப் பற்றி அவர் இல்லாத சமயத்தில் விவாதிக்க நான் தயாராக இல்லை. அவரிடமே நேரடியாக நீங்கள் பேசிக்கொள்ளுங்கள்."

"நீ ரொம்பக் கெட்டிக்காரி!"—ஒருவன்.

"ஐந்நூறு ரூபாய் தருகிறோம்"—இது மற்றொருவனின் குரல்.

சட்டென்று பமிலாவுக்கு விஷயம் புரிந்துவிட்டது. தனக்கும் இவர்களுக்கும் ஒரே நோக்கம்தான். அது பிராண்டோ அந்தப் பந்தயத்தில் கலந்து கொள்ளக் கூடாது என்பதுதான். அவள் அவன் உயிருக்குப் பயந்தாள். இவர்கள் அவன் வெற்றி பெற்று விடுவானோ என்று பயந்தார்கள். வேறு ஒருவனுக்குக் கிடைக்கக்கூடிய வெற்றி பிராண்டோவுக்குக் கிடைத்துவிடக்கூடாது என்பதற்காகப் பாடுபடுகிறார்கள். அதற்காகப் பணம் தந்து சரிப்படுத்துகிறார்கள். கணவனுக்கு எதிராக மனைவி லஞ்சம் வாங்கிக் கொள்வதாம்!

"முடியவே முடியாது!" என்றாள் பமிலா அழுத்தம் திருத்தமாக.

"ஆயிரம்" என்றான் ஒருவன்.

பமிலா அவர்களை வெளியேறுமாறு கை ஜாடை காட்டினாள்.

"ஆயிரத்து ஐந்நூறு!"—மற்றொருவன்.

"உடனே வெளியே போகிறீர்களா, இல்லையா?" என்று தொண்டை கிழியக் கத்தினாள் பமிலா.

"இதுவரையில் யாருமே எங்களை இப்படி அவமதித்ததில்லை. எங்களை என்னவென்று நினைத்துக்கொண்டாய்?"

"வேறு என்ன நினைப்பேன்? முரடர்கள், அயோக்கியர்கள், திருடர்கள், லஞ்சம் கொடுப்பவர்கள், கீழ்த்தரமான முறையில் பந்தயத்தில் வெற்றி பெறுவதற்கு முயலுபவர்கள் என்றுதான்!"

ஒருவன் பமிலாவின் தோள்களைப்பற்றிக் கோபத்தோடு உலுக்கி எடுத்தான். மற்றொருவன் அவசரமாக அவன் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு போனான். "ஏய்! கோபத்தில் அசந்தர்ப்பமாக எதையாவது செய்து வைக்காதே, ஆபத்தாக முடியும். வா, போகலாம்!"

பிராண்டோ வீட்டுக்குத் திரும்பியதும், பமிலா அவன் தோள்களில் முகத்தைப் புதைத்து அழுது தீர்த்தாள். நடந்ததை யெல்லாம் சொன்னாள்.


பற்களை நற நறவென்று கடித்தான் அவன். "சீ! பெண்களிடம் போய் வாலாட்டும் கயவர்கள்!"

"அந்தப் பந்தயத்தில் நீங்கள் கலந்து கொள்வதாக உடனே எழுதிப் போடுங்கள்" என்றாள் பமிலா.

பிராண்டோவுக்கு முதலில் தன் காதுகளையே நம்ப முடியவில்லை. சீக்கிரத்தில் தன்னுடைய போராட்டத்தை அவளும் பகிர்ந்து கொள்கிறாள் என்று உணர்ந்தான். அவன் வெற்றிக்கு மட்டும் போராடினான். அவள் நேர்மைக்கும் போராடினாள். நேர்மை வெற்றி பெற அவன் பந்தயத்திலும் வெற்றி பெறவேண்டும். அவன் வெல்ல வேண்டும் என்று ஒரு ஆவேசத்தோடு அவள் விரும்பினாள், பிரார்த்தித்தாள்.

"பமிலா! இந்த சந்தோஷச் செய்தியைக் கூறியதற்காக உனக்குப் பரிசு தர வேண்டும்" என்றான் பிராண்டோ. கொடுக்கவும் செய்தான்.

அடுத்த ஞாயிற்றுக்கிழமை கோவிலுக்குப் போனபோது பமிலா அன்னை மேரி



யிடம் மனமுருகி வேண்டினாள்: "உன் கையில் இருப்பது போலவே ஒரு குழந்தை இன்னும் சில மாதங்களில் என் கரங்களிலும் இருக்கும். அந்தக் குழந்தைக்கு வாழ்வு கொடு. என் அன்பருக்கு ஆபத்து ஏதும் உண்டாகாமல் காப்பாற்று."

5

கொடி இறங்கியதும் எல்லா மோட்டார்களும் ஒரே சமயத்தில் செவியைத் துளைக்கும் பயங்கர ஓசையோடு கிளம்பின.

பிராண்டோ இரண்டாவது சுற்றை முடித்து விட்டு வேகமாக முன்னேறினான். அவனுக்குப் பின்னால் ஒரு மோட்டார் 'டயர்' வெடித்ததால் சாலையை விட்டு அகன்று போய்க் கண்டபடி யெல்லாம் உருளும் காராசமான சத்தம் கேட்டது. அவன் உடல் ஒருமுறை 'குப்' பென்று வியர்த்து விட்டது. பமிலாவை நினைத்துக் கொண்டான். 'அவள் எப்படி பயந்து போவாள்? பாவம்! எனக்குத்தான் அப்படிப்பட்ட நிலை ஏற்பட்டு விட்டதோ என்றுகூட நினைக்கலாம். இருக்காது; என்னைக் கவனித்துக் கொண்டே யிருப்

பாளல்லவா? '13-ம் கெ.' அதோ போகிறதே என்று தெரிந்து கொள்வாள்.'

தன் கெ.13 என்பது அப்போது தான் நினைவு வந்தது பிராண்டோவுக்கு. 'அந்த எண் அதிர்ஷ்டமில்லை என்பார்களே? அதற்காக வேறு பமிலா பயப்படுவாளோ? இவையெல்லாம் இந்தச் சமயத்தில் எனக்குத் தோன்றுவானேன்? ஏதாவது தீமை நேரப் போகிறதோ?'

அதற்குமேல் துரதிர்ஷ்டத்தைப் பற்றி யோசிக்க முடியவில்லை. பிராண்டோவின் மனத்தை வேறு சிந்தனை ஆட்கொண்டது. முதலாவதாகச் சென்று கொண்டிருந்த தன்னை முந்திக்கொண்டு ஒரு 'பெராரி' பாய்ந்து செல்வதைக் கவனித்தான். 'ஆகா! இந்தப் 'பெராரி' ஜயிக்கவேண்டும் என்பதற்குத்தான் பமிலாவிடம் பணம் கொடுக்க முன் வந்திருக்க வேண்டும்! விட்டு விடுவேனா?'

தன் ஜகுவாரின் ஸ்டியரிங்கை அன்புடன் ஒரு முறை தடவிக் கொடுத்தான் பிராண்டோ. ஆக்ஸிலேட்டரைக் கடைசி வரையில் அழுத்தினான்.........

சற்றுத் தூரத்தில் அந்தத் திருப்பம் தென்பட்டது. அந்த வளைவில் சாமர்த்தியமாக வண்டியைத் திருப்பி இப்போது போகும் திசைக்கு நேர் எதிர்த் திசையில் சற்றுத் தூரம் போனால் பந்தயம் முடிந்து விடும். 'அதற்குள் அந்தப் பெராரியை முந்திவிட முடியுமா?'

வளைவு நெருங்கியது. திருப்பத்துக்காக வேகத்தைக் குறைத்தால் 'பெராரி'யை முந்த முடியாது. ஜகுவாரின் வேகத்தைக் குறைக்கவில்லை பிராண்டோ.

நூறு மைல் வேகத்தில் அந்த வளைவில் திரும்ப முயன்றது அது. அதே சமயத்தில் சாலையை விட்டுத் தூக்கி எறியப்பட்டு ஒரு கம்பத்தில் மோதியது. சில்லென்று தன்னைப் பெட்ரோல் நனைப்பதை உணர்ந்தான் பிராண்டோ. அப்புறம் அவனுக்கு ஒன்றுமே தெரியவில்லை.

மீண்டும் அவன் சுய உணர்வு பெற்ற போது பமிலா தன்னைத் தானே நொந்து கொண்டாள். "என்னால்தானே இந்தப் போட்டியில் நீங்கள் ஈடுபட்டீர்கள்? லஞ்சம் கொடுக்க வந்தார்களே என்ற கோபத்தில் உங்களைத் தூண்டி விட்டு விட்டேனே" என்று சொல்லி அழுதாள்.

"உன்னால் நான் இந்தக் கதியை அடையவில்லை, பமிலா! எனக்காகவே தான் நான் போட்டியில் ஈடுபட்டேன். உண்மையைச் சொல்லட்டுமா? அந்த முரடர்களை லஞ்சம் கொடுக்கும்படி நான் தான் அனுப்பி வைத்தேன், உன்மனத்தை மாற்ற!"—மனமறிந்து பொய் சொன்னான் பிராண்டோ. அவன் வதனத்தில் முன்போலவே மோகனப் புன்னகையை வரவழைக்க அவ்வாறு கூறி வைத்தான். அது அரும்பியதைக் கண்டு மகிழ்ந்தாள்.

அவன் காதைப் பிடித்துத் திருகினாள் பமிலா. "உங்கள் கொட்டத்தை அடக்க என்னால் இனிமேல் முடியாது; பிறக்கப் போகும் பிள்ளையால்தான் முடியும்."

5

நாலு மாதங்கள் ஆஸ்பத்திரியில் இருந்து விட்டுப் பிராண்டோ பங்களூர் வந்த போது ஏற்கனவே திரும்பி வந்திருந்த பமிலா தாயாகவும் மாறியிருந்தாள். குதூகலத்துடன் அவனை வரவேற்றாள். அவனுடன் கூடவே ஜகுவாரும் ரிப்பேர் செய்யப்பட்டு வந்திருப்பதைக் கண்டு திகைத்தாள்.

இதுவரை அவளுக்கு அதைப் பற்றிய சிந்தனையே எழவில்லை. தீர்ந்து போன, முடிந்து போன ஒரு விஷயமாகக் கருதி வந்தவளுக்கு அதைக் கண்டதும் மனம் கசந்து போய் விட்டது.

"ஏன் இதை ரிப்பேர் செய்து கொண்டு வந்தீர்கள்? இந்த எமன் எதற்கு?" என்று துக்கம் தொண்டையை அடைக்கக் கேட்டாள் அவள்.

"சும்மாதான். ஓட்டப் போவதில்லை நான். அதற்காக ஓட்டைக் காரை வைத்திருக்க வேண்டுமா, என்ன?"

"சென்னையில் மோட்டார் ரேஸ் நடக்கப் போகிறதாமே?"

"நான் அதில் கலந்து கொள்ளப் போவதில்லை, பமிலா! நீ பயப்படாதே. கொஞ்சமும் கவலைப்படாதே!"

"பொய் சொல்கிறீர்கள்!"

பிராண்டோ திடுக்கிட்டான். 'நான் பொய் சொல்கிறேன் என்பதை எப்படிக் கண்டு பிடித்தாள்? உள்ளூற எனக்குள்ள ஆசையை எப்படி அறிந்து கொண்டாள்?'

"இல்லை, பமிலா! உன்னிடம் பொய் சொல்லி என்ன ஆகவேண்டும் எனக்கு? ஒரு முறை விழுந்து பலமாக அடிபட்டது போதாதா, என்ன?"

"மறுபடியும் பொய்! மோட்டார் ரேஸ் உங்களுடைய உயிர் என்றீர்கள் முன்பொரு முறை. அது இப்போதுதான் எனக்குப் புரிகிறது. ஒன்று நீங்கள் வேகத்தை வெல்ல வேண்டும். அல்லது வேகம் உங்களை வெல்ல வேண்டும். எந்தக் கணமும் வேகம் உங்களை வென்று விடலாம்; உங்கள் உயிரைக் குடித்து விடலாம். அதற்கு நீங்கள் அஞ்சவில்லை. வேகத்தை வெல்ல உயிரைக் கொடுக்கவும் சித்தமாக இருக்கிறீர்கள். பயம் உங்களை அப்போது ஆட்கொள்கிறது. அதிலே ஒரு இன்ப போதை இருக்கிறது. மர்மமான அந்த உணர்ச்சியை என்னாலோ அல்லது இந்தக் குழந்தையாலோ கூடக் கட்டுப்படுத்த முடியாது. அதை நான் ஒப்புக்கொண்டு விட்டேன். என்னைப் பற்றிய கவலையையும் சஞ்சலத்தையும் விட்டு விட்டு மன நிம்மதியுடன் சென்னையில் நடக்கப்போகும் பந்தயத்தில் கலந்து கொள்ளுங்கள்" என்றாள் பமிலா.

சென்னை சோளவரத்தில் பிராண்டோவின் ஜகுவார் பாய்ந்தோடக் காத்திருக்கும் கொடிய வேங்கையைப் போலக் கம்பீரமாக நின்றது!


TSR
SPECIAL Thick
GOKUL
MALA BATHI
MADE BY. T.S.R & Co. KUMBAKONAM.
T.S.R & CO., PERFUMERS, KUMBAKONAM
தயாரிப்பவர்கள்
டி.எஸ்.ஆர் & கோ
கும்பகோணம்
மேனகா
மட்டிப் பால்
ஜகன்மோகன்
கோகுல் மாலா
A.K.GOPAL & CO.

புத்துணர்ச்சி பெற

காவேரி சூபர்

வெப்பம் உங்களை வாட்டுகிறதா? காவேரி சூபர் சோப்பை உபயோகித்து வியர்வை துர்நாற்றத்தை விரட்டுங்கள்! காவேரி சூபர் உங்களுக்கோர் புத்துணர்ச்சியை அளிக்கும். அதன் ஔஷத மணம் உங்கள் மனதைக் கவரும்.

காவேரி சூபர் ஔஷத குணம் நிறைந்த சால்மூக்ரா தைலம் கலந்தது



கையடக்கமானது, விலை குறைவானது.



தயாரிப்பு:

மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ட்ரியல் கார்ப்பொரேஷன் லிட்.

மேட்டூர் அணை R.S. சேலம் ஜில்லா

மானேஜிங் ஏஜெண்ட்ஸ்: சேஷசாயி பிரதர்ஸ் பிரைவேட் லிமிடெட்.

MC-537

நாட்டு வைத்தியம்

ஸ்ரீஹரி

90. பாம்பு விஷம்–2

சமீபத்தில் டெல்லிக்குப் போக நேரிட்டது. அப்போது நண்பர்கள் பலரைச் சந்திக்க நேர்ந்தது. வைத்தியத் தொழிலில் உள்ள சில நண்பர்களிடமும், பாம்பு விஷத்துக்குச் சிகிச்சை என்னவென்பதைப் பிரஸ்தாபித்து விஸ்தாரமாக விவாதிக்கவும் செய்தேன்.

ஆந்திரத்தைச் சேர்ந்த கிருஷ்ணா ஜில்லாவில் ஒரு குக்கிராமவாசியான ஆயுர்வேத நிபுணர், சில அனுபவசித்தமான விஷயங்களைத் தெரிவித்தார். வாரத்தில் சராசரியில் இரண்டு பேராவது பாம்பு விஷத்துக்குச் சிகிச்சை பெற இவருடைய வைத்தியசாலைக்கு வருவதுண்டு என்கிறார். ஒரே மருந்தைத்தான் இவர் எந்தவிதப் பாம்பு விஷமானாலும் உபயோகிக்கிறாராம். இவர் தெரிவித்த மருந்தின் முக்கிய சரக்கை வேறு விதத்தில் நல்ல பாம்பு என்னும் நாகப்பாம்புக் கடிக்குக் கொடுத்துப் பலன் கண்டிருப்பதை நான் பார்த்திருக்கிறேன். ஆகவே இவர் மருந்தில் எனக்கு நம்பிக்கை ஏற்பட்டது. ஆனால் எல்லாவிதமான பாம்புக் கடிக்கும் ஒரே மருந்து என்பதும், விஷம் எந்த வேகத்தில் இருந்தாலும் அதே மருந்து போதுமாகிறது என்பதும் சாஸ்திரப்படி ஏற்கத் தக்கதாயில்லையே என்று ஆந்திர வைத்தியரிடம் சொன்னேன். என்னைவிட வயதில் முதிர்ந்தவரும், அனுபவசாலியுமான அவர் சிரித்துக் கொண்டே பதில் சொன்னார்.

ஆந்திர வைத்தியர் : பாம்பு விஷங்களுக்கு மந்திரம் போடுவதும், விஷம் இறங்கி ஆள் பிழைப்பதும் உண்டு. இதை நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? இதில் உங்களுக்கு நம்பிக்கை இருக்கிறதா?

நான் : ஆஹா! கேள்விப்பட்டிருக்கிறேன். பாமுல நரஸய்ய என்று ஒரு ஸ்டேஷன் மாஸ்டர் மந்திரத்தினால் பாம்பு கடித்தவர் எத்தனையோ பேரை மரணத்தினின்றும் காப்பாற்றியிருப்பதாகக் கேட்டிருக்கிறேன். கொச்சி ராஜ வம்சத்தில் ஒருவர் பாம்பு விஷ சிகிச்சையில் மிக மிகப் பிரசித்தி வாய்ந்தவர். எத்தனையோ பேருக்கு உயிர்ப்பிச்சை அளித்துள்ளார். இவர் மந்திரம் மருந்து இரண்டையுமே கையாள்வதுண்டு. இவருடன் நெருங்கிப் பழகியவரை நான் அறிவேன். இவருடைய குடும்பத்தைச் சேர்ந்த வேறு சிலருடன் நானே நெருங்கிப் பழகியிருக்கிறேன். அன்னவர் மூலமாகவும் விஷ சிகிச்சை செய்து வந்த இந்த ராஜாவை அறிவேன். ஆகவே, பாம்பு விஷத்துக்கு மந்திர சிகிச்சை உண்டு என்பதை அறிவேன். அதில் குணம் ஏற்பட்டதை அறிவேன். அதில் எனக்கு நம்பிக்கையுமுண்டு.

ஆந்திர வைத்தியர் : மந்திரம் போடுபவரென்ன ஒவ்வொரு விதப் பாம்புக்கும் ஒவ்வொரு மந்திரம் என்றா பிரயோகிக்கிறார்? அல்லது ஏழு வகையான விஷ வேகத்தை யொட்டி ஏழு வகையான மந்திரங்களையாவது பிரயோகிக்கிறாரா? ஒரே மந்திரந்தான் பிரயோகிப்பது. அது எத் தரப் பாம்பு விஷமானாலுஞ் சரி, விஷம் எந்நிலையில் ஏறியிருந்தாலும் சரி. அப்படித்தானே?

நான் : அப்படித்தான் இருக்க வேண்டும்.

ஆந்திர வைத்தியர் : அதேபோல், ஒரே மருந்து எல்லாவிதப் பாம்புக் கடிகளுக்கும் உபயோகப்படலாமல்லவா?

நான் : ......உம்!

ஆந்திர வைத்தியர்: ஆனால் ஒரே ஒரு நிபந்தனை. பாம்பு கடித்த ஒன்றிரண்டு மணி நேரத்துக்குள் இச் சிகிச்சையைச் செய்ய வேண்டும். அவ்வளவுதான். அதற்குமேல் தாமதித்து விட்டால் பலன் தருவதில்லை!

நான் : அப்படியா?

பிறகு அவர் தாம் உபயோகித்து வரும் மருந்தைச் சொன்னார். ஏற்கெனவே, இத்திரவியம் வேறொரு வகையில் உபயோகிக்கப்பட்டதை நான் அறிவேன் என்று சொன்னதை நினைவூட்டுகிறேன்.

தும்பைச் செடி என்று ஒரு குத்துச் செடியுண்டு. இதன் புஷ்பம் பிள்ளையார் பூஜைக்கு மிகவும் சிறந்ததென்று ஏற்பது வழக்கம். இதில் கழுதைத் தும்பை என்று ஒரு வகையுண்டு. அதைத் தெரிந்தெடுக்க முடியா விட்டாலும் தும்பைச் செடியை யாவரும் அறிவர். அதுவே போதுமானது. இதன் இலைகளை உரலில் இட்டு இடிப்பது. பிறகு சிறிது ஜலம் தெளித்து இடித்துப் பிழிந்த சாறு 1—2 அவுன்ஸ். இத்துடன் ஒரு உச்சிக் கரண்டி யளவு நல்லெண்ணெய், இரண்டையும் சேர்த்துக் குடிக்கக் கொடுக்க

வும். விஷமுற்றவர் மூர்ச்சை போட்டிருந்தால்இம்மருந்திலேயே ஒன்றிரண்டு சொட்டு அவர் கண்ணில் கல்க்கமாக விடுவதுண்டு. இப்படித் தும்பைத் தழையின் உபயோகத்தை நல்ல பாம்பு விஷத்தில் உபயோகித்து விஷக்கடி பட்டவர் பிழைத்தெழுந்ததை அறிவேன்.

ஆந்திர வைத்தியர் இத் தும்பை இலையையே வேறொரு விதமாக உபயோகித்து வருகிறாராம். இதன் இலை ஒரு பாகம். பொறுக்கி எடுத்த கெட்டி மிளகு கால் பாகம். இரண்டையும் அம்மியிலிட்டு அரைத்து நெல்லிக்காய் அளவாக உருட்டி வெய்யிலிலிட்டுக் காய வைத்துப் பத்திரப்படுத்திக் கொள்ள வேண்டியது. பாம்புக்கடி என்று வந்தவருக்கு, இம் மாத்திரை யொன்றை எடுத்துச் சந்தனக் கல்லில் ஒரு சொட்டு ஜலம் விட்டு உரசி, மிளகளவு எடுத்து—நாவின்மேல் தேய்க்கவும். விஷக்கடிபட்டவர் நாவை வாயின் உள்ளுக்கு இழுத்துக் கொள்வார். மருந்து தானுகவே உமிழ் நீருடன் கலந்து உள்ளே செல்லும். இதைத் தொடர்ந்து இவ்விதமே ஐந்து நிமிஷத்துக் கொருதரமாக மருந்தை நாக்கின்மேல் தேய்த்துக் கொண்டே இருக்க வேண்டும். இடையிடையே ஒரு இமைக்கும் நேரம் நாவை உள்ளே இழுத்துக்கொண்டு விட்டதும், உடனேயே மேற்சொன்ன விதம் தேய்த்துக் கொண்டே இருத்தல் அவசியம். விஷம் நீங்கி, விஷமுற்றவன் கண் விழித்து எழுந்திருக்கும் வரையில் இதைச் செய்துகொண்டே இருத்தல் மிகவும் அவசியம்.

விஷம் நீங்கிற்றென்று எப்படித் தெளிவது?

விஷமுள்ள பாம்புதான் கடித்தது, விஷமும் ஏறியிருக்கிறது என்று எப்படித் தெளிவது?

ஒரு கல் உப்பை வாயிலிட்டுச் சுவைக்கச் சொன்னுல் அது உப்புக்கரிக்குமானுல் விஷமில்லை என்று தெரியலாம். அல்லது இருந்த விஷம் இறங்கி விட்டதென்றும் தெரிந்து கொள்ளலாம். இவ்விதமே, இலுப்பைப் பிண்ணுக்கையும் மென்று சுவைக்கக் கொடுத்துப் பரீட்சிக்கலாம். கசப்புச் சுவை தெரியுமானுல் விஷமில்லை என்றும், ஒரு சுவையுமே இல்லாமலோ இனிப்புச் சுவையோ இருக்குமானுல் விஷம் உண்டு என்றும் தெரிந்து கொள்ளலாம்.

ஸ்ரீமான் நாராயண அய்யரென்ற ஒரு 'கல்கி' நேயர். பர்மாவில் பிரதான அல்லது தலைமை இஞ்ஜினீயராக இருந்து ஓய்வுபெற்றுத் தாய்நாடு திரும்பியுள்ளவர். தென்னுற்காடு ஜில்லாவைச்சேர்ந்த கள்ளக்குறிச்சியில் ஆசிரமத்தில் வசித்து வருகிறுர்.

பர்மாவில் இவர் எத்தனை பாம்புகளைப் பார்த்திருப்பார்! எத்தனை பேர்கள் பாம்புக்கடி கொண்டவரைப் பார்த்திருப்பார்! இப்போது தங்கி யிருக்கும் இடத்திலும் பாம்புக்கடி கொண்டு சிகிச்சைக்கு வருபவர் பலர். வாரத்தில் நாலு கேஸாவது கட்டாயம் வருமாம். இவர் சொல்கிறுர்.....

சிறியாநங்கை என்னுஞ் செடியைத் தான் இவர் பாம்புக்கடிகளுக்கு உபயோகிக்கிறாராம். ஒரு கேஸாவது தோற்றதில்லையாம்.

இவர் தற்போது வசிப்பது ஒருவிதமான காட்டுப் பிரதேசமென்று சொல்லத்தக்க இடந்தான். வீட்டைச் சுற்றிலும் தன்னிச்சையாகச் சிறியாநங்கை வளருகிறது. இப்போதெல்லாம் பாம்புக்கடி என்று வருபவர் தாங்களே இச் செடியை எடுத்து உபயோகிக்கவும் தொடங்கி விட்டனர்.

சிறியாநங்கை என்னும் குத்துச்செடி ஏறத்தாழ நிலவேம்பு என்னுஞ் செடியைப் போலிருக்கும். இதன் ஸமூலத்தைக் காய வைத்து இடித்துச் சூரணமாக்கி வைத்திருந்து வேண்டியபோது காப்பிக் கஷாயம் போடுவதுபோல் போட்டு உபயோகிக்கிறுர். சூரணத்தை ஜலத்திலிட்டுக் கொதிப்பித்து நல்ல தடிப்பான கஷாயந்தான் செய்துகொள்வது வழக்கம். மூர்ச்சை போட்டுப் பல் கிட்டிப் போயிருந்தவருக்குச் சிறிய கரண்டியினால் பல்லை நீக்கிக் கஷாயத்தைக் குடிப்பித்திருக்கிறுர். தேகமெல்லாம் நீல நிறமாகி மூர்ச்சையில் நினைவற்றுச் சில மணி நேரம் கிடந்தவரும் இக் கஷாயத்தைச் சற்று நேரத்துக் கொருதரமாகக் குடிக்கக் குடிக்க - நினைவு திரும்பி மூர்ச்சை நீங்கிப் பிழைத்தெழுந்துள்ளார் என்றெல்லாம் சிறியாநங்கையின் குணத்தைத் தமது அனுபவத்தில் கண்ட விவரங்களைத் தெரிவித்தார் நண்பர். விஷம் அறவே நீங்கி விட்டால் சிறியாநங்கை சகிக்க முடியாத கசப்பு என்பதை அறியத் தொடங்குவார்.

விஷக்கடி கொண்டவருக்கு அடிக்கடி மருந்து கொடுத்துக் கொண்டிருக்க வேண்டும். ஒரு நிமிஷங்கூடத் தூங்க விடவே கூடாது. பூரணமாக விஷம் நீங்கின பிறகும் 24 மணி நேரமாவது இமையோடு இமை தொடாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். பிறகு சிறிது சிறிதாகக் கஞ்சி முதலியவற்றைச் சேர்க்கலாம். ஒரு வாரம் வரையில் உப்பைத் தவிர்க்க வேண்டும். (தொடரும்)

லிட்டில்ஸ்

ஓரியண்டல் பாம்

தீர்க்கும் பிணிகள்

தலைவலிகள்	நரம்பு வலி
மார்ச்சளி	தசை வலிகள்
தொண்டைப்புண்	மூட்டுகளில் வலி
சுளுக்குகள்	முடக்கு வாதம்
இடுப்பு வாதம்	தொண்டை வாதம்
கீல் வாதம்	நரம்பு நோய்

ஒவ்வொரு
புட்டியுடனும் ஒரு காலண்டர்
இலவசம்

பயோரியா

பல் வலி

ப்ளூ

ஈறுகளில் வீக்கம்

73 வருடப் பிரசித்தி பெற்றது.





இன்றே
மாதிரி சைஸ் ஒன்றை
வாங்கவும்.
ந. பை. 30

கதம்பக் கவி மலர்கள்—3

காட்டில் ஒலித்த தமிழ்க் கவி



சோழவள நாட்டில் திருவாரூரில் இலக்கண விளக்கப் பரம்பரை என்றால், பழைய தலைமுறையில் தமிழறிந்தவர்கள் எல்லோருக்கும் தெரியும். வழிமுறை வழிமுறையாகத் தமிழ் வளர்த்த குடும்பம் அது.

அந்த மரபில் வைத்தியநாத தேசிகர் என்ற ஒருவர் ‘இலக்கண விளக்கம்’ என்ற பெயரில் ஐந்திலக்கணத்தையும் விளக்கும் நூல் ஒன்றை எழுதினார். அதனால்தான் அவருக்குப் பின் அந்த வம்சத்துக்கே இலக்கண விளக்கப் பரம்பரை என்ற பெயர் ஏற்பட்டது.

வைத்தியநாத தேசிகருடைய மாணவர்களாயிருந்த பலர் பிற்காலத்தில் சிறந்த புலவர்களாக முடிந்தது. அவர்களில் படிக்காசுப் புலவர் என்பவரும் ஒருவர். வைத்தியநாத தேசிகருடைய புதல்வராகிய சதாசிவ நாவலரும் தம் தந்தையிடமே தமிழ்க் கல்வி கற்றார். அதனால் படிக்காசுப் புலவருக்கும், சதாசிவ நாவலருக்கும் பழக்கமும், நட்பும் இருந்தன.

கல்விப் பயிற்சி முடிந்ததும் படிக்காசுப் புலவரும், சதாசிவ நாவலரும் பிரிந்து விட்டார்கள்.

தம் தந்தை வைத்தியநாத தேசிகர் காலமானபின் சதாசிவ நாவலர் பலருக்குத் தமிழ் கற்பிக்கத் தொடங்கினார். அவருடைய புலமையும், பெயரும் நாளுக்கு நாள் ஓங்கின.

சதாசிவ நாவலருடைய சொற்பொழிவு தேன் மழை பொழிவது போல் கருத்துச் செறிவோடு இனிதாக இருக்கும்.

அந்தக் காலத்தில் முறையாகத் தமிழ் இலக்கண இலக்கியங்களைப் படிப்பதற்குப் பல வருடங்கள் செலவிடுவார்கள். சங்கீதம் கற்றுக் கொள்பவர்கள் எப்படிக் குருவுடனேயே வாசம் செய்து கொண்டு அந்தக் கலையைப் படிப்படியாகக் கற்றுக் கொள்வார்களோ, அந்த படால் ஒரு பெரும் புலவரை அடுத்துத் தங்கிக் குருகுல வாசம் செய்கிறமாதிரி இருந்து தமிழை முறையாகப் படிப்பார்கள்.

தமிழ் கற்பிக்கும் புலவர்களும், பாடத்தை ஆரம்பிப்பதற்கு முன்னால் மூலச் செய்யுட்களை மனப் பாடம் செய்யச்சொல்லி, மாணவர்களைக் கண்டிப்பது வழக்கம். நன்னூல், காரிகை, நிகண்டு முதலியனவைகளை அப்படி முன்கூட்டியே மனப்பாடம் செய்து விடுவது வழக்கம்.

இம்மாதிரி ஆசிரியருடனேயே உடன்தங்கிக் கற்பதால் தமிழ்க் கல்வி மட்டுமின்றி ஒழுக்கம், உலகியல், பண்பு, எல்லாம் தானாகவே ஆசிரியரிடமிருந்து மாணவனுக்குப் பழகி விடும். தொண்டு செய்யும் பணிவும் வந்து விடும்.

விறகு வெட்டிக் கொண்டும், வேட்டி துவைத்துக் கொண்டும், சாதகம் செய்து சங்கீதம் பழகுகிறமாதிரி நேரத்தை வீணாக்காமல் தமிழ் படித்தார்கள்.

திருவாரூர் இலக்கண விளக்கப் பரம்பரை—சதாசிவ நாவலர் வீட்டில் தங்கி நாலைந்து மாணவர்கள் தமிழ் படித்து வந்தார்கள். நாவலர் அவர்களுக்கு யாப்பருங்கலக்காரிகை என்னும் தமிழ் நூலை அப்போது கற்பித்துக் கொண்டிருந்தார். நாளைக்கு எந்தப் பகுதியைச் சொல்லிக் கொடுக்கப் போகிறாரோ, அந்தப் பகுதியை முதல் நாளே மனப்பாடம் பண்ணி விட வேண்டுமென்று மாணவர்களுக்கு நிபந்தனை போட்டிருந்தார் சதாசிவ நாவலர். மனப்பாடம் செய்யா விட்டால் பாடம் மேலே நகராது. காரிகைச் செய்யுட்கள், கட்டளைக் கலித்துறை என்னும் பாடல் வகையைச் சேர்ந்தவை. இனிய சந்தத்தோடு படித்தால் விரைவில் மனப்பாடம் ஆகி விடும். ஆனாலும் மாணவர்களுக்குச் சில தர்மசங்கடமான நிலைகள் ஏற்பட்டு விடுவது உண்டு. சதாசிவ நாவலர், "நாளைக்குள் பத்துக் காரிகைச் செய்யுள் ஒப்பிக்க வேண்டும்" என்று கண்டிப்பாகக் கட்டளை இட்டிருப்பார். அதே சமயத்தில் வீட்டு வேலைகள் எதையாவது செய்யச் சொல்லிச் சதாசிவ நாவலருடைய மனைவியும் மாணவர்களுக்குக் கட்டளை இட்டு விடுவாள். அந்த அம்மாளுடைய கட்டளைகளையும் தட்ட முடியாது. மாணவர்கள் அவர்களிருவருக்குமே நல்ல பிள்ளையாக வேண்டும்.

இப்படிப்பட்ட சமயங்களில் இரண்டு வேலைகளையுமே சாமர்த்தியமாகச் செய்து விடுவார்கள், சதாசிவ நாவலருடைய மாணவர்கள். அதாவது நாவலரின் மனைவி எந்த வேலையைச் செய்யச் சொல்லுகிறாளோ, அந்த வேலையைச் செய்துகொண்டே பாட்டையும் இரைந்து சொல்லி உருப் போடுவார்கள்.

நாவலருக்குத் தூதுவளைக் கீரையில் உயிர். தூதுவளை வற்றல், தூதுவளைக் காய்க்கூட்டு என்று அதைப் பல்வேறு வகையில் பக்குவப்படுத்தி உண்பார் அவர். அவருக்குப் பிடித்தமான கறிவகை அதுதான்.

நாவலருக்கு என்றைக்காவது தூதுவளைக் கீரையில் ஆசை விழுந்துவிட்டதென்றால் மாணவர்கள் காட்டிலும், புதரிலும் அலைந்து தூதுளஞ் செடியைக் கண்டுபிடித்துக் கீரையும், காய்களும் கொண்டு வந்தாக வேண்டும். நாவலர் மனைவி, மாணவர்களைக் கூப்பிட்டுத் திடீரென்று உத்தரவு போட்டு விடுவாள்.

அன்றொரு நாள் அப்படி நடந்தது. நாவலர் நிறையக் காரிகைச் செய்யுள்களை மனப்பாடம் செய்யச் சொல்லி உத்தரவு போட்டிருந்தார். அதே சமயத்தில் தூதுவளைக் கீரை கொண்டுவரச் சொல்லி நாவலரின் மனைவியும் உத்தரவு போட்டு விட்டாள்.

காரிகையும் ஒப்பித்தாக வேண்டும். தூதுளங் கீரையும் கண்டுபிடித்துக் கொண்டு வந்தாக வேண்டும். மாணவர்கள் புறப்பட்டார்கள்.

செம்மற்பட்டி என்ற இடத்துக்கருகில் காட்டில் தூதுளங் கீரை கண்டுபிடிப்பதற்காக அலைந்தார்கள். மனப்பாடம் செய்ய ஒரு சுருக்கமான வழியும் தயாராயிருந்தது அவர்களிடம். ஒருவன் கையில் காரிகை ஏட்டைக் கொடுத்து விட்டால் அவன் அதைப் பார்த்து இரைந்து படிப்பான். அவன் படித்ததைக் கூர்ந்து கேட்டுத் திரும்பத் திரும்பச் சொல்லி மற்றவர்களும் இரைந்து மனனம் செய்வார்கள்.

அலைந்து திரிந்து ஒரு மட்டில் தூதுளஞ் செடிகள் இருந்த இடத்தைக் கண்டுபிடித்தாகி விட்டது. கையில் முள் பட்டுவிடாமல் தூதுளஞ்செடியில் காயும், கீரையும் பறிப்பதற்குப் போதுமான பழக்கம் வேண்டும். நான்கு மாணவர்கள் கீரை, காய் பறிப்பதற்காகச் செடிக்கு அருகே குனிந்து உட்கார்ந்தனர்.

மற்றொரு மாணவன் மனப்பாடம் செய்வதற்காகச் சொல்லவேண்டிய காரிகைச் சுவடியை விரித்து வைத்துக் கொண்டு உட்கார்ந்தான். அடுத்த விநாடியிலிருந்து அந்த அத்துவானக் காட்டின் புதர்களுக்கு நடுவிலிருந்து காரிகைத் தமிழ்க் கவி ஒலித்தது.

புதருக்கு அப்பால் வழிப்போக்கர்கள் நடந்து செல்லும் சாலை ஒன்றிருந்தது. அந்தச் சமயத்தில் முன்பு சதாசிவ நாவலரோடு அவர் தந்தையிடம், ஒருசாலை மாணாக்கராயிருந்து கற்ற படிக்காசுப் புலவர் அவ்வழியே அவசரமாக எங்கோ போய்க் கொண்டிருந்தார். காட்டுப் புதருக்குள்ளிருந்து காரிகைப் பாடலின் ஒலியைக் கேட்டு வியந்து போய், மேலே நடக்கத் தோன்றாமல் சாலையில் நின்று விட்டார் அவர். "இதென்ன விந்தை! மக்கள் நடமாட்டமற்ற காட்டிலிருந்து காரிகைப் பாடல் ஒலி கேட்கிறது! இங்கே வந்து யார் இதைப் பாடுகிறார்கள்?" என்று கூறிச் சாலையிலிருந்து புதருக்குள் வந்து பார்த்தார் படிக்காசுப் புலவர். யாரோ சில பிள்ளைகள் தூதுளங்காயையும் பறித்துக் கொண்டே பாடலையும் சொல்லி உருப் போடுவதைப் பார்த்தார் அவர். ஆச்சரியம் தாங்கவில்லை அவருக்கு. பக்கத்தில் ஓடிவந்து, "பிள்ளைகளே! நீங்களெல்லாம் யார்? காரியத்தையும் செய்து கொண்டே காரிகையையும் மனப்பாடம் பண்ணுகிறீர்களே?" என்று அவர்களைக் கேட்டார்.

"ஐயா! நாங்கள் சதாசிவ நாவலரின் மாணவர்கள்" என்று பதில் கூறினர் பிள்ளைகள். அதைக் கேட்ட படிக்காசுப் புலவருக்கு மெய் சிலிர்த்தது. தம் நண்பர் சதாசிவ நாவலரின் முகம் நினைவுக்கு வந்தது அவருக்கு. அந்தப் பிள்ளைகளைப் பார்த்து, "சதாசிவ நாவலரின் தந்தை எங்களுக்கெல்லாம் தமிழ் கற்பித்தார். சதாசிவ நாவலர் இப்போது உங்களுக்கெல்லாம் தமிழ் கற்பிக்கிறார். நீங்களோ காட்டுக்கும், செடிக்கும், தமிழ் கற்பிக்கிறீர்கள்" என்று கூறி வியந்து ஒரு பாட்டுப் பாடினார் படிக்காசுப் புலவர்:

"கூடும் சபையிற் கவிவாரணங்களைக்
　　　　　கோளரிபோற்
சாடும் சதாசிவ சற்குருவே முன்உன்
　　　　　தந்தைதம்பாற்
பாடும் புலவர்களானோம் இன்றிச்
　　　　　செம்மற்பட்டி எங்கும்
காடும் செடியும் என்றோ தமிழ்க் -
　　　　　காரிகை கற்றதுவே."

[கவிவாரணம்: கவிகளாகிய யானைகள், கோளரி; சிங்கம், சாடும்: வெல்லும்]

ஆம்! காடும் செடியுந் தமிழ் மணக்கச் செய்து விட்டார்கள் அந்தப் பிள்ளைகள். படிக்காசரை ஒரு பாட்டே பாடத் தூண்டி விட்டது அந்த மணம்.

அமரர் லிங்கன்

எம். எஸ். சிவஸ்வாமி

சரித்திர வரலாற்றில் பல்வேறு சமயங்களில் பலப் பல பெரியோர்களும் மேதைகளும் தோன்றிப் புகழேணியின் உச்சியை அடைந்திருக்கின்றனர். சிலர் விஞ்ஞானிகள். ஸர் ஐஸக் நியூட்டன், ஐன்ஸ்டீன் போன்றவர்கள். சிலர் படைவீரர்கள். நெப்போலியனையும் அலெக்ஸாண்டரையும் போல. சிலர் கவிஞர்கள்; கம்பனும் காளிதாசனும் போல. சிலர் இலக்கியக் கர்த்தாக்கள்; தாகூரையும் டிக்கன்ஸையும் போல. அவர்கள் புரிந்த சாதனைகளைக் குறிப்பிட்டுச் சொல்லிவிட முடியும். அவர்கள் புகழுக்குக் காரணத்தைக் கண்டு பிடிக்கவும் முடியும். அதற்காக விழாக்களும் கொண்டாடலாம். அவர்கள் மக்கள் மனத்தில் நிலைத்து இடம் பெற்று விடுகின்றனர்.

ஆனால் ராஜதந்திரிகள், அரசியல்வாதிகள், சீர்வாதிகள் தங்கள் துறைகளில் எவ்வளவுதான் உயர்ந்த சாதனைகளைப் புரிந்திருந்தாலும், பொது மக்களின் நீண்ட கால அன்பையும் அனுதாபத்தையும் பெறுவதில்லை. அப்படி ஓரிருவர் அப்போதைக்குப் பெற்றாலும், காலவெள்ளத்தில் புகழ் மங்கி விடுகிறது. இதற்குக் காரணம் அவர்கள் சாதித்த எந்தக் காரியத்தையும் அவர்களுக்கு உரித்தான சிறப்பாக எடுத்துக் காட்ட முடிகிறதில்லை.

அவ்விதம் மனித உள்ளத்தில் காலவெள்ளத்தையும் கடந்து சரித்திர உண்மையில் அலசப்பட்டு, நிரந்தரமான இடம் பெற்று விட்டால் அத்தகைய பெரியோர்கள் உண்மையிலேயே பெரியவர்கள். முந்திய தலைமுறை, வருந் தலைமுறை என்ற பாகுபாடின்றி எல்லாக் காலத்திலும் மக்கள் மனத்தில் நிலைத்திருப்பவர்கள் அத்தகைய புகழ் படைத்தவர்கள். புகழ் என்ற பதத்துக்கே இலக்கணமாக விளங்குபவர்கள். பாமர மக்களின் ஆசை அபிலாஷைகளை உணர்ந்து அவற்றுக்கு எந்தக் காலத்திலும் முதன்மை ஸ்தானம் அளித்து, அவைகளைப் பூர்த்தி செய்வதையே லட்சியமாகக் கொண்டு வாழ்ந்து வந்தவர்களுக்குத்தான் அத்தகைய தனிப் பெரும் புகழ் கிடைக்கும். எந்தத் தேசத்தவராயினும் சரி அவர்கள் புகழ் நாட்டின் எல்லைகளைக் கடந்து உலக அரங்கத்தில் ஏறி விடுகிறது.



ஆப்ரஹாம் லிங்கன்

அமெரிக்காவில் ஆப்ரஹாம் லிங்கனும் பாரதத்தில் மகாத்மா காந்தியும் அப்படிப்பட்ட சில பேர்களில் இருவர். காந்தி அடிகளைப் பற்றி நமக்குத் தெரியும். அவரைப் போலவே தேச மக்களின் அன்பைக் கவர்ந்த லிங்கன் அமெரிக்காவில் வாழ்ந்து, அமெரிக்க மக்களுக்காகவே உழைத்து, அமெரிக்க தேசத்தைப் பிளவு படாமல் காத்து மனிதப் பண்பையும் மனித கௌரவத்தையும் நிலைநாட்டினார். நூற்றைம்பது வருஷங்களுக்கு முன்பு அவர் தோன்றினார். எனினும் ஒன்றரை நூற்றாண்டுகளுக்குப் பின்பும் அவர் பிறந்த தினத்தை உலகின் பல்வேறு பாகங்களில் கொண்டாடத் தகுந்த புகழ் எய்தியவர்.

அமெரிக்கர்கள் எல்லோரையும் விட நம் நாட்டு மக்களின் அன்பைக் கவர்ந்தவர் ஆப்ரஹாம் லிங்கன். நாம் எந்தெந்தக் குணங்கள் சிறந்தவை என்று உயர்ந்த மதிப்புக் கொடுக்கிறோமோ, அதே குணாதிசயங்கள்தான் அவரிடம் காணப்பட்டன. அவரிடம் விவேகம் நிறைந்திருந்தது. புத்தி பூர்வமான அறிவு மட்டும் அன்று. பரந்த மனமும், கனிந்த உள்ளமும், தயைமிகுந்த இதயமும், அசாதாரணப் பொறுமையும் அவரிடம் ததும்பிக் கிடந்தன. அத்துடன் அவருடைய மனோதிடம் அசாதாரணமானது. அதிகாரச் செருக்கினால் ஏற்பட்ட உறுதியன்று; கடவுள் மீது தளராத நம்பிக்கையினின்றும், நீதி, நியாயம் ஸத்தியம் என்பனவற்றைக் கடைப்பிடித்ததனின்றும் உருவான மன உறுதி. ஆன்ம திடம் அவரிடம் இருந்தன.

அத்தகைய பெரியாருடைய பிறந்த தினம் பிப்ரவரி மாதம் 12-ம் தேதி. இந்த நாளில் அவரைப்பற்றி நினைவுபடுத்திக் கொள்வது நமது பண்பாட்டுக்கும் ஏற்றது.

நமது நாட்டில் ஒரு ஏழைக் குடும்பத்தில் பிறந்து வறுமையில் வளர்ந்த சாதாரண இந்தியனைப் போலவே தான் லிங்கனும் பிறந்து வளர்ந்தார். அவர் பிறந்தபோது — 150 வருஷங்களுக்கு முன்பு — அவருடைய பெற்றோர்கள் ஒரு சிறிய பண்ணையில் ஒரு மரக் குடிசையில் இருந்தனர். அவருடைய தந்தை எழுத்தறிவு இல்லாதவர்; கல்வி பயிலாதவர். எனவே, குழந்தை லிங்கனுக்குப் படிப்பு சொல்லிக் கொடுப்பதில் அக்கறை

கொள்ளவில்லை. அதில் நம்பிக்கை இல்லை அவருக்கு. "படித்துக் கெட்டுப் போகாதே. பண்ணையில் வேலை செய்" என்றுதான் அவர் உபதேசித்தாராம்.

பிழைப்புக்கு வழியின்றிப் பிறந்த ஊரை விட்டு நூறு மைல் அப்பாலுள்ள ஒரு காட்டுப் பகுதிக்கு லிங்கனின் குடும்பம் அவருடைய ஏழாவது வயதில் சென்றது. அங்கேயும் ஒரு மரக் குடிசையில்தான் வாசம். குடிசைக்கு மூன்று பக்கம்தான் மறைவு. நான்காவது பக்கத்தை ஒரு எருமைத் தோலைக் கொண்டு மூடிக் குளிரிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொண்டார்களாம்.

இந்த லட்சணத்தில் லிங்கன் படித்தது மிகவும் சொற்பம். கொஞ்சம் கொஞ்சமாக, இங்கும் அங்குமாக, தெருக்கோடியிலும், விளக்கடியிலும் ஒன்பது வருஷ காலம் சமயம் கிடைத்தபோதெல்லாம் படித்தார். எல்லாவற்றையும் சேர்த்துப் பார்த்தால் ஒன்பது வருஷங்களில் ஒன்பது மாதங்கள் படித்திருப்பார். தாயாகவே எழுதவும் படிக்கவும் கற்றுக் கொண்டார். எழுதக் காகிதமும் இல்லாத பென்சிலும் இல்லாத காலமும் உண்டு. நிலக் கரி தேண்டும் மண் வெட்டியின் தகட்டின் மீது கரித்துண்டைக் கொண்டே எழுதக் கற்றுக் கொண்டார்.

தந்தைக்கு உதவியாகக் காடு திருத்தி, நிலம் உழுது, சோளக் கொல்லையில் கடவு கட்டும் வேலைகளைச் செய்ததுடன், அந்த பண்ணைக்காரர்களுக்கும் பல சில்லறை வேலைகள் செய்து, இதன் மத்தியில் படித்துக் கொண்டும் இருந்தார். ஒரு புத்தகம் இரவல் வாங்கி வர மைல் கணக்கில் நடந்து செல்வாராம். "ஐம்பது மைல் சுற்றுப் புறத்திலுள்ளவர்களிடம் நான் கேள்விப்பட்ட புத்தகங்கள் அனைத்தையும் வாங்கிப் படித்திருக்கிறேன்" என்று அவரே சொல்லியிருக்கிறார்.

ஜீவனத்துக்குப் பல தொழில்கள் புரிந்திருக்கிறார். ஒரு கடைக் குமாஸ்தாவாகவும், போஸ்ட்மாஸ்டராகவும், ஸர்வேயராகவும் வேலை பார்த்துக் கடைசியாக வக்கீல் தொழிலை நிரந்தரத் தொழிலாகக் கொண்டார். அப்போதுதான் அவருடைய புகழ் வளரத் தொடங்கியது. அதற்குக் காரணம் அவருடைய நேர்மை. நியாயமற்ற வழக்கு எனத் தெரிந்தால் அதை ஏற்றுக்கொள்ள மறுத்துவிடுவார். ஒருசமயம் ஒரு வழக்கைப் பாதி நடத்திக்கொண்டிருக்கும்போது தமது கட்சிக்காரன் பொய் சொல்லுகிறான் என்று தெரிந்தவுடனே வழக்கிலிருந்து விலகிக் கொண்டு வெளியேறி விட்டாராம். கட்சிக்காரர்களிடமிருந்து அக்கிரமமாகப் பணம் பறிக்கும் வழக்கமும் அவரிடம் இருந்ததில்லை. அதனால் மற்ற சக வக்கீல்களுக்கு இவரிடம் அசூயைகூட இருந்ததாகத் தெரிகிறது.

இந்தத் தொழிலில் ஈடுபட்ட காலத்தில்தான் அரசியலில் இவருக்குத் தொடர்பு ஏற்பட்டது. இதற்கு மற்றொரு காரணமும் உண்டு. ஒரு சமயம் தாம் வசித்து வந்த இண்டியானா ராஜ்யத்திலிருந்து அமெரிக்காவில் புகழ் பெற்ற மிஸ்ஸிஸிப்பி நதியில் 1800 மைல் படகுப் பிரயாணம் செய்து நியூ ஆர்லியன்ஸ் நகரத்துக்குச் செல்ல நேர்ந்தது. எதற்காக என்று நினைக்கிறீர்கள்? பருத்தித்தோட்ட முதலாளிகளுக்குப் பலசரக்குச் சாமான்கள் விற்று வருவதற்காகத்தான். அந்தச் சமயத்தில்தான் நீக்ரோக்களைச் சங்கிலியால் கட்டி ஒரு பெரிய மரக்கட்டை மீது ஏற்றிப் பகிரங்கமாக ஆடு மாடுகளை விற்பனை செய்வதுபோல் அதிக விலை கூறும் ஏலதாரர்களுக்கு விற்கப்படும் காட்சியை நேரில் கண்டார். இதைக் கண்டு அவர் உள்ளம் வெதும்பியது. 'எனக்கு மட்டும் சந்தர்ப்பம் கிடைக்கட்டும், இந்தக் கொடிய பழக்கத்தை ஒழித்துக் கட்டவே முயற்சி செய்வேன்' என்று அப்போதே மனத்தை உறுதிப்படுத்திக் கொண்டார். ஆனால் பிற்காலத்தில் இவ்வாறு துன்புறுத்தப்பட்டவர்களுக்கு விடுதலையளித்த உத்தம புருஷர் என்று தம்முடைய பெயர் சரித்திரத்தில் இடம் பெறப் போகிறது என்பதை அவர் எப்படி உணர்ந்திருக்கக் கூடும்? ஒரு ஏழை வக்கீல், நடமாடும் நீதிமன்றம் செல்லும் இடங்களுக்கெல்லாம் சுற்றுப் பிரயாணம் செய்து அங்கங்கே கிடைக்கும் வழக்குகளை ஏற்று வாதாடி அதனால் கிடைக்கும் வருமானம் ஜீவனத்துக்கே போதாத ஒருவர் அரசியலில் உன்னத லட்சியத்தைக் கொண்டிருந்தால் மட்டும் போதுமா? அதைச் செயலில் வடிக்க எவ்வளவோ உபகரணங்கள் அல்லவா வேண்டும்?

அப்படி ஒன்றும் லிங்கனிடம் இருந்ததாகத் தெரியவில்லை. ஆனால் வக்கீல் தொழிலுக்கும் அரசியலுக்கும் எல்லா நாடுகளிலும் எல்லாக் காலங்களிலுமே தொடர்பு இருந்து வந்திருப்பதாக நினைக்க வேண்டும். 1832-ம் ஆண்டில் தமது இருபத்தி மூன்றாவது வயதில் ராஜ்ய சட்டசபைக்கு அபேட்சகராக நின்றார் லிங்கன். தேர்தலில் தோல்வியே அடைந்தார். இரண்டு வருஷங்களுக்குப் பின் மறுபடியும் தேர்தலில் போட்டியிட்டார். அந்த முறை வெற்றி பெற்றார். அதற்குப் பின் மூன்று தடவைகள் ராஜ்ய சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஆனால் அவர் பெயர் வெளியே இன்னும் பரவவில்லை. 'இல்லினாய்' ராஜ்யத்துத் தலைநகரத்துக்கு முதன் முதலாகத் தம் நண்பர் ஒருவர் அளித்த கடன் பணத்தைக் கொண்டு புத்தம் புதிய 'சூட்' அணிந்து சட்டசபையில் புகுந்த போதுதான் இவருடைய அரசியல் அறிவு வளர்ந்ததுடன் சுடர் விட்டுப் பிரகாசிக்கவும் ஆரம்பித்தது.

இதற்காக அவர் தந்திரங்கள் எதையும் கையாளவில்லை. சாதாரண ஜனங்களின் மத்தியிலேயே வாழ்ந்தார். அவர்களுடனே அளவளாவினார். அவர்கள் ஆசை


கள், ஏக்கங்கள், பயங்கள், அபிலாஷைகள் எல்லாவற்றையும் புரிந்து கொண்டார். அவர்களுடைய தீர்மானங்கள் எப்போதுமே சரியான தீர்மானங்கள் என்பதில் நம்பிக்கை கொண்டார். அரசியல் விவகாரங்களில் அவர்களுடைய தீர்மானங்கள் சரியான வழிகாட்டிகளாக இருப்பவை என்ற திட உறுதி ஏற்பட்டது. அந்த ராஜ்யத்தின் முன்னேற்றத்துக்காக ரயில் பாதைகள் போடவும், கால்வாய்கள் வெட்டித் தரவும், பாங்கி முறைகள் பெருகவும் வழிவகுத்துத் தந்து மக்களின் நன்மைக்காகவே உண்மையுடன் உழைத்தார்.

அரசியல் துறையில் அப்போதைக்கு அவர் செய்தது அவ்வளவுதான். தமது தொழில் துறையில் அவர் முன்னேறியதற்கு அவருடைய அறிவுக் கூர்மையும், கதை சொல்லும் திறமையும், பாமர ஜனங்களுடன் கூடி வாழ்ந்த பழக்கத்தினால் சுவை மிகுந்த கதைகள் பல அவர் கோர்ட்டிலேயே சொல்லி நீதிபதிக்கு உல்லாசத்தையூட்டிக் கொண்டே வழக்கின் நியாயத்தையும் எடுத்துக் காட்டி விடுவார். இல்லினாய் மாகாணத்திலேயே அவர் சிறந்த வக்கீல்களில் ஒருவராகச் சீக்கிரமே புகழடைந்து விட்டார்.

தமது முப்பத்தேழாவது வயதில் முதல் தடவையாகக் காங்கிரஸ் சட்டசபைக்கு இல்லினாய் மாகாணத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டார். அப்போது தான் அடிமை ஒழிப்பு முக்கிய பிரச்னையாக இருந்தது. அப்போதிருந்த அரசியல் நிலவரத்தில் ஐக்கிய அமெரிக்காவுக்கு இருந்தது பதின்மூன்று மாகாணங்களே. அவற்றில் தெற்கு மாகாணங்கள் ஆறு. இங்கே தான் முதலில் குடியேறியவர்கள் வசித்தனர். அவர்கள் பருத்தித் தோட்ட விவசாயத்தைத் தொழிலாகக் கொண்டிருந்தனர். விரிவாகப் பரந்துகிடந்த தோட்டங்களில் அடிமைகள் வேலை செய்து வந்தார்கள். இந்த அடிமைத் தொழில் நீடித்து நிற்பதில் தெற்கு மாகாணங்கள் அக்கறை கொண்டன.

வடக்கு மாகாணங்களில் தொழிற்சாலைகள் மிகுதியாக விருத்தியடைந்து முன்னேற்றம் வேகமாக ஏற்பட்டது. யந்திரசாதனங்களின் உதவியைக் கொண்டு பொருள் வளம் மிகுந்திருந்ததால் அடிமை முறையை ஒழிப்பதில் அவர்கள் முற்போக்குக் கருத்துக்கள் கொண்டிருந்தனர்.

தேசத்தை இரு பிளவாக்கக் கூடிய இந்தப் பிரச்னைக்கு முடிவு காணப் பல ஆண்டுகள் காத்திருக்க வேண்டியிருந்தது. சிறுகச் சிறுகவே முயற்சியும் செய்ய வேண்டியிருந்தது. முதலில் மேற்கு மாகாணங்களுக்கு இம்முறை பரவாமல் இருக்க ஒரு திட்டம் வகுத்தார். கொலம்பியாவின் ஒரு பகுதியில் அடிமைத் தொழிலை ஒழிக்கவும் ஒரு சட்டம் கொண்டு வந்தார். இரண்டிலும் தோல்வியே கண்டார். சிறிது காலத்துக்கு அரசியல் வாழ்க்கையி



லிங்கன் பிறந்த மரக்குடிசை

லிருந்து மறுபடியும் வக்கீல் தொழிலுக்குத் திரும்பினார்.

1854-ம் ஆண்டில் கான்ஸாஸ் நெப்ராஸ்கா சட்டம் லிங்கனுடைய அரசியல் பிரதிவாதியான டக்லஸ் என்பவரால் கொண்டுவரப்பட்டது. இதன்படி ஐக்கிய குடியரசுடன் புதிதாக இணையவிருக்கும் கான்ஸாஸ், நெப்ராஸ்கா என்ற இரு பிரதேசங்களுக்கும் அடிமைகளை வைத்துக் கொள்ளும் உரிமையை அவர்களே நிர்ணயித்துக்கொள்ளச் சுதந்திரம் அளிக்கப்பட்டிருந்தது. இதன் மூலம் அடிமை முறை அமெரிக்காவின் விஸ்தாரமான வடமேற்குப் பாகத்துக்குப் பரவுவதற்கு வகையுண்டாயிற்று.

இதை எதிர்த்து லிங்கன் நிகழ்த்திய மூன்று மணிநேரப் பிரசங்கம் சரித்திர முக்கியத்துவம் பெற்றது. மனித உரிமைக்கும் சுதந்திரத்துக்கும் பாதுகாப்பாளராக லிங்கனை நாடறியச் செய்தது. டக்லஸ் விடவில்லை. இருவருக்கும் போட்டி விவாதங்கள் ஏழு நாட்கள் நடந்தன. இதைக் காண இல்லினாய்ப் பகுதி மக்கள் கிராமங்களிலிருந்து குதிரை மீதும், வண்டியிலும், நடந்தும் திரண்டு கூடினர். அப்போதுதான் லிங்கனுடைய கருத்துக்களும், அவருடைய ஆற்றலும் மேன்மையும் வெளிப்பட்டன. "மற்றொருவனை அடிமை கொள்ள எந்த மனிதனுக்கும் உரிமை இல்லை. அடிமை முறை தவறில்லை யென்றால் உலகத்தில் ஒன்றுமே தவறில்லை" என்ற அவருடைய கோட்பாடுகள் சரித்திரத்தில் முக்கிய இடம் பெற்று விட்டன.

புகழ் பெருகினும் வாய்ப்பு கிட்டவில்லை. செனட் சபைக்குத் தேர்ந்தெடுக்கப்படாமல் தோல்வியே யடைந்தார். எனினும், மாகாணங்களுக்குச் சென்று பிரசங்கங்கள் செய்யும் வாய்ப்புகள் அவருக்கு ஏராளமாகக் கிடைத்தன.

1860 ஆம் ஆண்டில் ஆப்ரஹாம் லிங்கன் அமெரிக்காவின் பதினாறுவது ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப் பட்டபோது அடிமை முறை ஒழிந்து விடுமோ என்று பீதியடைந்த ஏழு தெற்கு மாகாணங்கள் ஐக்கிய குடியரசை விட்டு விலகி, தனியாக ஒரு கூட்டு ராஜ்யம் ஏற்படுத்திக்கொண்டு தங்களுக்கு ஜெபர்ஸன் டேவிஸ் என்பவரை ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டன.

ஐக்கியமாக இருந்த நாடு இரண்டாக ஆயிற்று. எந்தத் தேசம் ஐக்கிய நாடாக என்றைக்கும் இருக்க வேண்டுமென்று அமெரிக்கச் சுதந்திரப் பிரகடனம் செய்யப்பட்டதோ, அந்த நாடு இரண்டு பிளவுகளாக ஆகிவிட்டது. அடிமை முறையை வைத்துக் கொள்ளுவதா, அதை ஒழித்துக் கட்டுவதா? மனிதத் தன்மையைப் பேணுவதா, மிருகத்தனமாக வாழ்வதா? சுதந்திரம் மனித வர்க்கத்தில் ஒரு சாராருக்கு மட்டுமா, எல்லோருக்குமா?—இக் கேள்விகள் பின்னணிக்குச் சென்று விட்டன. நாட்டின் ஐக்கியத்தைக் காப்பாற்ற வேண்டுமா, வேண்டாமா? யுத்தம் செய்தும் உயிர்ச் சேதம் ஏற்படுத்தியும் நாட்டின் ஒற்றுமையைக் காக்க வேண்டுமா அல்லது மாகாணங்களுக்குப் பிரிந்து போகும் சுதந்திரத்தை அளித்து நாடு பிளவுபடுவதை அனுமதிப்பதா?—இது போன்ற கேள்விகள் மேலோங்கி நின்றன.

இதைத் தீர்மானிக்கும் பொறுப்பு ஜனாதிபதிப் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்ட உடனே லிங்கன்மீது சுமந்தது.

அவர் அப்போது செய்த தீர்மானம் அவரை அமெரிக்க ஜனாதிபதிகளில் திலகம் என்று ஒளிரச் செய்தது. "நாட்டின் ஐக்கியம் சாசுவதமானது. எந்தத் தனி ராஜ்யமும் தன் விருப்பப்படி ஐக்கியத்திலிருந்து விலகிப் போகச் சட்டப்படி முடியாது. ஐக்கிய நாட்டின் தலைமையில் மக்கள் என்னை அமர்த்தியிருக்கின்றனர். நாட்டின் ஒற்றுமையைப் பாதுகாத்தே தீருவேன்" என்று தெரிவித்தார்.

யுத்தம் மூண்டது. தெற்கு - வடக்கு யுத்தம், உள்நாட்டு யுத்தம் அமெரிக்கச் சரித்திரத்திலேயே மிகப் பயங்கரமான யுத்தம். லிங்கன் விரும்பாத யுத்தம். வேறு வழியின்றி மேற்கொள்ளப்பட்ட யுத்தம். நாட்டைப் பிளவுபடாமல் காக்க நடந்த உள்நாட்டு யுத்தம்.

நான்கு வருஷங்களுக்குப் பின்; பல தோல்விகளுக்குப் பிறகு யுத்தம் முடிவுற்றது. தெற்கு மாகாணங்கள் இறுதியில் தோல்வியுற்றன. ஐக்கிய நாட்டின் ஒற்றுமை நிலை நிறுத்தப்பட்டது. லிங்கன் தம்முடைய பதவிப் பிரமாண வாக்கைக் காப்பாற்றினார்.

இதற்கிடையில் தம்முடைய உறுதிக் கொள்கையான அடிமை வாழ்வுக்கு விடுதலை யளிக்கும் பிரகடனத்தையும் யுத்த காலத்திலேயே செய்து விட்டார்.

ஆனால் வெறியர்கள் எந்த நாட்டிலும் உண்டு. நம் நாட்டில் இல்லையா? காந்திஜி இந்துக்களும் முஸ்லிம்களும் அன்புடன் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்று சொல்லி வந்தது பிடிக்காமல் அவரைச் சுட்டுக் கொல்லவில்லையா? ஆப்ரஹாம் லிங்கன் வாழ்ந்த நாட்டிலும் இப்படித் தான் நடந்தது. 1865-ம் ஆண்டு ஏப்ரல் 14-ம் தேதி இரவு வாஷிங்டன் நகரத்தில் ஒரு நாடகக் கொட்டகையில் தம் மனைவியுடன் நாடகம் பார்த்துக்கொண்டிருக்கையில் ஜான்வில்க்ஸ் பூத் என்ற ஒரு வெறியன் லிங்கனைச் சுட்டு வீழ்த்தினான். சில மணி நேரத்தில் ஆப்ரஹாம் லிங்கன் அமரரானார்.

அவருடைய மரணச் செய்தியைக் கேட்டு உருகாத உள்ளம் இல்லை. யுத்தத்தில் ஈடுபட்டவர்களும், தனித்து நின்றவர்களும், வெற்றியடைந்தவரும், தோல்வியுற்றவர்களும், ஆண்களும், பெண்களும், கண்ணீர் விட்டனர். மக்கள் அனுதாபம் நாடு முழுவதும் இருந்தது. அதற்குச் சமமான உதாரணத்தைச் சொல்ல வேண்டுமானால் அந்த வெள்ளிக்கிழமை மாலை காந்திஜியின் மரணத்தைக் கேட்டுப் பாரத மக்கள் அடைந்த ஆறாத் துயரத்தைத்தான் சொல்ல வேண்டும். பாரத மக்களின் மனத்தில் காந்திஜிக்கு என்ன இடம் உண்டோ அதே இடத்தை அமெரிக்க மக்கள் உள்ளத்தில் லிங்கன் வகிக்கிறார். அவர் இறந்து 94 ஆண்டுகள் ஆகின்றன. ஆனால் அவர் அமரர்.

அமரர் லிங்கனுக்கும் அமரர் காந்திஜிக்குமுள்ள மனிதத் தன்மையின் ஒற்றுமையை எடுத்துக் காட்ட இவ்விருவருடைய படங்களையும் இவ்விதழ் அட்டையில் வழங்கியிருக்கிறோம்.


Brooke Bond Tea
Brooke Bond
A·1 Dust Tea
ப்ருக் பாண்ட்
A-1 ஏ-ஒன்
தூள் தேயிலை

வீணைத் தாமரை



சுதர்சன்

தமிழாக்கம்: ராஜவீ

5. நிலவிலே இருள்


ஒரு நிகழ்ச்சியை நேரில் காணும் பொழுது ஏற்படும் உணர்ச்சி, அந்த நிகழ்ச்சியைப் பற்றிப் பிறர் சொல்லிக் கேட்கும்பொழுது ஏற்படுவதில்லை. ஒருவர் அறுசுவை விருந்து அருந்தி விட்டு வந்து, அதன் சுவையை அபாரமாக வர்ணிக்கிறார். அப்பொழுது நம் நாக்கில் வேண்டுமானால் நீர் ஊறலாம். ஆனால் அதே விருந்தை நாமும் ரசித்துப் புசிக்கும்பொழுது ஏற்படும் இன்பானுபவத்துக்கும், அதைச் செவியால் சுவைத்த இன்பத்துக்கும் எவ்வளவோ தாரதம்யம் உண்டு. மிகத் துயரம் தரும் செய்தி ஒன்றைக் கேள்விப் படுகிறோம். பட்டகாலிலே படும் என்னும் கதையாகக் கெட்ட குடியே கெடுவதைப் பற்றிக் காதால் கேட்கிறோம்; கேட்டு வருத்தப்படுகிறோம். 'பாவம், இவருக்கு இந்த நிலை ஏற்பட வேண்டுமா?' என்று அநுதாபப்படுகிறோம். அதே நிகழ்ச்சி நமக்கோ, நம்மைச் சார்ந்தவர்களுக்கோ நிகழ்ந்து, நாமே கண்ணால் காணும் கண்ணராவி நிலையும் ஏற்பட்டுவிட்டால், அதன் நிலையே வேறுதான். காதால் கேட்டதற்கும் கண்ணால் கண்டதற்கும் உள்ள வேறுபாடும் துயரமும் எத்தகையது என்பது தெளிவாகப் புலனாகும்.

சாருமதியைப் பற்றிப் பலர் பலபடியாகப் பேசிக் கொண்டபொழுது சதாசுகருக்குக் கோபமோ தாபமோ உண்டாகவில்லை. சாருமதி மீதோ தம் மீதோ அல்லது வேறு யார் மீதோ அவர் ஆத்திரம் கொள்ளவில்லை. 'உலகம் இப்படித்தான் ஏதாவது பேசும். அதற்கெல்லாம் நாம் செவி சாய்க்கக் கூடாது' என்று தமக்குத் தாமே சமாதானம் சொல்லிக் கொண்டார். சொன்னவர்கள் மீதும் கதை கட்டிவிட்டவர்கள் மீதும் அநுதாபமே கொண்டார். கண்ணால் காணாததைக் குறைவாகப் பேசக் கூடாது என்றும் முடிவு செய்து கொண்டார்.

ஆனால் அதே நிகழ்ச்சி, தமது வீட்டுக் கதவைத் தட்டிக்கொண்டு வந்த பொழுது, காதால் கேள்விப்பட்ட விஷயம் குடிசைக்குள் நிகழ்ந்துவிட்ட பொழுது அவருக்கு உண்டான ஆத்திரத்தைச் சொல்லி முடியாது. முக்கண்ணனின் வரம் பெற்று, அவர் கண்கள் தீப்பொறி கக்கியிருந்தால், அந்தக் குடிசையே எரிந்து சாம்பராகியிருக்கும். சாருமதியும் அவர் கண்ட அந்த அன்னிய ஆடவனும் அத் தீயிலே புழுவாகத் துடித்துப் பொசுங்கிப் போயிருப்பார்கள்.

சதாசுகருக்கு ஒன்றுமே தோன்றவில்லை. எத்தனை ஆசையோடும் அன்போடும் அவர் அந்தப் பொருள்களை வாங்கி வந்திருந்தார்! மனத்திலே என்ன என்ன கற்பனைகளெல்லாம் செய்து கொண்டு வழிப் பயணத்தை விரைவாக முடித்துக் கொண்டு வீட்டுக்கு வந்திருந்தார்! அவர் கட்டிய கற்பனைக் கோட்டைகள் அத்தனையும் மணல் வீடாகச் சிதைந்து அப்படியா அவலமாக வேண்டும்? மனத்தில் ஆத்திரம் குமுறிக் கிளர்ந்தெழவே தாம் வாங்கி வந்திருந்த பொருள்களையெல்லாம் அப்படியே தொப்பென்று கீழே தரையில் போட்டார். தம் கையிலிருந்த மலைப் பிராந்தியத்துத் தடியை அவரது கை இன்னும் இறுகப் பற்றிக் கொண்டது. 'இரண்டில் ஒன்றைப் பார்த்து விடுகிறேன்' என்று கறுவிக்கொண்டே முன்னேறினார். ஒரு அடி முன்னே எடுத்து வைத்தவர் கடுங் கோபத்துடன், "யாரடா, நீ?" என்று கர்ஜித்தார்.

ஒரு செயலில் உள்ளம் மூழ்கியிருக்கும் பொழுது திடுதிப்பென்று ஒருவர்



கூப்பிட்டாலும், இலேசான ஓசை கேட்டாலும் தூக்கி வாரிப்போடும் அல்லவா? சதாசுகர் அப்பொழுது அங்கே வரப்போகிறார் என்ற நினைவே சிறிதும் இல்லாமல் பேசிக் கொண்டிருந்த சாருமதிக்கும், அந்தப் புதிய ஆடவனுக்கும் சதாசுகரின் கரகரத்த குரலைக் கேட்டதும் ஒரு முறை உடலைத் தூக்கிவாரிப் போட்டது.

திடுக்கிட்டுத் திரும்பிய சாருமதி குடிசை வாசலில் சதாசுகர் கையிலே கம்புடன் கன கோபமாக நின்று கொண்டிருப்பதைக் கண்டு ஆறுக் குற்றாள். எக்கச்சக்கமான நிலையில் சிக்கிக் கொண்டு விட்டோமே என்ற அச்சம் ஒருபுறம்; என்ன நடக்குமோ என்ற பயம் மறுபுறம். சதாசுகர் தவறாகப் புரிந்து கொண்டு, அதனால் ஒன்றுக்கொன்று நிகழ்ந்து விடாமல் இருக்க வேண்டுமே என்ற பீதி இன்னொருபுறம். சதாசுகரைப் பார்த்த அவளது பார்வை அவர்மீது நிலைக்க வில்லை; சட்டென்று பார்வையைத் திருப்பினாள். எதிரே அந்தப் புதிய ஆடவன் காட்சி அளித்தான். எனவே, அவளையறியாமல் அவளையும் மீறி வெட்கம் சூழ்ந்து கொண்டது. சட்டென்று புடவைத் தலைப்பால் தன் முகத்தை மூடிக் கொண்டாள். கட்டிலில் படுத்திருந்த மனிதன் எழுந்து தரையில் நின்று கொண்டான். ஆனால் அவன் முகத்தில் அவளைப் போல் அச்சக் குறியோ, கவலைக்குறியோ தோன்றவில்லை. சதாசுகரை முன்பே தெரிந்தவன் போல் அவன் மிகுந்த சிரத்தையுடன் இரண்டு கைகளையும் கூப்பி வணக்கம் தெரிவித்தான். பிறகு கம்பீரமான குரலில், "என் பெயர் கைலாசநாதன்!" என்றான்.

"யார்? கைலாசநாதனா? உன் ஊர் எது? உற்றார் யார்? எதற்காக இங்கே வந்தாய்?"

சதாசுகரின் குரலிலே கொப்புளித்த கோபம் கொஞ்சமும் குறையவில்லை.

"இந்த ஏழையின் ஊர் லக்ஷ்மணபுரி" என்று சொல்ல ஆரம்பித்தவன் சிறிது நேரம் மௌனமாக இருந்தான். பிறகு, "தங்களைப் பற்றி ரொம்பவும் கேள்விப் பட்டிருக்கிறேன். இன்று உங்களை நேரில் தரிசிக்கும் பாக்கியமும் கிடைத்தது. இதை நான் கிடைத்தற்கரிய பாக்கியங்களில் ஒன்றாகவே கருதுகிறேன். உண்மையில் தாங்கள் சாதாரண மனிதர் அல்ல; மனித உருவத்தில் அவதரித்த தெய்வம் தான். இத்தகைய தெய்வத்துக் கொப்பான மனிதர்கள் இந்த உலகத்தில் கிடைப்பது அரிது!" என்றான்.

சதாசுகரின் குரலிலே எத்தனைக் கெத்தனை கோபம் தெறித்ததோ, அத்தனைக்கத்தனை அவன் குரலிலே அடக்கம் தொனித்தது.

சதாசுகர் ஒருமுறை சாருமதியைப் பார்த்தார். பிறகு கைலாசநாதனைப் பார்த்து, "ஆனால் நீ என்னைப் பற்றித் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறாய். எனக்குப் பணம் காசு பெரிதல்ல; மானம்தான் பெரிது. பணங்காசு இன்று போனால் நாளை வரும். ஆனால் மானம் போனால் போனதுதான். நான் பணம் காசை இழக்கத் தயார். ஆனால் மானத்தை எந்த விலைக்கும் இழக்கத் தயாரில்லை" என்று அடுக்கிக்கொண்டே போனார்.

அதைச் சொல்லும்பொழுது அவருக்குக் கைலாசநாதனிடத்தில் எவ்வளவு கசப்பு ஏற்பட் டிருக்கிறது என்பது நன்றாகத் தெரிந்தது.

கைலாசநாதனுக்கு என்ன பதில் சொல்லுவது என்று புரியவில்லை. வாயடைத்துப் போய் நின்றான். சதாசுகர் மேலும் தொடர்ந்தார்: "இது கண்யம் வாய்ந்த ஒரு கிழவனின் குடிசை. காலாடிகளுக்குக் களிநடம் புரிய இடம் கொடுக்கும் விடுதி அல்ல. சொல்லு, நீ இங்கே எங்கே வந்தாய்? இந்தப் பெண்ணைப் பேச்சினால் மயக்கி இழுத்துச் செல்வதற்காகவா? இதற்காக எவ்வளவு நாளாக தருணம் பார்த்துக் கொண்டிருந்தாய்? இன்று நான் இல்லாத

சமயம் பார்த்து உள்ளே நுழைந்தாயோ? நான் பொல்லாதவன். உன்னை இலேசில் விட மாட்டேன். உன் மண்டையை உடைத்துவிட்டுத்தான் மறு காரியம் பார்ப்பேன். என்னை யார் என்று எண்ணினாய்?''

சதாசுகர் ரௌத்திராகாரமாக மாறிவிட்டார். சாருமதி அழுதவாறே உள்ளே ஓடி விட்டாள். கைலாசநாதன் விஷயம் முற்றிப் போவதைக் கண்டு அவமானத்தினால் தலை குனிந்தான். பிறகு எப்படியோ துணிவை வரவழைத்துக் கொண்டு, "சுவாமி! என்னைப் பற்றி எந்த வாயால் நான் உங்களிடம் சொல்லுவேன்? இவள் இந்த நிலைக்கு ஆளானதற்குக் காரணம் இந்தப் பாவிதான். ஆனால் இதில் என் குற்றமோ இவள் குற்றமோ ஒன்றும் இல்லை!'' என்றான்.

"என்ன, என்ன? நன்றாகப் பேசுகிறாயே!'' சதாசுகர் இடைமறித்து மடக்கினார். "இவள் இந்த நிலைக்கு ஆளானதற்குக் காரணம் நீ. ஆனால் குற்றம் உன்னுடைய தில்லையோ? பேஷ், பேஷ்! எங்கே அப்பா பேசக் கற்றுக் கொண்டாய்?''

"சுவாமி, இவளை மணந்துகொள்ள வேண்டும் என்பது என் ஆசை. நாங்கள் இருவரும் ஒருவரையொருவர் மனமார விரும்பினோம். ஆனால்...''

"இது போல் எத்தனையோ பேர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். உனது இந்த ஆனால் கீனால் எல்லாவற்றையும் விட்டு விட்டுப் பேசு, அப்பா!''

"இல்லை, சுவாமி! என் தாய் தந்தையரிடம் இதைப் பற்றி எவ்வளவோ சொல்லிப் பார்த்து விட்டேன். ஆனால் அவர்கள் என் வார்த்தையைக் காதில் வாங்கிக் கொள்ளவே இல்லை. ஒரு காலால் நின்று எதிர்த்து விட்டார்கள். அவர்கள் பிடிவாதத்துக்கெதிரே என் பேச்சு பயன் அற்று விட்டது. ஆனால் அதேபோல் என் பிடிவாதத்தையும் இன்றுவரை நிலைநிறுத்திக் கொண்டு வருகிறேன். இப்பொழுது என் தாய் தந்தையர் இருவருமே இவ்வுலகில் இல்லை. அவர்கள் காலமாகி விடவே, நான் இவளைப் பற்றி விசாரித்துத் தெரிந்து கொண்டு இங்கே வந்திருக்கிறேன். நான் இன்னும் கல்யாணம் செய்துகொள்ளவில்லை. என் தாய் தந்தையர் உயிருடன் இருந்த காலத்தில் எனக்குக் கல்யாணம் செய்து வைப்பதற்காக அரும் பாடு பட்டனர். ஆனால் நான், 'எனக்குக் கல்யாணம் ஆகி விட்டது.



கல்யாணச் சடங்குகள் ஆகாவிட்டால் என்ன? இரு உள்ளங்கள் இரண்டறக் கலப்பதுதானே கல்யாணம்? அந்தத் திருமணம் எங்கள் இருவருக்கும் எவ்வளவோ நாட்களுக்கு முன்பே நடந்து விட்டது!' என்று தெளிவாகவும் பிடிவாதமாகவும் சொல்லி விட்டேன். என்ன இருந்தாலும் 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' அல்லவா? அவர்கள் மனத்தைப் புண்படுத்த என் மனம் அப்பொழுது இடங்கொடுக்கவில்லை. அதனால்தான்......'' என்றான்.

அத்தனை நேரமும் விடுவிடுவென்றிருந்த சதாசுகர் சிறிது நேரம் யோசனையில் ஆழ்ந்த பிறகு ஏதோ முடிவுக்கு வந்தவராய், "என்னை நீ ஏமாற்றவில்லையே?'' என்று கேட்டார்.

"சாருமதியையே வேண்டுமானாலும் கேட்டுப் பாருங்களேன்!'' என்றான் கைலாசநாதன்.

சதாசுகர் சாருமதியைத் தம் அருகில் அழைத்து, "என் அம்மா! இவன் சொல்லுவது உண்மையா, பொய்யா?'' என்று கேட்டார்.

சாருமதி தலையசைத்து, "உண்மைதான்!'' என்றாள்.

சதாசுகர் யோசித்தவாறே கைலாசநாதனைப் பார்த்தார். அதற்குள் கைலாசநாதன், "என்னைப் பற்றி நானே எப்படிச் சொல்லிக் கொள்ளுவது? எனக்குச் சாப்பாட்டுக்கு ஒரு குறைவும் இல்லை. நினைத்தால் நான் நான்கு கல்யாணங்கள் கூடச் செய்து கொள்ளலாம்; கடவுள் புண்ணியத்திலே எனக்குச் சொத்துச் சுதந்திரம்

வேண்டியது இருக்கிறது. மாத வரும்படி நானூறு, ஐந்நூறுக்கு மோசம் இல்லை. ஆயினும் இவளுக்காக ஓடி வந்திருக்கிறேன். இவள் நினைவு எனக்கு இல்லாவிட்டால், நான் எதற்காக இவ்வளவு தூரம் இவளைத் தேடி ஓடி வந்திருக்க வேண்டும்? நீங்களே சொல்லுங்கள்!'' என்றான்.

''ஆறு வருஷங்கள் கழித்து உனக்கு இவள் நினைவு வந்ததே, அதை நீதான் சொல்லி மெச்சிக்கொள்ள வேண்டும். இவ்வளவு வருஷங்களாகத் தூங்கிக் கொண்டிருந்தாயோ?'' என்றார் சதாசுகர் சற்று வெடிப்பாக.

''எனக்கு எதிரே அவள் பெயரை எடுத்தால் வீட்டை விட்டே விரட்டி விடுவேன் என்று என்னுடைய தகப்பனார் கடிந்து கொண்டார். அதனால்தான்......''

''அப்படி அப்பாவுக்குப் பயந்த பிள்ளையாக இருப்பவன் காதல்–கீதல் என்று இறங்கலாமோ?''-சதாசுகரின் சொற்களிலே கிண்டலும் குத்தலும் தொனித்தன. கைலாசநாதனுக்கு இந்தக் கிழவரிடம் பேசி ஜயிக்க முடியாது என்று தோன்றவே மௌனமானான். ''அது சரி, கடிதமாவது எழுதலாம் அல்லவா? உன் கடிதம் கண்டு இவள் சற்று ஆறுதலாவது பெறுவாளே!'' என்றார் சதாசுகர்.

''கடிதம் எழுதுவதற்கு எனக்கு இவளுடைய விலாசம் தெரிந்தால் தானே!'' என்றான் கைலாசநாதன்.

சதாசுகர் தம் கைத்தடியைக் கீழே வைத்து விட்டு ஒரு நீண்ட பெருமூச்சு விட்டவாறே, ''பாவம், இந்தப் பெண் பட்ட கஷ்டங்கள்தான் எத்தனை, தெரியுமா?'' என்றார்.



''கடவுள் அருளில் உயிருடன் இருக்கிறாளே, அதே பெரிது. இனி இவள் மேல் காற்றுக் கூடப் படாமல் பார்த்துக் கொள்ளுகிறேன்'' என்றான் கைலாசநாதன்.

''இத்தனை நாட்களும் இரவு–பகல் எந்நேரமும் இவள் அழுதுகொண்டே தான் இருந்தாள்.''

''நீங்கள் சொல்ல வேறு வேண்டுமா? இவளுடைய முகமேதான் சொல்லுகிறதே!''

''முன்னுக்கு இப்பொழுது அரை உடம்புகூட இல்லை. நான் முதன் முதலில் பார்த்த அன்றைக்கு இவள் இருந்த நிலையே வேறு. அன்றைக்கும் இன்றைக்கும் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம் அல்லவா இவளிடம் ஏற்பட்டு விட்டது!'' என்றார் சதாசுகர்.

''நீங்கள் உடம்பைப் பற்றிச் சொல்லுகிறீர்கள். இவள் இவ்வளவு நாள் பிழைத்திருந்தாளே, அதுவே பெரிய காரியம் என்றல்லவா நான் நினைத்துக் கொண்டிருக்கிறேன்!'' என்றான் கைலாசநாதன் மீண்டும்.

''அதிருக்கட்டும். நீ இவளை அழைத்துப் போவதற்காகவா இங்கே வந்திருக்கிறாய்?''

''ஆமாம்!''

''ஆமாம் என்று யோசிக்காமல் சொல்லி விடக்கூடாது. நிலைமையை நன்றாக யோசித்தபின் சொல்லு!''

''நன்றாக யோசித்த பின்னரேதான் சொல்லுகிறேன்.''

''உன் சுற்றத்தார்கள் இவளை ஏற்றுக்கொள்ள வேண்டுமே. ஏற்றுக் கொள்வார்களா? யோசித்துச் சொல். இவள் பூவுள்ளம் படைத்தவள். இவளால் ஒரு சின்னக் கடுஞ் சொல்லைக் கூடப் பொறுத்துக் கொள்ள முடியாது.''

''நான் எல்லோரையும் கலந்து கொண்ட பின்தான் வந்திருக்கிறேன். வீட்டில் உள்ளவர்கள் எல்லோரும் சம்மதித்து விட்டார்கள். அப்படியே யாராவது சம்மதிக்கா விட்டால், நான் அவர்களுடன் தொடர்பே வைத்துக் கொள்ள மாட்டேன். இவள்தான் எனக்கு வேண்டும். இவளுக்குப் பிறகுதான் மற்றவர்கள். நீங்கள் இவ்விஷயத்தில் சிறிதும் கவலைப் ப[illegible]ீர்கள்'' என்றான் கைலாசநாதன் மிகவும் அழுத்தந்திருத்தமாக.

சதாசுகர் ஏதோ யோசிக்கலானார். அவருடைய யோசனையை இடைமறித்துக் கைலாசநாதன், "நீங்களும் எங்களுடனேயே வந்து விடுங்கள். அப்பா வராவிட்டால் நானும் வர மாட்டேன் என்று பிடிவாதமாகக் கூறுகிறான் இவன்!" என்றான்.

சதாசுகரின் கண்களை நீர் மறைத்தது. "நீ அவன் சொல்வதைக் கேட்காதே! அவன் ஒரு பைத்தியக்காரி. அவனுக்கு என்ன தெரியும்? நான் அங்கே வருவது நன்றாயிருக்குமா, நீயே யோசித்துப் பார்!" என்றார். அதைச் சொல்லும்போது அவர் குரல் கரகரத்தது.

"வருவது நன்றாயிராதா? ஏன் வந்தால் என்ன? உங்களுக்கு அங்கே ஒருவிதக் கஷ்டமும் ஏற்படாமல் நான் கவனித்துக் கொள்ளுகிறேன். நீங்கள் அவசியம் வந்துதான் ஆக வேண்டும்!" என்றான் கைலாசநாதன்.



இவ்வாறு சொல்லிக் கொண்டிருக்கும் பொழுதே குழந்தை ராமு அங்கே வந்து விட்டான். அவன் கையில் கைலாசநாதன் வாங்கி வந்திருந்த விளையாட்டுப் பொருள்கள் இருந்தன. ராமு சதாசுகரின் அருகில் வந்து ஒவ்வொரு விளையாட்டுப் பொருளாக எடுத்து அவருக்குக் காட்டி அகமகிழ்ந்தான். 'பார்த்தாயா, என்னிடம் எந்த எந்த மாதிரியான விளையாட்டுப் பொருள்களெல்லாம் இருக்கின்றன!' என்று சொல்வதுபோன்ற ஆனந்த உணர்ச்சி அவனுடைய பார்வையில் தாண்டவமாடியது.

"பலே, பலே! இந்த விளையாட்டுப் பொருள்களெல்லாம் ரொம்ப ரொம்ப அழகாக இருக்கின்றனவே! இந்த மாதிரிப் பொம்மைகள் இந்த ஊரில் யாரிடமும் இருக்காது. ஆமாம், இந்தப் பொம்மைகள் எல்லாம் எங்கிருந்து வந்தன?" என்று மகிழ்ச்சியுடன் குழந்தையோடு குழந்தையாக மாறிச் சதாசுகர் கேட்டார்.

ராமு பெருமை உணர்ச்சியில் முகம் மலர, "எங்கிருந்தா? டில்லியிலிருந்து!" என்று பதில் சொன்னான்.

"அப்படியா! அதனால்தான் பொம்மைகள் இவ்வளவு நன்றாயிருக்கின்றன!" என்றார் சதாசுகர்.

அதைக் கேட்ட ராமுவின் முகம் மலர்ந்தது. "இதோ பார்த்தாயா? இந்தக் கரடி டில்லியிலிருந்து வந்திருக்கிறது. இந்தப் பல்லக்கும் குதிரையும் கூடத் டில்லியிலிருந்து தான் வந்திருக்கிறது!" என்றான்.

"ஆமாம், ஆமாம்; நானும் அது தான் நினைத்தேன். ஏன், ராமு! நான் ஒரே ஒரு சமாசாரம் கேட்கிறேன். நீ சொல்லுவாயோ?" என்று கேட்டார் சதாசுகர்.

"கேளு, கேட்கிறதற்கு முன்னால் பதில் சொல்லுகிறேன்."

"இந்தப் பல்லக்கு யாருக்காக வந்திருக்கிறது?"

"பல்லக்கா? அம்மாவுக்காக!"

"சரி, இந்தக் கரடி ......!"

"கரடியா ......?" — ராமு சிறிது நேரம் யோசித்து விட்டு, "உனக்காகத்தான்!" என்று 'டக்' கென்று பதில் சொன்னான்.

அவன் பதிலைக் கேட்டு அனைவரும் 'கலகல' வென்று கைகொட்டிச் சிரித்தனர். சதாசுகரும் சிரித்தவாறே, "ராமு! உன் விளையாட்டுப் பொருள்களெல்லாமே ரொம்ப நன்றாக இருக்கின்றன. எதுவும் டில்லியிலிருந்து வந்தால் நன்றாக இல்லாமல் இருக்குமா?" என்று கேட்டார்.

ராமு திடீரென்று தாத்தாவை ஒரு தடவை பார்த்து விட்டு, "ஏன், தாத்தா! இந்தக் கரடி டில்லியிலிருந்து வந்திருக்கிறது. நீ எங்கிருந்து வந்திருக்கிறாய்?" என்று கேட்டான்.

அவனுடைய அந்தக் கேள்வியைக் கேட்ட கைலாசநாதன் 'கட கட' வென்று சிரித்தான். சதாசுகர், "நானா? நான் இப்பொழுது காங்கடியிலிருந்து வந்திருக்கிறேன்!" என்றார். காங்கடி என்ற பெயரைக் கேட்டதும் ராமுவுக்குத் துப்பாக்கியின் நினைவு வந்து விட்டது. உடனே சதாசுகரின் மடியில் ஏறி உட்கார்ந்து



பம்பாய்த் தமிழ்ச் சங்கத்தின் ஆதரவில் சங்கப் பெண்மணிகள் "நான் கண்ட அகலிகை" என்னும் நாடகத்தை ஜனவரி 14.15 தேதிகளில் அறிவிமரிசையாக நடித் தனர். அந்த நாடகத்தில் பங்கெடுத்துக் கொண்டவர்களே மேலேயுள்ள படத்தில் காணலாம்.


கொண்டு, "என் துப்பாக்கி எங்கே? கொண்டு வா!" என்றான்.

"இனிமேல் உனக்குத் துப்பாக்கி எதற்கு? உனக்குத்தான் கரடி கிடைத்து விட்டதே! கரடி கிடைத்த பிறகு துப்பாக்கி வேறு வேண்டுமா?" என்று கேட்டார் சதாசுகர்.

ராமு யோசனையில் ஆழ்ந்தான். சிறிது நேரத்துக் கெல்லாம் சட்டென்று தலையைத் தூக்கி, "ஆமாம், துப்பாக்கி கட்டாயம் வேண்டும். துப்பாக்கியினாலே இந்தக் கரடியைச் சுட்டுத் தள்ளி விடுவேன்! அதனாலே துப்பாக்கியைக் கொண்டு வா, தாத்தா!" என்று கூறினான்.

இதைச் சொன்னதும் அவனுக்கு என்ன தோன்றிற்றோ, என்னவோ! பயந்த பார்வையுடன் தன் தகப்பனைப் பார்த்தான். 'கரடி இவருடைய தாயிற்றே! துப்பாக்கியினால் இதைச் சுட்டால் இவர் கோபித்துக் கொண்டு விட்டால்...' என்ற பயம் வந்து விட்டது போலும்! ஆனால் கைலாசநாதனின் முகத்தில் கோபக் குறியைக் காணவில்லை. பையனின் பேச்சைக் கேட்டு அவன் இளநகை புரிந்து கொண்டிருந்தான். அதைக் கண்டதும் ராமுவுக்குப் பயம் நீங்கித் தைரியம் பிறந்து விட்டது. உடனே சதாசுகரைத் துன்புறுத்தித் துப்பாக்கியை வாங்கிக் கொண்டு கரடி வேட்டையில் இறங்கி விட்டான். கைலாசநாதன் தன் வீரப் புதல்வனின் தீர விளையாட்டைக் கண்டு மனம் பூரித்தான். அவனுடைய உள்ளத்திலே தந்தைப் பாசம் சுரந்து நிலவு இரவில் கடல் அலைகள் எழும்புவதுபோல் எழத்தொடங்கியது. ஆனால் சதாசுகரின் உள்ளத்திலோ...? அமாவாசை இரவின் காரிருள் கவியத் தொடங்கியது.

இவர்கள் எல்லோரும் உண்மையிலேயே நம்மை விட்டுவிட்டுப் போய் விடுவார்களா? இந்த அன்பு, இந்தப் பாசம், இந்த எளிமை, இந்தத் தெளிவு. மனத்தை எங்கோ இனந் தெரியாத இன்பலோகத்துக்கு இழுத்துச் செல்லும் பிள்ளைப் பிராயத்தின் இந்த வேடிக்கைக் காட்சிகள் - எல்லாம் வெறும் கனவாகி விடுமோ? மழலை மொழி பேசி உள்ளங் கவர யாரும் இருக்க மாட்டார்களோ? இனி இரவு வேளைகளில் நமக்குப் பேச்சுத் துணைக்கு ஆளே இடையாதோ? வறட்சியினால் வெடிச்சிட்டுப் போன தோட்டம், நீரைக் கண்டதும் பசுமை ஓடியிருந்ததே, அது பழையபடியும் வறண்டு வெடிச்சிட்டுப் போகவேண்டியதுதானோ? வற்றி வறண்டு போன ஆறு, மாரிகாலத்து மழை வெள்ளம் கரை புரண்டு ஓடவே கண்களுக்கு இன்பமாகக் காட்சி அளித்ததே! அது மறுபடியும் முன் போலவே வறண்டு மணற் றிட்டாகவே ஆகிவிடுமோ?— இதை நினைத்ததும் சதாசுகரின் கண்களிலிருந்து இரு சொட்டு நீர் இமை வெந்நீராகச் சொட்டியது. (தொடரும்)



கோம்பை ஜனுப் எம். காதர் மைதீன் அவர்கள் குமாரத்தி பீர்ஜஹான் பீபிக்கும் மேஹூர் ஜனுப் கா. முகம்மது சிக்கந்தர் ராவுத்தர் அவர்கள் புதல்வன் முகம்மது சிக்கந்தர் பி. ஏ.க்கும் 21-1-59ந் தேதி கோம்பை மணமகள் இல்லத்தில் வெகு விமரிசையாகத் திருமணம் நடந்தேறியது.

வாழ்க, மணமக்கள் !

மாமியார் மெச்சிய மருமகள்

சோகமான திரைக் கதைகள் வந்து எல்லோரையும் கண் கலங்கப் பண்ணி வந்த தருணத்தில் திரை உலகில் ஒரு திருப்பம் ஏற்படலாயிற்று. இலேசான கதைகள் (Light Themes) இன்று வெள்ளித் திரையில் இடம் பெற ஆரம்பித்திருக்கின்றன. இது வரவேற்கத் தக்க மாறுதல் தான். ஆனால் இலேசான கதைகள் என்றதும், மிக மிக இலேசாகப் போய், வெறும் கேலிக் கூத்துக்கு ஆளாகி, படங்களே பாழாகப் போய்விடுமோ என்று எனக்குச் சில சமயம் பயம் ஏற்படுவது உண்டு.

சினிமாவைப் பார்த்து விட்டு, எல்லோரும் கண்ணீர் விட்டுக் கதறி அழுது கொண்டுதான் வரவேண்டும் என்பதில்லை. படத்தின் நல்ல அம்சங்களை நினைத்துப் புளகாங்கிதம் அடைந்து அநுபவிக்கலாம்; ஹாஸ்யங்களைக் கண்டு மனசுக்குள் சிரித்து, ரஸித்து மகிழலாம். இப்படி நவரஸங்களும் கலந்து வருவதுதான் படங்களுக்குச் சிறப்பைத் தரும்.

நண்பர் ஒருவர் என்னிடம் தமிழ்ப் படங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார். சமீபத்தில் வெளியாகியிருக்கும் தமிழ்ப் படங்களெல்லாம் 'குடும்பத்தோடு போய்ப் பார்க்கக் கூடிய படங்கள்' என்று நான் என் அபிப்பிராயத்தைச் சொன்னதும் அவருக்குப் பிரமாதமான கோபம் வந்து விட்டது.

"என்ன ஸார் இது? ஓயாமல் படங்கள் பார்த்து உங்கள் மூளை கலங்கிப் போய் விட்டது போல் இருக்கிறது. குடும்பத்தோடு போய்ப் பார்க்கும்படியாகத் தமிழ்ப் படங்களில் என்னத்தை நீங்கள் கண்டு விட்டீர்கள்?" என்று அவர் என்னிடம் பிரமாதமாகச் சண்டைக்கு வந்து விட்டார்.

"ஸார்! ஸார்! கோபித்துக் கொள்ளாதீர்கள். ஸார்! நம் தமிழ்ப் படங்களைப் பற்றி இல்லாததும் பொல்லாததுமாக நான் எதையும் சொல்லிவிடவில்லை. எந்தப் புதுப் படமாயிருந்தாலும் கூட்டத்தில் இடிபடாமல் தாராளமாக டிக்கெட் வாங்கிக் கொண்டு சௌகரியமாக உட்கார்ந்து தொந்தரவில்லாமல் படம் பார்க்க முடிகிறதே. அதனால்தான் அப்படிச் சொன்னேன்!" என்று கூறினபிறகுதான் அவர் சமாதானமானார்.



படத்துக் கூடியவரையில் புதிய கருத்துக்களையும் காட்சி ஜோடனைகளையும் புகுத்தினால் படம் பார்ப்பவர்கள் அலுப்படையாமல் இருப்பார்கள். பல படங்களில் பல முறையும் வந்த காட்சிகளே மீண்டும் மீண்டும் வந்து தொலைத்தால் அவைகளைப் பார்த்து எப்படி ரஸிக்க முடியும்? இரண்டொரு முறை இந்த மாதிரி பழைய காட்சிகளைப் பார்த்து விட்டால், தமிழ்ப் படங்களில் பழைய காட்சிகள்தான்வரும் என்று பலர் பொதுவாகத் தீர்மானித்து விடுகின்றனர். அப்பொழுது தமிழ்ப் படம் ஓடும் தியேட்டர்களில் (புதிய படமாயிருந்தாலும் கூட) கூட்டத்தை எதிர்பார்க்க முடியுமா?

ஏ. வி. எம். புரொடக்ஷன்ஸ் தயாரித்து வெளியிட்டிருக்கும் "மாமியார் மெச்சிய மருமகன்" இனிப்பு கலந்த நகைச் சுவைக் கதை; நம்ப முடியாதவைகளும் நடக்கக் கூடாதவைகளும் இந்தப் படத்தில் நிறைய இருக்கின்றன. ஆனாலும் சுவாரஸ்யமான கதைப்போக்கின் காரணமாக அவைகளை அதிகமாகப் பொருட்படுத்தத் தோன்றவில்லை.

பணக்கார அத்தை ஒருத்தி தன் ஒரே வாரிசான கண்ணனிடம் ரொம்பவும் அன்பாயிருக்கிறாள். அவனுக்கு ஒரு பின்ளை பிறந்து தன் சொத்துக்கு உரியவனாக வேண்டும் என்று மிகவும் தீவிரமாக ஆசைப்படுகிறாள். அவள் அப்படி ஆசைப் பட்டிருக்காவிட்டால், கண்ணனுக்கு விவாகமாகாமலே வெகு காட்கள் கடந்திருக்காது. கண்ணனின் விவாகம் தடைப்பட்டுக் கொண்டேயிருந்திருக்காவிட்டால், கல்லூரி மாணவி வசந்தாவும் கண்ணனும் சந்தித்திருக்க மாட்டார்கள். அவர்கள் அப்படிச் சந்திக்கவில்லையென்றால் அவர்களுக்குள் காதல் பிறந்தேயிருக்காது. காதல் பிறக்கவில்லையென்றால் கண்ணன் அத்தையை விட்டுப் பிரிந்து போய் வசந்தாவைப் பதிவுத் திருமணம் செய்து கொண்டிருக்க மாட்டான். அவர்கள் மணவாழ்க்கை தொடங்கியும், குழந்தை பிறக்காமல் இருந்ததனால் தான் படத்தின் முடிவு அவ்வளவு தமாஷாயிருக்க முடிந்தது.

பணக்கார அத்தையின் பாகத்தை ஜி. வரலக்ஷ்மி ஏற்றுத் திறமையாக நடித்



இருக்கிறார். விறைப்பும், மிடுக்கும் அவருக்கு மிகவும் இயல்பாக வருகின்றன. ''காமாட்சி, புறப்படு!'' என்று அவர் சொல்லும்போதே களை கட்டி விடுகிறது. இந்தப் பாகம் ஜி. வரலக்ஷ்மிக்குப் பொருத்தினமாதிரி வேறு யாருக்கும் பொருந்தாது என்று எனக்குத் தோன்றுகிறது. இயல்பான நடிப்புக்கு ஓர் எடுத்துக் காட்டாக விளங்குகிறது அவர் நடிப்பு.

எஸ். எஸ். ராஜேந்திரன் இந்தப் படத்தில் தமக்குப் பொருத்தமான பாகத்தை ஏற்று நன்றாக நடித்திருக்கிறார். வசந்தாவைக் காதலித்து மணந்து கொண்டது, அத்தையின் குழந்தைப் பைத்தியத்தைத் தணிக்கப் பக்கத்து வீட்டுக்காரர் குழந்தையை உரிமை கொண்டாடிப் பல விதத்திலும் அவதிப்பட்டு, பிறகு அந்தக் குழந்தையைப் பெற்றவர்களிடம் சேர்த்து விட்டு, வேறு வாடகைக் குழந்தையைத் தேடி அலைந்து கொண்டு வந்தது ஆகிய கட்டங்களில் நன்றாய் நடித்திருக்கிறார். அந்த இடங்களில் கதை வெகு வேகமாகச் செல்லுகிறது.

அனேகமாக எல்லாப் படங்களிலும் உதவிப் பாத்திரமாகவும் வில்லியாகவுமே வந்து கொண்டிருக்கும் எம். என். ராஜம் இந்தப் படத்தில் மாமியார் மெச்சிய மருமகளாக வந்து எல்லாக் கட்டங்களிலும், எல்லோரும் மெச்சும்படி நடித்திருக்கிறார். கல்லூரி மாணவியாகத் தேர்தல் பிரசாரம் செய்ய வந்ததிலிருந்து கல்லூரியில் சொற்பொழிவாற்றி, அக்காள் வீட்டில் நிராகரிக்கப்பட்டு வெளியேறித் தற்கொலை முயற்சியில் இறங்கியபோது, கண்ணனால் காப்பாற்றப்பட்டு அவனை மணந்து, மாமியாரின் அன்பைப் பெற்றவரையில் அவர் நடிப்பு குறை கூறுவதற்கு இடம் இல்லாமல் இருக்கிறது.

குழந்தையை வாடகைக்குக் கொடுத்த பங்கஜம் ஒரு தினுசான பாத்திரம். கண்ணனிடம் முதலில் கொஞ்சம் முறை தவறி நடக்கமுற்பட்டுப் பிறகு அவனிடம் தங்கை முறை கொண்டாட ஆரம்பித்து விடுகிறாள். பங்கஜத்தின் விபரீத நடத்தை வசந்தாவின் மனத்தை உலுக்கி விடுகிறது. கண்ணீர் விட்டுக் கதறுகிறாள். கண்ணன் உண்மை நிலைமையைச் சொல்ல முடியாமல் தவிக்கிறான். ஆரம்ப முதல் இந்த நாடகத்தை அறிந்தும் அறியாதது போல் இருந்த அத்தை கண்ணனையும் வசந்தாவையும் மன்னித்து விடுகிறாள். மன்னிப்புக்குக் காரணம் வசந்தா கருவுற்றிருக்கிறாள் என்பதுதான்.

இந்தக் காட்சிகள் பார்ப்பதற்குச் சுவாரஸ்யமாகத்தான் இருக்கின்றன. ஆனால், வெறும் நாடகம்போல் ஆகி விடுகிறது. இன்னும் கொஞ்சம் உண்மையாக நடக்கக்கூடிய சம்பவங்களைத் தொகுத்திருக்கலாம். சம்பவங்கள் சிற்சில சமயங்களில் நடக்கக் கூடாதவைகளாக இருப்பது தவறில்லை என்றாலும் ஓரளவு பொருத்தமாகவும் இருக்க வேண்டும் அல்லவா?

சி. டி. சுப்புலக்ஷ்மியின் நடனம் படத்தின் கவர்ச்சிக்குப் பெரிதும் உதவியாயிருக்கிறது.

இந்தப் படத்தில் வரும் பாடல்களில் சில நன்றாயிருக்கின்றன. கவி ராஜகோபால் இயற்றியிருக்கும் ''மழையும் பெய்யுது'' என்ற பாட்டு டி. எம். சௌந்தரராஜனின் குரலில் நன்கு ஒலிக்கிறது. ''ரங்கா ரங்கா'' என்ற குழந்தைப் பாட்டும் நன்றாயிருக்கிறது. எம். எல். வசந்தகுமாரியும் சீர்காழி கோவிந்தராஜனும் அந்தப் பாட்டைப் பாடியிருக்கிறார்கள். ''பத்து விரல் மோதிரம் எத்தனை பிரகாசமது'' என்னும் பாட்டு நல்ல சந்தர்ப்பத்தில் பாடப்படுகிறது. அதில் ''இங்கே இருப்பதா அங்கே வருவதா'' என்ற அடி கதையை அழகுபடுத்துகிறது.

ஒலி, ஒளி, புறக்காட்சிகள் யாவும் ஏ. வி. எம். புரொடக்ஷன்ஸ் என்ற பெருமைக்குச் சான்று பகருகின்றன.

பிரசித்தி பெற்ற டைரக்டர்களான கிருஷ்ணன் — பஞ்சுவின் டைரக்ஷனில் ''மாமியார் மெச்சிய மருமகள்'' எல்லோரும் மெச்சும்படியாகவே இருக்கிறது.




இந்த மனோரம்யமான
பிரகாசமான பெயின்டை
ஒரு முறை வாங்கி உபயோகித்துப் பாருங்கள்!
ஷாலிமார் ஸுபர்லாக் ஸின்தடிக் எனமல்— உட்புறமோ, வெளிப்புறமோ, எந்தப் புறமானாலும் பூசலாம் அதி சீக்கிரத்தில் உலர்ந்து, அதிக காலம் மிகப் பளபளப்புடன் இருக்கக் கூடியது. வீடுகளிலும், தொழிற்சாலைகளிலும், ப்ரஷ்ஷினுலாவது, ஸ்ப்ரேயினுலாவது அல்லது டிப்பிங் முறையிலாவது, எல்லாவித இடத்திலும் பூசலாம்.
38 வித கலர்களில் இவை பைன்ட், காலன் டின்களிலும், 5 காலன் டிரம்களிலும் கிடைக்கின்றன. கலர்கள் ஒன்றோடொன்று கலக்கலாம்.
ஷாலிமார்
ஸுபர்லாக்
ஸின்தடிக் எனமல்
SHALIMAR
SHALIMAR PAINT, COLOUR & VARNISH CO., PRIVATE LTD.
Calcutta • Bombay • Madras • New Delhi • Kanpur
be Bright Call Madras 55965

திருச்சி உலகநாதன்

5. மறைமுக உதவி

சுகி


உச்சிப் பிள்ளையார் கோவிலுக்கு மேலே போகிற கதவைச் சாத்தினான் காவலாளி வீரமுத்து. பூட்டை இழுத்துப் பார்த்த பின்னர் மெதுவாக, உலகநாதனைத் தூக்கிக் கொண்டான். காவலாளி மெதுவாகப் படிகள் இறங்கி நடந்தான். கீழே உள்ள மண்டபம் ஒன்றிலே கொண்டு வந்து இறக்கினான். அந்த மண்டபத்து ஓரமாக மண் பானையிலிருந்து குளிர்ந்த தண்ணீரை எடுத்து முகத்தில் தெளித்தான். உலகநாதனின் முகத்தில் தண்ணீர் பட்டதும் தலையைச் சிலிர்த்துக் கொண்டான். கல்மண்டபமாக இருந்தாலும் பெருக்கிச் சுத்தமாக வைக்கப்பட்டிருந்தது. தரையில் படுக்க வைத்து விட்டுக் காவலாளி வெளியே போனான். அந்த நேரம் தவறிப் போனால் கோவில் கட்டிச் சாதம் அவனுக்குக் கிடைக்காது. இரண்டு கட்டிச் சாதம் அவனுக்குச் சம்பளத்தோடு சேர்ந்து கிடைக்கும் மாமூல். பட்டைச்சாதம் பெறச் சற்றுப் பொறுத்துப் போனால், அவனுக்கு அன்றைக்குப் பட்டினிதான்!

மடைப்பள்ளியிலிருந்து. பெரிய தாம்பாளத்தில் சாதக்கட்டிகள், அழுக்குத் துணி ஒன்றினால் மூடப்பட்டு அதைவிட அழுக்கு உடம்போடு ஒருவர் தூக்கி வந்தார். அவர் வரவைக் காணக் கோயில் சிப்பந்திகள் நின்று கொண்டிருந்தார்கள். ஒவ்வொரு கட்டியாகத் தூக்கி பெறியப்பட்டது. செங்கல்லை அவ்வளவு வேகத்தில் போட்டால் உடைந்து போகும்; கோவில் சாதக்கட்டிகள் செங்கல்லைவிட வலுவானவை. அவை உடையாதவை. கல்லுப்போல் கடினமாக இருக்கும். ஒவ்வொரு கோயில் சிப்பந்திக்கும் எண்ணிக்கை உண்டு. அவ்வாறு எண்ணிக்கையைக் கொடுத்து விட்டுத் தாம்பாளத்தில் இரண்டு கட்டிகளை வைத்துக் கொண்டிருந்தவர், "நாசமாகப் போகிறவனை எங்கே காணோம்?" என்று இரைந்தார். காவலாளி குடல் தெறிக்க வேகமாக ஓடி வந்தான்.

"இதோ வந்து விட்டேன். மன்னிச்சுடுங்க. நேரம் ஆகிப்போச்சு!"

"வா ஐயா, வீரமுத்து ஓடி! இன்னும் ஒரு நிமிஷம் தாமதமாக வந்திருந்தால் கட்டியை வீசியிருப்பேன்" என்றார். காவலாளி வேகமாக வந்து கட்டிகள் இரண்டையும் பெற்றுக் கொண்டான். பெற்றுக்கொண்டவன், "தெரியுமா உங்களுக்கு? உச்சிப் பிள்ளையார் கோவிலுக்குப் போகும் செதுக்குப்படியிலே ஒரு பையன் வழுக்கி விழுந்து விட்டான். நல்ல காலம் உருண்டு என் காலில் தேங்கினான்; வந்து மாட்டினான். நான் இல்லாது போனால் ஆண்டார் தெருப் பக்கம் உருள வேண்டியவன்! சின்னப் பயல், யாரோ அநாதைப் பயல். பாவமாக இருந்தது. மேலேயிருந்து தோளிலே தூக்கி வந்தேன். மூச்சுத் திணறிப் போச்சு! பசு மடத்து மண்டபத்திலே அவனை வைச்சிருக்கேன்" என்று தனது வீரத்தைச் சொன்னான்.

சோத்துக் கட்டி கொண்டு வந்தவருக்கு. "அட, போ ஐயா! நீ எவனைத் தூக்கி வந்தால் என்ன? நாளைமுதல் நேரம் கழித்து வந்தால், அவ்வளவுதான்! திரும்பிப் போகிறபோதே உனக்குச் சேர வேண்டிய கட்டியை யானைக்குப் போட்டுவிட்டுப் போய் விடுவேன்" என்று 'வள்'ளென்று விழுந்தார். காவலாளி தனது திறமையை, தியாகத்தை மடப்பள்ளி ஆள் போற்றவில்லையே என்ற மனத்தாங்கலோடு பசு மடத்து மண்டபத்தை நோக்கி வந்தான். வரும் வழியில் மாமூண்டி ஸ்டோர்ஸ் கடை. வீரமுத்துவைக் கண்டதும் மாமூண்டி கடைக்காரர், இரண்டு வெங்காயம், நாலு பச்சை மிளகாய், கொஞ்சம் பொட்டுக் கடலை, ஒரு கீற்றுத் தேங்காய் இத்தனையும் காகிதத்தில் வைத்து மடித்துக் கொடுத்து விட்டுப் பதிலுக்குக் கையை நீட்டினார். கட்டிகளில் ஒன்று கடைக்காரரின் பொட்டலத்துச் சாமான்களுக்கு இரயமாகக் கடைக்காரருக்குப் போக வேண்டும். காவலாளி சற்றுச் சமாளித்துக் கொண்டு, "கொஞ்சம் மன்னிக்கணும், மாமூண்டியாரே! உச்சிப் பிள்ளையார் செதுக்குப் படிகள் பக்கம் ஒரு பயல் வழுக்கி மூர்ச்சையாகி விட்



டான். அவனைப் பசுமடத்தில் தூக்கி வந்து வைத்திருக்கிறேன். அவனுக்குப் பசி. அதனாலே உங்கள் தருமமாக இருக்கட்டும். அவனுக்கு இந்தப் பட்டைச் சாதம் வேண்டும்" என்று பல்லைக் காட்டிக் கெஞ்சினார். மாமுண்டியார் சுலபத்தில் தருமம் செய்ய ஒப்புக்கொள்ளாதவர். இருந்தாலும் சிறுவன் பட்டினி என்றபோது விட்டுவிட்டார்.

"ஏன், ஐயா! பையன் காதில் கழுத்தில் ஏதாவது நகை நட்டு கிடக்கிறதா?" என்றார்.

"சேச்சே! அந்த வம்பு ஏது? ஒன்றுமே இல்லை. அவனிடம் ஒண்ணேகாலணா இருக்கிறது. பாவம், ஏழை வீட்டுப் பிள்ளை. சோற்றைப் போட்டு அவனை விரட்டி விடுவேன்."

"சோற்றைப் போட்டு விரட்டி விடவா? நம்ம தருமமாக இருக்கட்டும்" என்று மாமுண்டியா பின்னை ஏதோ சொல்ல வந்தவர் நிறுத்திக் கொண்டார். சாப்பாட்டைப் போட்டுத் திரும்பும் பொழுது பையனைத் தம்மிடம் அழைத்து வரும்படி சொன்னார். அவர் மனத்துக்குள் தமது கடைக்கு ஒரு பயல் இனமாக வந்து மாட்டிக் கொண்டான் என்ற எண்ணம். அதனால் கம்பி வளையத்திலே தொங்கிக் கிடந்த நமத்துப்

போன மூறுக்கு இரண்டை எடுத்து. "இதைக் கொண்டு போ. பையனை இங்கே அழைத்துவா, பார்க்கலாம்" என்றார். மாமுண்டியா பிள்ளை இரக்கப்பட்டு இதுநாள் வரை காவலாளி வீரமுத்து பார்த்ததில்லை. இதன் காரணம் அறியாமல் தன் நன்றியைத் தெரிவித்து விட்டு நடந்தான். பசுமடத்து மண்டபத்துள்ளே வந்து பார்த்தால், உலகநாதன் படுத்த இடத்தை விளக்குமாற்றால் பெருக்கிக் கொண்டிருந்தான்.

"எப்படி இருக்கிறது? அடி இல்லையே?"

"ஐயா, பெரியவரே! படியில் உருளும் என்னைத் தாங்கள் நின்று தடுத்திருக்காவிட்டால் நான் உருண்டு போய்க் கீழே விழுந்திருப்பேன். செத்துக்கூடப் போயிருப்பேன்!"

"சாவு வரும்போது யாரும் மறித்து நிறுத்த முடியாது. உனக்காகச் சாப்பாடு வாங்கி வந்திருக்கிறேன். அதோ மூலையில் கிடக்கும் குழவியை எடுத்துக் கொண்டு வா. துவையல் அரைக்கிறேன்."

குழவியென்று சொல்லப்பட்ட உருண்டைக் கல்லை எடுத்துவந்தான். அம்மியாக மண்டபத்துத் தளத்துக் கல்லையே பாவித்துக்கொண்டு துவையல் அரைக்க ஆரம்பித்தான் வீரமுத்து. தனக்கு ஆபத்து வந்ததும், அந்த ஆபத்திலிருந்து காப்பாற்றியவரே உணவு கொடுக்கப் போவதும் ஆச்சரியமாக இருந்தது. துவையல் மணத்தை நுகர்ந்து கொண்டு காவலாளியின் மீசையைப் பார்த்தான்: துவையல் அரைக்கும் வேகத்துக்கும் ஒப்பாக அவன்



மீசை படபட வென்று ஆடி அவனுக்குச் சிரிப்பைத் தந்தது. சிரித்தால் உதைப்பாரோ என்ற பயத்தால் சிரிப்பை அடக்கிக் கொண்டான். மேலும் அங்கிருந்து எப்படிப் போவது, எங்கே போவது என்றும் தெரியாமல் திகைப்பு வந்தது. பயந்து கொண்டு வேறு பக்கம் பார்த்தான்.

ஓங்கி வளர்ந்த வேப்பமரத்தின் சின்னக் கிளையொன்றில் மீன் கொத்தி ஒன்று உட்கார்ந்திருந்தது. மீன் கொத்தி நீர்க் கரையில் தானே இருக்கும்? மண்டபத்துக்கு அருகே எப்படி வந்தது? அவன் யோசித்தான், அதனுடைய நீல நிறமும், அலகின் தோற்றமும் படபட வென்ற இறக்கையடிப்பும் கண்ணைக் கவர்ந்தன.



"பக்கத்திலே ஏதாவது குளம் இருக்கிறதோ, தாத்தா?"

"எப்படிக் கண்டு பிடித்தாய்?"

"மீன் கொத்திக் குருவி இருக்கிறதே. மீன்கொத்தி வர வேண்டுமானால் அருகே மீன் இருக்க வேண்டும். குளம் குட்டை இருந்தால்தானே மீன் இருக்கும்? அதனால் கேட்டேன். குளம் இருக்கிறதா?" என்றான்.

"இந்த மதில் சுவருக்கு அப்பால் நந்தவனமும் அதற்கும் அப்பால் குளமும் இருக்கின்றன. இரண்டும் கோவில் சொத்துக்கள். அந்தக் குளத்திலே மீன் இருக்கும் என்பது இன்றைக்கு நீ சொல்லித்தான் நான் ஊகித்துக் கொண்டேன். உனக்கு மூளை நல்ல மூளை. படித்த பிள்ளையல்லவா?" என்றான் வீரமுத்து.

"தாத்தா! எங்கள் மதவக்குறிச்சி கிராமத்திலே குளம் இருக்கிறது. குளத்தங்கரை மரத்திலும் படிக்கட்டு கைப்பிடிச் சுவரிலும் மீன் கொத்திக் குருவிகள் இருக்கும். வாலாட்டிக் கொண்டு வரிசை வரிசையாக இருப்பதைப் பார்த்திருக்கிறேன். அதனால் தான் மீன்கொத்திக் குருவிகள் குளத்தங்கரைப் பக்கம் இருக்கும் என்பதாக அறிந்து கேட்டேன்."



சென்னை தேனாம்பேட்டை காங்கிரஸ் பொருட்காட்சி கலா மன்றத்தில் ஜனவரி 27ந் தேதி குமாரி பி. நளினியின் நடனம் வெகு விமரிசையாக நடைபெற்றது. கவர்னர் திரு விஷ்ணுராம் மேதி இந் நடன வைபவத்துக்கு விஜயம் செய்து சிறப்பித்திருந்தார்.

"இருந்தாலும் நீ யூகமுள்ள பையன் தான்!"

காவலாளி பேசிக்கொண்டே பச்சை மிளகாய், வெங்காயம், பொட்டுக் கடலை வைத்துத் துவையல் அரைத்து முடித்தான். வதங்கிப்போன முறுக்கையும் எடுத்து வைத்தான். தொலைவிலே நின்ற வாழையிலிருந்து சிறு இலையைக் கிழித்து வந்தான். இருவரும் அமர்ந்து உணவருந்தினர்.

"ராத்திரியும் இப்படியே கட்டிச் சோறு கிடைக்குமா?" என்று கேட்டான் உலகநாதன்.

"ஆமாம்! கிடைக்கும். ஆனால் ஒரு கட்டிதான் கிடைக்கும். நாம் இருவரும் பங்கு போட்டுக் கொள்ளலாம். நீ எங்கேயாவது போக வேண்டுமா?"

"எனக்கு யாரும் இல்லை. பாவம், என்னால் உங்களுக்குச் சிரமம். எங்கேயாவது போய் விடுகிறேன்."

"நீ இங்கேயே கொஞ்ச நேரம் இரு. மலை உச்சிக்கு வந்தவன் பிள்ளையாரைப் பார்த்து விட்டுப் போ."

"எனக்கும் அதுதான் எண்ணம்."

காவலாளி இலையை எடுத்துச் சுவர் ஓரமாகக் கொண்டு போட்டான். பிறகு இடத்தைச் சுத்தம் செய்து விட்டு வெற்றிலையை மென்று கொண்டே, துண்டை விரித்துப் படுத்தான். படுத்த சிறிது நேரத்துக்குள்ளேயே குறட்டையின் வேகம் வளர்ந்தது. பச்சரிசிச் சாதம், வேப்ப மரத்துக் காற்று, சில்லென்ற கல் வரிசைத் தளம் இவ்வளவும் சேர்ந்து உலகநாதனுக்கு கண்ணைச் சொக்கியது. அவனும் தரையில் படுத்தான். அவன் மனசிலே பயமும் வந்தது, மகிழ்ச்சியும் வந்தது. சித்தியை எண்ணும் போதே சிறுப் பயலின் எண்ணமும் வந்தது.

தொலைவில் எங்கோ ஒரு கன்றுக் குட்டி 'அம்மா' என்று கத்தியது. திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்த உலகநாதன், "அம்மா! அம்மா! நீ ஏன் என்னை விட்டு விட்டுச் செத்துப் போனாய்? எப்போது செத்துப் போனாயோ? இனி யார் என்னைப் படிக்க வைப்பார்கள்? யார் புத்திமதி சொல்வார்கள்? எனக்குப் பயமாக இருக்கிறதே?" என்று தேம்பித் தேம்பி அழலானான். "என்ன ஐயா வீரமுத்து! தூக்கமா?" என்று கேட்டுக்கொண்டே அங்கே மாமுண்டி வந்தார். கிடைத்திருக்கும் பையன் தமக்குப் பயன்படுவானா என்று நோட்டம் பார்ப்பதற்காக. அவரைக் கண்டதும், அழுது கண்ணீர் ஓடிக் கொண்டிருந்த கன்னத்தைத் துடைத்துக் கொண்டான் உலகநாதன்.

"ஏம்லே அழறே? என்னாத்துக்கு அழறே? ஆயிரம் பதினாயிரம்கொண்டு வந்து பறி கொடுத்துப் போட்டியா?" என்று உரத்துக் கேட்டார் மாமுண்டி. அவர் குரலே உலகநாதனுக்கு வெலவெலப்புத் தந்தது.

"வாங்க, கடைக்காரரே! ஏது இங்கேயே வந்து விட்டீங்க?" என்று கேட்டான் வீரமுத்து.

வந்த மாமுண்டி பையனை விழுங்கி விடுபவர்போல் பார்த்தார்.


பிறகு, "என்ன வீரமுத்து! பயல் ஒப்பேறுவானா? ஓடும் பிள்ளையாகக் கணக்கு வைத்துக் கொள்ளலாமா? என்ன நினைக்கிறே?" என்று கேட்டார்.

"எனக்கு என்ன தெரியும்? பார்த்தால் நல்ல பிள்ளையாகத் தோணுது. உங்க பையனைவிடவா மக்காக இருக்கப் போகிறான்?"

"அப்போ, மேலே உச்சி மலைக்குப் போகும்போது பையனைக் கடைக்குக் கொண்டு வருகிறாயா? அல்லது நான் அழைத்துப் போகட்டுமா?" என்று கேட்டார் மாமுண்டி.

உலகநாதனுக்கு ஒன்றுமே விஷயம் புரியவில்லை. (தொடரும்)

மூடுபனி



'ஜல் ஜல்' என்று சதங்கையின் ஒலி திசையெல்லாம் பரவ மன்னூர்ப் பண்ணையின் வில் வண்டி நாட்டான் வாய்க்கால் சாலையிலே வேகமாகப் போய்க் கொண்டிருந்தது. 'ஏய், ஹேய்' என்று அடிக்கடி மாடுகளை அதட்டும் ரத்தினத்தின் காத்திரமான குரல் சீராக ஒலிக்கும் மாட்டுச் சதங்கைச் சத்தத்தின் ஊடே புகுந்து அருகே ஓடும் ஆற்று நீரோட்டத்தின் அடக்கமான ஓசையை ஊடுருவிக் கொண்டு நெடுந் தூரம் சென்று எதிரொலித்தது.

வண்டிக்குள் சோர்ந்து உட்கார்ந்து கிடந்த மூர்த்தியிடமிருந்து அடிக்கடி நீண்ட பெருமூச்சுக்கள் வெளிப்பட்ட வண்ணம் இருந்தன. அவன் கண்கள் அழுது அழுது சிவந்திருந்தன. அவனுடைய உள்ளம் ஒரு நிலையில் இல்லாமல் அலைபாய்ந்து கொண்டிருந்தது. 'வண்டியைத் திருப்பு, ரத்தினம்' என்று சொல்லப் பலமுறைகள்வாயெடுத்தான். பாசம் அவன் வாயைக் கட்டியது. 'ஒரு முறை, ஒரே ஒரு முறை, தொலைவில் இருந்தாவது அந்த முகத்தைப் பார்த்துவிட்டு, எவர் கண்ணிலும் படாமல், ஒரு கணமும் தாமதியாமல் உடனேயே திரும்பி விடலாம்' என்ற சபலம் அவன் மனத்தை ஊக்கியது.

'உடனே வந்தால் தகப்பனாரை உயிருடன் காணலாம்' என்ற தந்தியைக் கண்டு பட்டணத்திலிருந்து பறந்து ஓடி வந்தான் மூர்த்தி. ரயிலடியில் ரத்தினம் வண்டியுடன் காத்திருந்தான். மூர்த்தியைக் கண்டதும் இரு கைகளாலும் முகத்தை மூடிக் கொண்டு "குழந்தே!..." என்று கூவி அழுதான் ரத்தினம். நிலைமை எப்படி இருக்கிறதோ என்று கலவரப்பட்டுக் கொண்டே வந்த மூர்த்தியை ரத்தினத்தின் செயல் திடுக்கிடச் செய்துவிட்டது. பதறிக் கொண்டு அவனிடம் பாய்ந்து சென்று, "ஏன், ரத்தினம்! என்ன? என்ன ஆயிற்று? ஐயா எப்படி இருக்காங்க?" என்று கேட்டு அவன் தோள்களைப் பற்றிக் குலுக்கினான்.

ரத்தினம் துண்டால் கண்ணைத் துடைத்துக் கொண்டு மங்கிய குரலில், "பயப்படாதீங்க, குழந்தை! ஒன்னும் இல்லே" என்றான். மூர்த்தி, 'அப்பாடா!' என்று நிதானமாக மூச்சு விட்டான். இருவரும் வண்டி இருக்கும் இடத்தை அடைந்தனர். ரத்தினம் வண்டியைப் பூட்டினான்.

"என்னைக் கண்டதும் நீ குமுறி அழுததைப் பார்த்ததும் என் மனசு எண்ணாததெல்லாம் எண்ணி விட்டது, ரத்தினம்! 'சரி! நமக்கு முகமுழிக்குக்கூடப் பாக்கியம் இல்லைபோல் இருக்கிறது; வேண்டாத பிள்ளை வேண்டாதவனாகவே ஆகி விட்டோம்' என்று எண்ணி விட்டேன்."

"அதை நினைச்சுத்தான் குழந்தை நானும் அழுது விட்டேன்!"

ரத்தினத்தின் அச்சொல்லைக் கேட்டு மூர்த்திக்கு மீண்டும் தூக்கிப்போட்டது.

"எதை நினைத்து ...?"

"ஏறிக் குந்துங்க. பேசிக்கொண்டே போவலாம்."

மூர்த்தி வண்டியில் அமர்ந்தான். ரத்தினம் முன்புறத்தில் உட்கார்ந்து ஓட்டத் தொடங்கினான்.

வண்டி, நிலையத்தின் குறுக்குச் சாலையைத் தாண்டுகிற வரையில்தான் மூர்த்தியால் பொறுமையாக இருக்க முடிந்தது. வண்டி நெடுஞ்சாலையில் திரும்பினதும் ரத்தினத்தை நச்சரிக்கத் தொடங்கினான்.

"வேண்டாம், குழந்தை! கிளறாதீங்க. என்னவோ, உங்களைப் பார்த்ததும் எம் மனசு நாளல்லே; அழுதுட்டேன். அதை அந்த மட்டோடே விட்டுடுங்க. இப்போதைக்கு ஐயாவைப் பத்தின கவலை ஒண்ணோடே இருக்கட்டும்."

"அப்பாடா! இப்போதுதான் என் மனசு ஒரு நிலைக்கு வந்தது, ரத்தினம்! என் விஷயத்தைப் பற்றித்தானே? அது கிடக்கிறது, தள்ளு! ஐயாவின் நிலைமை எப்படி இருக்கிறது? அதைச் சொல்லு. அதுதான் முக்கியம்."

"அது எப்படிக் குழந்தே? எல்லாமே முக்கியந்தான். ஒரு சங்கதி குழந்தை. தந்தி கிடைக்க வந்ததாக அங்கே யாருகிட்டேயும் காட்டிக்காதீங்க."

"அது ஏன், அப்படி?"

"ஏன்னா? விவரம்தெரிஞ்சா எனக்கும் உங்க கதிதான். நானும் வேண்டாதவனா, விரோதியா ஆயிடுவேன். ஆனா...வர்றது வரட்டும்னு துணிஞ்சு நான் தந்தியைக் கொடுத்து வைத்தேன்! இருந்தாலும்..."

"என்ன?...தந்தி நீயாகக் கொடுத்தாயா?"

"பின்னே? அவங்கதான் காரியம் ஆனப்பறங்கூட உங்க காதுக்குச் சேதியை எட்டவிடக் கூடாதுன்னு..."

மூர்த்தியிடமிருந்து சர்ப்பம் சீறுவது போன்ற பெருமூச்சு ஒன்று வெளிப்பட்டது. "ஐயாவுக்கு இதுதெரியுமா?" என்று அவன் வேதனைக் குரலில் கேட்டான்.

ரத்தினம் கடகடவென்று பலமாகச் சிரித்து விட்டான்.

"நல்ல பிள்ளை நீங்க! இந்தக் காலத்திலே இப்படிக் கூட உலகம் தெரியாமல் யாராச்சும் இருப்பாங்களா? ஐயாவோட மனசுதானே இதிலே ரொம்ப முக்கியம்!"

"என்ன!" - மூர்த்தி தன்னை மறந்து இரைந்து கூவினான்.

"ஆமானுங்க. உங்க சின்னம்மா இருக்காங்களே, பெரிய போர்வழிங்க. ஊருக்கு ஒப்பிக்க, தான் ரொம்ப நல்லவங்களாட்டம் பேசிப் பசப்பாருங்க. உள்ளுக்குள்ளே ஐயா மனசை விஷக் குட்டையா ஆக்கிட்டாங்க!"

"ஊம்! அது இன்றைக்குப் புதிய இல்லையே!"

"அது சரி! ஆனால், விஷம் தலைக்கேறிய நிலையிலே ஐயா இப்போ என்ன சொல்கிறாங்க! 'அந்தச் சண்டாளப் பய முகத்திலே முழிக்காமே நான் கண்ணை மூடணும்'னுல்லே சொல்கிறாங்க?"

"அப்படியா சொல்றாங்க?" என்று குமுறி வரும் அழுகையை அடக்கிக் கொண்டு கேட்டான் மூர்த்தி.

"போகட்டும்; இந்த வார்த்தையைப் பேசுகிற நிலைமையிலாவது அவரைப் பார்த்து விட்டு உடனே திரும்பி வந்து விடுகிறேன்."

"என்ன இருந்தாலும் குழந்தே, உலகம் ரொம்பக் கெட்டதுதான். மூத்தா கூறு, இளையா கூறுன்னுக் குடும்



பம் இப்படித்தான் கலைசல் கண்டு போவுது !''

மூர்த்தி பேசாமல் வண்டியில் சாய்ந்திருந்தான். அவன் மனக் கண்ணெதிரே மன்னூார் வீடும், அங்கே உயிருக்கு மன்றாடிக்கொண்டு படுக்கையில் கிடக்கும் தகப்பனார் உருவமும், அவர் அருகே கழுகுபோல் உட்கார்ந்து முதலைக் கண்ணீர் வடிக்கும் சிற்றன்னையின் தோற்றமும் காட்சி அளித்தன. உடம்பு படபடத்தது. ரத்தினம் பற்றின்றிச் செயல் புரியும் துறவிபோல் மாடுகளை அதட்டி ஓட்டிக் கொண்டிருந்தான். கிட்டத் தட்ட ஊரின் எல்லையை எட்டுகிற சமயம்.

'' ஆனால் குழந்தை, நான் மட்டும் ஒண்ணு சொல்லுவேன் !''—

'' என்ன, ரத்தினம் ! எதுவானாலும் தயங்காமல் சொல்லு.''

'' பச்சைப் புள்ளையிலிருந்து உங்களைத் தூக்கியெடுத்து வளர்த்த பாசத்தினாலே எதையும் ஒளிக்க மனசு வரல்லே !''— அவன் அடித் தொண்டை கரகரத்தது. கண்ணைத் துடைத்துக் கொண்டு அவன் மறுபடியும் பேசினான்.

'' உங்க சின்னம்மா விஷயம் ஒரு பக்கம் கிடக்கட்டும். அவங்க ஆக்கி வைச்ச நிலையாலே ஐயாவோட மனசு பாசாணமா ஆயிட்டதும், இன்னொரு பக்கம் இருக்கட்டும். தஞ்சாவூரு பெரிய டாக்டர் சொன்ன மாதிரி ஐயாவுக்குப் பாழாய்ப் போன ரத்த அழுத்தம் ஏற்பட்டதிலிருந்து ஐயாவைப்பற்றி எதையுமே நிதானிச்சுப்பேச முடியல்லே. திடீர்னு இப்போ உங்களைப் பார்த்தால் ஐயா பிராணன் அப்படியே போக்குன்னு நின்னுனாலும் நின்னுவிடும் ''—

'' ஆ !...''

'' சின்னம்மா தலை விரிகோலமாக உங்கள் காலடியிலே விழுந்து முட்டி மோதிக்கிட்டு, 'பாவி, பரப்பான்னு' ''

'' ரத்தினம் !''

''அது கூடப் பரவாயில்லே. ஊர் முழுவதும் 'அப்பனைக் கொல்ல வந்த துக்கிரி'ன்னு உங்களை ''—

'' வண்டியைத் திருப்பு, ரத்தினம்!...''

'' சேச்சே ! என்ன குழந்தை இது? ஒரு பேச்சுக்கு ஏதோ சொன்னால்..''

'' நீ வண்டியைத் திருப்புகிறாயா, நான் வண்டியிலிருந்து குதிக்கட்டுமா ?''— பெருங் குரலில் இப்படிக் கேட்டுக் கொண்டே கீழே குதித்துவிடப் பார்த்தான் மூர்த்தி.

ரத்தினம் வண்டியை நிறுத்தினான். '' என்னங்க குழந்தை இது ? ஊருக்குத் தான் பால் குடிக்கணும், உடம்புக்குத் தான் பால் குடிக்கணும் ''

அவன் வார்த்தையை முடிப்பதற்குள் மூர்த்தி குறுக்கிட்டான்.


'' ஊரையோ உன் எசமானி அம்மாவையோ எண்ணி நான் பேசவில்லை, ரத்தினம்! நீ அந்தரங்கமாக, ஆத்மார்த்தமாக ஒரு வார்த்தை சொன்னாயே, அதை எண்ணித்தான். தெய்வ கடியாக ஐயா இந்தப் பூட்டிலிருந்து பிழைத்து எழுந்து இன்னும் பல காலம் இருக்கலாம். இப்போது நான் குறுக்கிட்டு அவர் உயிருக்கு எமன் ஆவானேன் ? எனக்கு அவர் முக முழியும் அவருக்கு என் கைப்பொரியும் விதித்திருந்தால் விட்டுப் போகாது. ஆகவே இப்போதைக்கு நான் திரும்பிப் போய் விடுகிறேன்.''

ரத்தினம் நெடுமூச்செறிந்தான். ''சரி! நீங்கள் சொல்வதிலும் உண்மை இருக்கத்தான் இருக்கு. ஆனால் இப்படி நீங்க வந்து திரும்பினது வெளியே தெரிஞ்சால் நல்லா இராது. என் ஊட்டுக்கு யாரோ வருகிறதாகச் சொல்லி இந்த வண்டியைப் பூட்டிக்கிட்டு வந்தேன் !'' என்று சொல்லிக் கொண்டே வண்டியைத் திருப்பி ஓட்டத் தொடங்கினான்.




'' அப்படியே இருக்கட்டும், ரத்தினம்! நான் யாரிடம் சொல்லப் போகிறேன் ? நீ மட்டும் ஐயா நிலைமையைப் பற்றி அடிக்கடி கடிதாக எழுதிக் கொண்டிரு.''

வண்டி, ரயில் நிலையத்தை அடைவதற்கும் வைகை காட்டி இறங்குவதற்கும் பொருத்தமாக இருந்தது. மூர்த்தி ஓடிச்



டாட்ஜ்

டீசல்கள்



முன்னேற்றத்துடன் தயாரிப்பவர்கள்
தி பிரிமியர் ஆடோமொபைல்ஸ் லிமிடெட்
பம்பாய்

உங்கள் அருகாமையில்
உள்ள டீலர்களை
விசாரியுங்கள்.

சென்று டிக்கட்டைப் பெற்றுப் பிளாட் பாரத்தை அடைந்தான். ரயில் வந்தது. மூர்த்தி ரத்தினத்திடம் ஐந்து ரூபாய் நோட்டைத் திணித்து, "தபால் செலவுக்கு வைத்துக் கொள்" என்று கூறி ரயிலில் ஏறி அமர்ந்தான். ரயில் உடனேயே புறப்பட்டு விட்டது.

நாட்கள் வந்து போய் மாதக்கணக்கில் மூன்றை எட்டி விட்டன. மூர்த்தி ஒவ்வொரு நாளும் தகப்பனாரைப் பற்றிய செய்தியை எதிர்பார்த்து எதிர்பார்த்து ஏமாந்து கொண்டே இருந்தான். ரத்தினம் சொல் தவறிவிட்டான் என்று அவன் மனம் குற்றம் சாட்டவில்லை. தான் சில கடிதங்கள் எழுதியுங்கூட அவனிடமிருந்து பதில் இல்லையென்றால் அதற்குத் தகுந்த காரணம் இருக்கும் என்றுதான் அவனுடைய நல்ல உள்ளம் எண்ணியது.

ஒரு நாள் காலை. சுந்தரகாண்டம் பாராயணம் முடித்து கடவுளை வணங்கி எழுந்து கரம் கூப்பி வேண்டினான். "ராமச்சந்திரப் பிரபு! சுந்தரகாண்ட பாராயணம் செய்தால் நினைத்தது கை கூடும் என்று சொல்வார்கள். அந்த வாக்குப் பொய்க்கக் கூடாது. உன் மகிமை குறையக் கூடாது. என் தகப்பனார் பிழைத்தெழுந்து சுகமாக இருக்கிறார் என்ற ஒரு சொல் அமுதம் போல் என் செவியில் விழ, நீதான் அருள்புரிய வேண்டும்" என்று வாய்விட்டுப் பிரார்த்தித்தான். ராமர் படத்தில் நிழலாட்டம் தெரிந்தது. பின்புறம் திரும்பினான். "ஆ!..." என்று கூவினான். அவன் உடம்பு பதறியது.

"மூர்த்தி!..."

"அப்பா!"

கைலாசம் மகனை ஆரத் தழுவிக் கொண்டார். அவன் கண்களில் நிறைந்து துளும்பிய நீரைத் தம் உத்தரீயத்தால் ஆதரவோடு துடைத்தார்.

பாராயணம் முடிந்து விட்டதை அறிந்து வழக்கம் போல் காப்பியுடன் அங்கே வந்தாள் ஜானகி. இந்தக் காட்சியைக் கண்டதும், திடுக்கிட்டுப் போனாள். கைகள் நடுங்கிக் காப்பி இருந்த டபரா கீழே விழுந்தது.

கைலாசம் சிரித்துக் கொண்டே, "இது ஒரு நல்ல சகுனம். போ, உள்ளே போய் எனக்கும் சேர்த்து எடுத்துக் கொண்டு வா!" என்றார்.

ஜானகி தம்ளரை வைத்து விட்டு மாமனாரை வணங்கினாள். பிறகு டபரா, தம்ளருடன் உள்ளே சென்றாள். மூர்த்தி தரையில் ஓடிய காப்பியைத் துடைத்து விட்டு மடக்கிச் சுவரில் சாத்தியிருந்த நாற்காலியை எடுத்துப் போட்டான். தகப்பனார் அதில் அமர்ந்ததும் அவர் காலில் விழுந்து வணங்கி எழுந்து பழைய வழக்கம் போல் அவர் பின்புறமாகக் கையைக் கட்டிக்கொண்டு நின்றான். இதற்குள் ஜானகி காப்பி கொண்டு வந்தாள். தகப்பனாரும் பிள்ளையும் சாப்பிட்டார்கள்.

"இங்கே வாடா; இப்படி வா. உட்கார்ந்து கொள்."

மூர்த்தி தயங்கினான். அவர் வற்புறுத்தவே அவருடைய காலடியில் அடக்கமாக உட்கார்ந்தான்.

"சாகிற நிலையில் இருந்த என்னைப் பார்க்க வந்த நீ பாதி வழியில் ஏன் திரும்பி விட்டாய்?"

மூர்த்தி வாய் திறக்கவில்லை.

"'இளையாள் மோகத்தில் கண்ணை இழந்து தடுமாறுகிற கிழவனை, வேண்டாத நான் எதற்காகப் பார்ப்பது? என்னவோ வந்தேன், பிடிக்கவில்லை; போகிறேன்' என்றாயாமே?"

"அப்பா!"

கைலாசம் சிரித்தார். "'இது அபாண்டம்; ரத்தினத்தின் கைச் சரடு' என்கிறாயா?" என்றார்.

"போனால் போகிறான் அப்பா. ஒரு வகையில் அவன் நமக்கு நன்மையே செய்திருக்கிறான்."

"என்ன?"

"அந்த நேரத்தில் திடீரென்று என்னைப் பார்த்தால் உங்களுக்கு என்ன ஆகியிருக்குமோ? அதை எடுத்து விளக்கிச் சொன்னவன் அவன்தானே?"

"போடா அசடு. திடீரென்றாவது? தந்தி கொடுக்கச் சொல்லி, ஸ்டேஷனுக்கு வண்டியையும் அனுப்பிவிட்டு எதிர்பார்த்துக் கொண்டே இருந்த எனக்கு உன்னைக் கண்டதும் அப்படி என்ன ஆகி விடும்?

"அடி நாளிலிருந்து உன்னை இந்தக் குடும்பத்துக்கு வேண்டாதவனாக ஆக்கினவனே அந்தப் பாவிதானடா. முதலில் உன் சிறிய தாயாரின் மனத்தைக் கலைத்து, அவள் மூலம் என் மனசைப் பாழாக்கி, சர்வநாசம் செய்துவிட்டான். ஏன், தெரியுமா? நீ ஒருத் தெரிந்தவன். பண்ணை விவகாரம் முழுவதும் அத்துபடி ஆனவன். உன்னைக் கத்திரித்து விட்டால், நானும் போய்விட்டால், கொள்ளை அடிக்கலாம் அல்லவா? ராமனைப் பதினான்கு ஆண்டுகள் வனவாசத்துக்கு விரட்ட அன்று கைகேயிக்கு மந்திரியாக மந்தரை என்று ஒரு கூனி: இன்று உன்னைப் பத்து ஆண்டுகள் பட்டண வாசத்துக்கு விரட்டி, நீ நாலு குழந்தைகளுக்குப் பாடம் சொல்லித்

தந்து வறுமையில் வாடித் தவிக்கும் படி செய்யப் பண்ணைக் காரியஸ்தன் உருவில் ஒரு ரத்தினம் !''

'' நீ பாதிவழியில் திரும்பி விட்டாய் என்று அவன் வந்து சொன்னதைக் கேட்ட வேகத்தில் அன்றிரவே சொத்து முழுவதையும் நீலாவின் பேருக்கு 'உயில்' எழுதி ரத்தினத்தையும் மேற் பார்வையாளனாக அதில் குறிப்பிட்டு விட்டேன், மூர்த்தி! எல்லாம் சுயார்ஜித மாக இருந்ததால் சுலபமாக அப்படிச் செய்துவிட முடிந்தது. ஆனால், தெய்வம் எதையும் சரியாகவேதானே செய்யும்? டாக்டரின் யோசனைப்படி வைத்தி யத்தை முன்விட்டு ஊரை விட்டுக் கிளம்பினேன். உன் சுந்தரகாண்ட பாராயணம் எனக்கு உயிர்ச் சக்தியை அளித்தது. சுகம் பெற்று ஊர் திரும்பி னேன். முந்தா நாள் அந்திப் பொழு தில் நம் வீட்டு இரண்டாங்கட்டில் உன் சித்திக்கும் ரத்தினத்துக்கும் பலமான சண்டை. நான் ஊத்துக்காடு சென்று திரும்பி வந்து உள்ளே நுழைந்து மறை வில் இருந்தது அவர்களுக்குத் தெரி யாது. உண்மைகள் மள மளவென்று வெளிப்பட்டன. அவ்வளவுதான்; மறு நாளே 'உயி'லை மாற்றி, ரத்தினத்தை வேலையிலிருந்து நீக்கி, உன்னுடைய சித்தியைக் கைம்பெண் போல் ஆக்கி எல்லாம் செய்து விட்டு உன்னிடம் வந்து விட்டேன்.''

''எல்லாம் சரிதான், அப்பா! சித்திக்கு நீங்கள் கொடுமை செய்தது சரியல்ல.''

'' அடா! எனக்கே நீ நீதி சொல்கிறாயா? சொத்து முழுவதையும் அவள் எடுத்துக் கொண்டு....''

'' போனால் போகட்டுமே! உங்கள் ஆசீர்வாதம் எனக்கு எல்லா நன்மை களையும் தரும், அப்பா!''

'' அப்படியானால் சித்தியை மன்னித்து விடலாம் என்று நீ சொல்கிறாய் !''

'' நிச்சயமாக அப்படித்தான் செய்ய வேண்டும்.''

'' சரி! உன்னிடம் இருக்கலாம் என்று வந்தேன். நீ சித்தியிடமே போய்விடு என்கிறாய்.''

'' என்ன அப்பா, என்ன என்னவோ சொல்கிறீர்களே ?''

ஜானகி ஓட்டமாக உள்ளே வந்தாள். கணவனை நோக்கி, ''வாசலில் வந்து பாருங்கள்; சித்தியும் கிரிஜாவும் வராந் தாவில் இருக்கிறார்கள்!'' என்று மகிழ்ச்சி தாங்காமல் கூவினாள், மாமனார் எதிரே இருப்பதையும் மறந்து.

'' என்ன!'' என்று கூவியபடி எழுந்த மூர்த்தி வாசலை நோக்கி ஓடினான்.

நீலா மூர்த்தியைப் பார்த்ததும், முகத்தை மூடிக் கொண்டு விம்மினாள்; கிரிஜாவும் அழத் தொடங்கினாள்.

'' உள்ளே வா, சித்தி !''

'' மன்னித்தேன் என்று நீ சொன்னால் தான் வருவேன்!''

'' ராம ராம ! யாரைப் பார்த்து யார் சொல்கிற வார்த்தை! இம் மட்டும் அப்பா பிழைத்தெழுந்து எல்லாம் நல்ல தாக முடிந்த இந்த நேரத்தில் பழைய நிகழ்ச்சிகளை யெல்லாம் எண்ண லாமா? வா, உள்ளே !''

எல்லாரும் உள்ளே வந்தார்கள்.

'' நான் இன்னும் கொஞ்சம் நாடகம் நடத்த எண்ணினேன். அதற்குள் இந்த ஜானகி கெடுத்து விட்டாள். என்றுமே இவள் ஓர் அவசரக் குடுக்கை !'' என்றார் கைலாசம். அவர் குரலில் மகிழ்ச்சியும் பெருமிதமும் நிறைந்திருப்பதை எல்லா ருமே உணர்ந்தார்கள். அந்தக் குடும் பத்தில் கவிந்திருந்த மூடுபனி அப் போதே விலகி விட்டது.

"உங்களுக்கு இப்பொழுது ஒழிவு தானே, மிஸ் பவானி?"

ஏதோ ஒரு காகிதத்தில் கையெழுத்துப் போட்டுக் கொண்டிருந்த பாஸ்கரன் கேட்டான்.

அவன் அறைக்குள் வேறு ஒரு காரியமாக வந்த பவானி அவனை ஒரு கணம் நிமிர்ந்து பார்த்தாள்.

"நாளையிலிருந்து நான்கு நாட்களுக்கு நம் பள்ளிக்கூடத்துக்கு விடுமுறை தானே? பொங்கலன்று சாப்பாடானதும் இந்தப் பக்கம் வாருங்களேன்! வேலூர் போகும் பஸ்ஸில் சென்றால் இங்கிருந்து எட்டாவது மைலில் கண்ணமங்கலம் என்றொரு ஊர் இருக்கிறது. அங்கே பல்லவர் காலத்துக் குகைக் கோயில்கள் இரண்டும், பழங்காலச் சிற்பங்கள் பலவும் இருக்கின்றன. பார்ப்பதற்கு ரொம்ப நன்றாக இருக்கும்.... பார்த்து விட்டு வரலாம்..."

பவானி பதில் ஏதும் சொல்லாமல் ஒரு கணம் பேசாமடந்தைபோல் நின்றாள்.

"நம் லைப்ரரியில் இருந்து சரித்திரப் புஸ்தகங்கள், பழங்காலச் சிற்பம், சித்திரம் இவைகளைப் பற்றிய நூல்களெல்லாம் அடிக்கடி வாங்கிக் கொண்டு போய்ப் படிக்கிறீர்களே, கண்ணமங்கலத்துச் சிற்பங்களையும் கோயில்களையும் நேரில் பார்க்க உங்களுக்கு விருப்பம் இருக்கலாமோ என்று கேட்டேன். ஒரு சமயம் அவைகளையெல்லாம் நீங்கள் முன்பே பார்த்து விட்டீர்களோ?"

"இல்லை!" அவள் தலையை ஆட்டினாள்.

"அப்படியானால் உங்களுக்கு அன்று வரச் சௌகரியப்படுமோ, இல்லையோ?"

இந்தக் கேள்விக்கு அவள் 'சட்' டென்று பதில் சொல்லவில்லை.

"ஏன், விருப்பமில்லையா?"

"யோசித்துச் சொல்லுகிறேன்."

அவள் அந்த அறையை விட்டு வேகமாகப் போய்விட்டாள்.

இடைவேளை முடிந்து பகல் பள்ளிக்கூடம் தொடங்குவதற்கு அறிகுறியாக, பள்ளிக்கூட மணி ஒலித்தது.

அன்று பகல் முழுவதும் பவானிக்கு எந்த வேலையின் மேலும் கவனம் செல்லவில்லை. பழங்காலச் சிற்பங்கள், சிலைகள் இவைகளைப் பார்ப்பதென்றால் அவளுக்குக் கொள்ளை ஆசைதான். பாஸ்கரன் அந்தப் பள்ளிக்கூடத்துக்குத் தலைமையாசிரியராய் வந்திருப்பவன். சிரிக்கச் சிரிக்கப் பேசும் சுபாவம் உடையவன். அவனுடன் பிரயாணம் செய்வதென்றால் பொழுதுபோவதே தெரியாது. ஆனால் அவளோ மணமாகாத ஒரு கன்னிப் பெண்; அவனும் இப்போது குடும்பம் ஒன்றும் இல்லாமல் தனிக்கட்டையாய் வசிப்பவன். பாஸ்கரனின் குணத்துக்கோ, நடத்தைக்கோ ஒருவித மாசு, மறு கற்பிக்க முடியாது. ஆனால் அவர்கள் இருப்பதோ ஒரு கிராமம். கல்யாணமாகாத கன்னிப் பெண் ஒருத்தியும், தனிக்கட்டையாக வசிக்கும் ஆடவன் ஒருவனும் அந்த ஊரை விட்டுப் பல மைல்களுக்கு அப்பாலுள்ள வேறு ஒரு இடத்துக்கு உல்லாசப் பிரயாணம் போவதென்றால், நாலு பேர் என்ன நினைப்பார்களோ? என்ன சொல்லுவார்களோ? ஏற்கெனவே அவள் வாழ்வில் நடந்த நிகழ்ச்சி வேறு அவள் உள்ளத்தில் நிழலாட்டம் காட்டியது.



பாஸ்கரனோடு அவன் குறிப்பிட்ட இடத்துக்குப் போய் அந்தச் சிற்ப அதிசயங்களைப் பார்க்க வேண்டும் என்ற ஆர்வத்துக்கும், தன்னை மறுபடியும் ஏதாவது அபவாதம் சார்ந்து விடுமோ என்ற பயத்துக்கும், இடையே குழம்பித் தவித்தது அவள் உள்ளம்.

மணி நான்கு. பள்ளிக்கூடம் முடிந்து விட்டது. தன் வகுப்பு ஆஜர் பட்டியலைப் பாஸ்கரனின் அறையில் கொண்டு வைப்பதற்காக மறுபடியும் அந்த அறைக்குள் நுழைந்தாள் பவானி.

"உங்கள் யோசனை முடிந்து விட்டதா? அல்லது நீங்கள் இன்னும் யோசித்துக் கொண்டேதான் இருக்கிறீர்களா?..." என்று சிரித்துக் கொண்டே கேட்டான் பாஸ்கரன்.

"பொங்கலன்று அந்த ஊருக்குப் போய்விட்டு வருவோம்." — இவ்வாறு சொல்லிவிட்டு அவள் முகத்தை ஒரு தரம் ஏறிட்டுப் பார்த்தான் அவன். அதில் மகிழ்ச்சி தாண்டவமாடியது.

"சரியாக இரண்டு மணிக்கு இங்கிருந்து பஸ்ஸில் புறப்பட்டு இரண்டரை மணிக்குக் கண்ணமங்கலம் போய்விடலாம். இரண்டு மணி நேரத்தில் முழுவதும் பார்த்து விடலாம். ஐந்து மணிக்கு அங்கிருந்து நம் ஊருக்குத்திரும்பிவர பஸ் இருக்கிறது. அஸ்தமிப்பதற்குள் வீடு திரும்பி விடலாம்....பொங்கலன்று ஒன்றேமுக்கால் மணிக்கெல்லாம் இங்கு வந்து விடுங்கள். இங்கிருந்தே நாம் புறப்பட்டு விடலாம்" என்றான் பாஸ்கரன்.

'சரி' என்பதற்கு அடையாளமாகத் தன் தலையை ஆட்டி விட்டு அங்கிருந்து நகர்ந்தாள் பவானி.



* * *

பவானியின் கால்கள் வீடு நோக்கி நடந்து கொண்டிருந்தன. ஆனால் உள்ளம் பெரும் சிந்தனையில் ஆழ்ந்திருந்தது.

அந்த ஊர் — பெருங்குன்றம் — பள்ளிக்கூடத்தில் அவள் உபாத்தியாயினி வேலையை ஏற்றுக்கொண்டு அங்கு வந்தபோது, அந்தப் பள்ளிக்கூடத்துக்குத் தலைமையாசிரியராய் இருந்தவர் சாம்பசிவன். அவர் வயது முதிர்ந்தவர். பவானி முதல் நாள் வேலைக்கு வந்தவுடனேயே, "அம்மா! நீ அறியாதவள். நீ தனியாக எந்த வீட்டில் இருப்பதும் அவ்வளவு நல்லதல்ல. இந்த ஊரில் ஒரு வயது முதிர்ந்த ஏழை அம்மாள் இருக்கிறாள். மாதம் இருபதோ, முப்பதோ கொடுத்து விட்டு அந்த அம்மாளுடன் இருந்துவிடு. அந்த வீட்டில் உனக்கென்று ஒரு அறையை ஒழித்துக் கொடுக்கச் சொல்லுகிறேன்" என்று சொல்லி, அன்று சாயங்காலமே, பவானிக்குக் காமாட்சியம்மாள் வீட்டில் தங்குவதற்கு ஏற்பாடும் செய்து கொடுத்து விட்டார். காமாட்சி மிகவும் நல்லவள்; பவானியைத் தன் மகள் போலவே நடத்தி வந்தாள். அவள் மிக்க உலகானுபவம் உடையவள். பழைய காலத்துப் பழக்க வழக்கங்களில் ஊறியவள். அவள் வாய்க்

கொருதரம், "பவானி! நீ ரொம்பச் சிறிசு. இந்த உலகமோ மிகவும் பொல்லாத உலகம். நீ நாலு ஆண்களோடு உத்தியோகம் பார்க்கிறாய். ஆண்களோடு பழகுவது நெருப்போடு பழகுகிறமாதிரி! எப்பொழுதும் நீ ஒரு கட்டுக்குள்ளேயே இருப்பது நல்லது" என்று எச்சரிக்கை செய்துகொண்டே இருப்பவள். அவளைச் சமாளிப்பது எப்படி? தான் பாஸ்கரனுடன் தனியாகக் கண்ணமங்கலம் போகப் போவதை அவளிடம் எப்படிச் சொல்லுவது? பவானிக்குப் புரியவில்லை.

பாஸ்கரன் நல்லவன்தான். ஆனாலும், 'எரியும் நெருப்பில் எந்த நெருப்பு நல்ல நெருப்பு?' என்று சட்டென்று காமாட்சி கேட்டு விடுவாள்.

யோசித்து யோசித்து அவள் ஒரு முடிவுக்கு வந்தாள். உண்மையைச் சொல்லாமல் வேறு ஏதாவது சாக்கை அப்போதைக்குச் சொல்லி விட்டுக் கிளம்பி விடுவதுதான் அந்த முடிவு.

• • •

அன்று பொங்கல் பண்டிகை. பன்னிரண்டு மணிக்கெல்லாம் சாப்பாடு முடிந்து விட்டது. பவானி தன் அறைக்குச்சென்று உடையணிந்துகொண்டாள். தன் அறையிலிருந்து வெளியே வந்த அவளைக் கண்டதும் காமாட்சி ஆச்சரியத்தால் தன் கண்களை அகல விரித்தாள்.

"என்னுடன் டிரெயினிங் படித்த லலிதா என்பவள் கண்ணமங்கலம் பள்ளியிலே உபாத்தியாயினியா யிருக்கிறாள். அன்றைக்கு ஒருநாள் அவள் பஸ்ஸிலே இந்த ஊர் வழியாகப் போகும்போது தற்செயலாக என்னைப் பார்த்தாள். இன்றைக்கு என்னை அங்கே வரச்சொன்னாள். இரண்டு மணி பஸ்ஸிலே போய் விட்டு, ஐந்து மணி பஸ்ஸிலே திரும்பி வந்து விடுகிறேன்" என்றாள்.

"ஜாக்கிரதையாகப் போய் விட்டு, இருட்டுவதற்குள்ளேயே திரும்பி வந்து விடு..." என்றாள் காமாட்சி.

தலையை ஆட்டிவிட்டுக் கிளம்பிச் சென்றாள் பவானி.

பவானியும் பாஸ்கரனும் பஸ் நிற்கும் இடமான சுமைதாங்கியை அடைந்த இரண்டு நிமிஷங்களுக்கெல்லாம் வேலூர் செல்லும் பஸ் வந்து விட்டது. இருவரும் அதில் ஏறினர். இரண்டு பேர்கள் சேர்ந்தாற்போல் அமரக்கூடிய ஒரே ஒரு ஆசனம் மட்டும்தான் காலியாக இருந்தது. வேறு வழியின்றிப் பவானி ஜன்னல் ஓரமாகவும் பாஸ்கரன் அவள் பக்கத்திலுமாக அமர்ந்து கொண்டனர்.

அரைமணி நேரத்தில் பஸ் கண்ணமங்கலத்தை அடைந்தது. இருவரும் பஸ்ஸை விட்டுக் கீழே இறங்கினர்.

அவர்கள் இறங்கிய இடத்திலிருந்தே அவன் முதல் நாள் சொன்ன கோயில்களெல்லாம் கண்களுக்குப் புலப்பட்டன. ஆனால் அவற்றை அடைய வயல்கள் வழியாகக் குறைந்தது அரை மைல் நடந்து செல்ல வேண்டும்.

"மன்னிக்க வேண்டும், பவானி! நான் அன்று கூப்பிட்டபோது முதன் முதலில் நீங்கள் என்னுடன் வருவதற்கு அவ்வளவு தயக்கப்பட்டீர்களே! உங்கள் தயக்கம் எனக்கு என்னவோபோல் ஆகிவிட்டது. என் நல்லெண்ணத்தில் தங்களுக்கு நம்பிக்கை இல்லை போலும்!"

நடந்து கொண்டே பேசிய பாஸ்கரன், தான் சொல்லிக்கொண்டுபோன வாக்கியத்தை முடிக்கவில்லை. அதற்குள் பவானி, "அதெல்லாம் ஒன்றுமில்லை... ஆனால் என்னுடைய வாழ்க்கையில் முன்பு நடந்த ஒரு சம்பவம் ..." என்று கூறிச் சற்று நிறுத்தினாள்.

"உங்களுக்குச் சொல்ல விருப்பமில்லையென்றால் நான் வற்புறுத்தவில்லை ..." என்றான் பாஸ்கரன்.

"அதை யாரிடமாவது சொன்னால் தான் என் மனச்சுமை இறங்கும்போல் இருக்கிறது" என்று கூறி விட்டுப் பவானி ஆரம்பித்தாள்.

• • •

பவானி எஸ். எஸ். எல். ஸி. தேறியதும், உபாத்தியாயினியாவதற்குப் பயிற்சிப் பள்ளியொன்றில் சேர்ந்தாள். அப்பயிற்சியில் அவள் தேறிய சில தினங்களுக்குள்ளேயே அவளுடைய தாய் தந்தையர் காவிரியில் ஏற்பட்ட ஒரு பரிசல் விபத்தில் மாண்டனர். அநாதையாகி விட்ட பவானி தன்னுடைய ஒன்று விட்ட மாமாவிடம்—காஞ்சிபுரத்துக்கு அருகில் ஒரு கிராமத்தில் இருந்தவர் — போய்ச் சேர்ந்தாள். அந்தக் கிராமத்துப் பள்ளிக்கூடத்திலேயே அவளுக்கு உபாத்தியாயினி வேலை கிடைத்தது.

அந்தப் பள்ளிக்கூடத்தில் இரண்டே பேர்கள் தான் உபாத்தியாயர்களாக இருந்தனர். பவானி ஒருத்தி. மற்றொருவர் ராமநாதன்.

ஒரு சமயம் காஞ்சிபுரத்தில் பெரிய பொருட்காட்சி நடந்தது. தங்கள் பள்ளிக்கூடத்தில் படித்து வந்த சிறுவர் சிறுமியரில் நாற்பது பேர்களை அந்தப் பொருட்காட்சிக்கு அழைத்துப் போகவேண்டும் என்று தலைமையாசிரியர் ராமநாதன் விரும்பி


அவ்வளவு சிக்கனம்! ஒரு முறை தேய்த்தால்
கால்கேட் டெண்டல் கிரீம்
85% கிருமிகளை ஒழிக்கிறது
சொத்தையும் மற்றும் துர்நாற்றமும் ஏற்படுத்தும் கிருமிகள் அவை
COLGATE
COLGATE DENTAL CREAM
மிகச் சிறந்த பலனுக்கு எப்பொழுதும் உபயோகியுங்கள்!
கால்கேட் டூத் பிரஷ்
DCG/24 RZ


மிக அழகிய...
அடர்ந்த நீண்ட ஒளியுள்ள கூந்தல்!
பிரதிதினமும் கால்கேட் பெர்பியூம்டு காஸ்டர் ஹேர் ஆயில் தடவி வந்தால், கூந்தலானது அடர்த்தியாகவும், நீளமாகவும் வளருவதுடன் இளமையின் ஒளியுடனும், அற்புத ஜ்வலிப்புடன் விளங்குவதைக் கண்டு நீங்கள் பரவசமடைவீர்கள். அது உங்கள் கூந்தலின் இயற்கை அழகை எடுத்துக்காட்டி எல்லோரையும் பிரமிக்கச்செய்யும்.
மகிழ்ச்சியூட்டும் நறுமணம்—
உங்கள் குடும்பம்
முழுவதும் விரும்புவது!
COLGATE
HAIR OIL
கால்கேட்
பெர்பியூம்டு
காஸ்டர்
ஹேர் ஆயில்
எக்கானமி சைஸை வாங்கி பணத்தை மிச்சப்படுத்துங்கள்!
ECHO/6/2

னார்; பவானியையும் தம்முடன் வரும்படி சொன்னார்.

அன்று சனிக்கிழமை. காலையில் அவர்கள் தங்கள் கிராமத்திலிருந்து ஒரு தனி பஸ்ஸில் கிளம்பினர். அவர்கள் பொருட்காட்சியை அடைந்ததும், சரியான மழை பிடித்துக் கொண்டு விட்டது. நாழிகையாக ஆக மழை அதிகமாகி மாலைக்குள் காஞ்சிக்கு அருகே உள்ள வேகவதி, பாலாறு இரண்டு நதிகளிலும் திடீரென்று வெள்ளம் அதிகமாக வந்து விட்டது. அந்த இரண்டு நதிகளையும் தாண்டித்தான் அவர்கள் கிராமத்துக்குள் போயாக வேண்டும். ஆனால் வெள்ளம் காரணமாகப் பஸ் போக்குவரத்து நின்றுபோய் விட்டது.

அன்று அவர்கள் ஊர் திரும்ப முடியவில்லை. காஞ்சிபுரத்திலேயே ஒரு பள்ளிக்கூடத்தில் தங்கினார்கள். வெள்ளம் வடிய இரண்டு நாட்கள் பிடித்தன.

எனவே, புறப்பட்ட நான்காம் நாள் தான் அவர்கள் ஊர் திரும்பினர்.

சில மாதங்கள் கழித்து—பவானிக்குச் சீக்கிரம் கல்யாணம் செய்துவிட வேண்டும் என்று முயற்சி செய்து கொண்டிருந்த அவள் மாமா — ஒரு நல்ல இடமாகப் பார்த்து வந்தார். பையன் சென்னையில் ஒரு கம்பெனியில் வேலையில் இருந்தான். நன்றாகப் படித்தவன். நல்ல சொத்து இருந்தது. தந்தை இல்லை. தாய் மட்டும் இருந்தாள். பவானிக்கு அந்த இடம் மிகவும் பிடித்திருந்தது. பையனின் சித்தப்பா முதலில் பெண்ணைப் பார்க்க வந்தார். அடுத்த வாரம் பையனை அழைத்துக்கொண்டு வருவதாகச் சொல்லிப் போனார். ஆனால் மறு வாரம் அவர் வரவே இல்லை. சில தினங்கள் கழித்துப் பவானியின் மாமா, பையனின் சித்தப்பாவுக்கு ஒரு கடிதம் எழுதினார். அதற்கு வந்த பதில் அவர்கள் எல்லோரையும் திகைக்க வைத்தது. 'உங்கள் பெண் எங்கள் பையனுக்கு வேண்டாம்' என்று ஒரே வரியில் எழுதியிருந்தார் அவர்.

சில நாட்கள் கழித்துத்தான் அவர் எழுதிய கடிதத்தின் உள் மர்மம் புரிந்தது. அந்த ஊரிலேயே சாரதா என்ற விதவை ஒருத்தி இருந்தாள். அவளுக்கு ஒரு மகன். அவனுக்குப் பவானியைக் கொடுக்கும்படி சாரதா பவானியின் மாமாவைக் கேட்டாள். அவருக்கும் விருப்பமில்லை, பவானிக்கும் விருப்பமில்லை. ஆகவே அவள் பவானியின் மேல் தன் வஞ்சத்தைத் தீர்த்துக் கொள்வதற்காக, அவள் பள்ளி மாணவ மாணவிகளை அழைத்துக்கொண்டு காஞ்சிபுரத்துக்குச் சென்று வெள்ளம் வந்த காரணத்தினால் அங்கு இரண்டு மூன்று



தினங்கள் தங்கி விட்டதை வியாஜமாக வைத்துக் கொண்டு அவனுக்கும் ராம நாதனுக்கும் முடிபோட்டுப் பவானியின் நடத்தைக்கு மாசு கற்பித்து ஒரு வதந்தியைக் கிளப்பி விட்டு விட்டாள். பெண்ணைப் பார்க்க முதலில் வந்த பையனின் சித்தப்பா இந்த வதந்தியை நம்பித் தான் அப்படிக் கடிதம் எழுதி விட்டார்.

இந்தச் செய்தி காதில் விழுந்த பவானியின் நெஞ்சம் விம்மியது. ராமநாதன் மணமானவர். குடும்பத்துடன் வாழ்பவர். தம்மால் ஒரு பெண்ணுக்கு அபவாதம் வந்து விட்டதே என்று அவர் மிகவும் மனம் நொந்து போனார். அவர் அந்த ஊரிலிருந்தே தம்மை வேறு ஒரு ஊருக்கு மாற்றிக் கொண்டு போய் விட்டார். அதன் பின் பவானிக்கு ஓரிரண்டு இடங்கள் வந்தன. ஆனால் அவையும் தட்டிப் போய்விட்டன. நாளாக ஆக, பவானியின் மாமியும் அவளைப் பலவாறு ஏசிக்காண்பிக்க ஆரம்பித்துவிட்டாள். மன நிம்மதியை நாடிப் பவானி அந்த ஊரிலிருந்துஇப்போது இருக்கும்ஊருக்கு மாற்றிக் கொண்டு வந்து விட்டாள்.

* * *

பவானி தன் வரலாற்றை முடித்தாள். நடந்து கொண்டே இருந்த பாஸ்கரன் சட்டென்று நின்றான்.

"பவானி! உன் சோகக் கதை முழுவதையும் கேட்ட நான் உன்னை ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன். சங்கோசப்படாமல் பதில் சொல்ல வேண்டும்."

அவளும் நின்றாள். அவன் என்ன கேட்கப் போகிறான் என்று அவளால் சட்டென்று யூகிக்க முடியவில்லை.

"நான் உன்னை மணக்க விருப்பப்படுகிறேன். உன் மனக் கருத்தை ஒளியாமல் சொல்ல வேண்டும்."

"நீங்களா? உங்களுக்கு ஏற்கனவே மணமாகி..." அவள் முடிக்கவில்லை.

"இல்லை. நான் மணமாகாதவன் தான். அதோடு உனக்கு உண்டான மன வருத்தத்துக்கு ஓரளவு பொறுப்பாளி. அதற்குப் பிராயச்சித்தம் செய்தே தீர வேண்டும்..."

"நீங்கள் சொல்வது ஒன்றும் விளங்கவில்லையே!" —

"முழுவதும் சொன்னால்தானே உனக்கு விஷயம் புரியும். முதன் முதல் எனக்காகத்தான் என் சித்தப்பா உன்னைப் பார்ப்பதற்கு உங்கள் கிராமத்துக்கு வந்தார். அப்போது நான் பி. ஏ. தேறி விட்டு ஒரு கம்பெனியில் வேலையில் இருந்தேன். என் சித்தப்பா உன்னைப் பார்த்துவிட்டு வந்து, ஊரில் உலவும் வதந்தியையும் சொல்லவே, நானும் என் அம்மாவும் உன்னை வேண்டாம் என்று சொல்லி விட்டோம். நான் செய்து வந்த உத்தியோகம் எனக்குப் பிடிக்கவில்லையாதலால், சில மாதங்களுக்குப் பிறகு நான் அதை விட்டு விட்டு பி. டி. வகுப்பில் சேர்ந்து பயிற்சி பெற்று, ஒரு உபாத்தியாயரானேன். அப்போது ஒரு சமயம் நான் ராமநாதனைச் சந்திக்க நேர்ந்தது. அவன் வீட்டில், அவன் உங்கள் ஊரை விட்டு வரும்போது எடுத்த, 'குரூப் போட்டோ'வைப் பார்த்தேன். அந்தப் படத்தில் அவன் உன்னைக் காட்டி, நீ சொன்ன விஷயங்களையெல்லாம் சொல்லி, அநாவசியமாக உத்தமியான உன் பெயரோடு தன் பெயரையும் பிணைத்துக் கிராமத்தார் வீண்அபவாதம் உண்டாக்கி விட்டதாகவும், அதனால் உனக்கு வந்த ஒரு நல்ல வரன் குதிராமல் போய் விட்டதாகவும் சொன்னான். ஆனால் நல்லகாலம் அந்த வரன் நான் தான் என்பது அவனுக்குத் தெரியாது. உன்னைப் பற்றி எழுந்த வதந்தியோடு சம்பந்தப்பட்டவன் என் ஆப்த நண்பன் தான் என்பதை அப்போதுதான் நானும் அறிந்தேன். எனக்குப் பேரதிர்ச்சியாக இருந்தது. பேச்சினிடையே அவன் உன்னைப் பற்றி உருக்கமாகச் சொன்னான்.

புகைப்படத்தில் பார்த்த உன் களை பொருந்திய குறுகுறுப்பான களங்கமற்ற முகம் என்னைக் கவர்ந்தது. தீர விசாரியாமல், திக்கற்ற உன்னை வந்துகூடப் பார்க்காமல், உன் மீது ஒரு களங்கத்தைக் கற்பித்து விட்டதற்காக நான் மிகவும் வருத்தப்பட்டேன்...நான் பிறகு களத்தூரில் உத்தியோகம் ஏற்றுக் கொண்டேன்...நான் களத்தூர் சென்ற ஒரு மாதத்துக்கெல்லாம் என் தாயார் இறந்து விட்டாள். அங்கு ஒரு வருடம் வேலைசெய்து விட்டு, ஒரு மாதத்துக்கு முன் இங்கு மாற்றலாகி வந்தேன். முதல்நாள் இங்கு உன்னைப் பார்த்த பொழுதே எனக்கு ரொம்ப ஆச்சரியமாக இருந்தது. உனக்கு ஒரு சமயம் மணமாகி விட்டதோ என்று சந்தேகப்பட்டேன். விசாரித்ததில் இல்லை என்று தெரிந்தது. சிற்பங்களைப் பார்ப்பது ஒரு காரணம். பேச்சு வாக்கில் உன் மன நிலையை அறிந்து கொள்வது முக்கிய காரணம். அதனால்தான் நான் உன்னை இன்று என்னுடன் வர முடியுமா என்று கூப்பிட்டது...இப்போது உன் பதில்தான் தேவை...என்னை மணக்க உனக்குச் சம்மதமா?"

அவள் பதில் சொல்லவில்லை. வெட்கத்தால் தலையைக் குனிந்து கொண்டாள். ஆனால் அவள் மௌனமே அவள் சம்மதத்தைத் தெரிவித்துவிட்டது.

Printed and Published by R. Ananthanarayanan for the Proprietors Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press, Kilpauk, Madras-10
Managing Editor: T. Sadasivam

லட்சிய பூர்த்தியின் வாயிலிலே


கடந்த அக்டோபரில் ஜாம்ஷெட்பூரிலே ரூ 70 மில்லியன் செலவில் புதிய ப்ளாஸ்ட் ப்வர்னெஸை இயங்கச் செய்தது. உற்பத்திச் சக்தியை ஆண்டொன்றுக்கு இரு மில்லியன் டன்னுக்கவென்று 1955 டிஸம்பரில் டாடா ஸ்டீல் தொடங்கிய விரிவான திட்ட பூர்த்தியின் ஆரம்பமாகும்.

உலகிலுள்ள மிகப் பெரியவைகளில் ஒன்றான இப்புதிய ப்ளாஸ்ட் ப்வர்னெஸ், நாளொன்றுக்கு 1,650 டன் இரும்பு உற்பத்தி செய்யும். இதற்கு முன்னர், ஏழு ஓபன் ஹெர்த் ப்வர்னெஸ்களுள்ள மூன்றாவது ஸ்டீல் மெல்டிங் ஷாப் பூர்த்தியாக்கப் பட்டது. ஆண்டொன்றுக்கு இது மட்டுமே 1.3 மில்லியன் டன் ஸ்டீல் இங்காட்ஸ் உற்பத்தி செய்யும். தவிர, ரூ 100 மில்லியன் செலவில் இரு மில்லியன் டன் பிரைமரி ரோலிங் சக்தி கொண்ட புதிய ப்ளூமிங் மில் இப்பொழுது இயங்கி வருகிறது.

தாதுப் பொருள் சேகரிப்பதிலிருந்து உருக்கு ரோலிங் தயாரிப்பது வரையிலுமுள்ள ஒவ்வொரு நிலையின் இயக்கமும் பூரணமாகி, விரிவான திட்டம் 1958 இறுதியில் பூர்த்தி பெறும். 1955-60 இவ் ஐந்தாண்டுகளில் விரிவான திட்டத்திற்கும், வருடா வருடம் இயந்திரங்களைப் பழுது பார்ப்பதற்கும் புதிய இயந்திரங்கள் அமைப்பதற்குமாக டாடா ஸ்டீலின் முதலீடு ரூ 1,330 மில்லியனாக மதிப்பிடப்பட்டிருக்கிறது. இது, தனியார் தொழில் ஸ்தாபனங்களின் மொத்த முதலீட்டின் ஐந்தில் ஒரு பங்கிற்கு அதிகமானது.

டாடா ஸ்டீல்

இரு மில்லியன் டன் உற்பத்திற்கு



TN 3186

The Tata Iron and Steel Company Limited

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

